டிராஃபிக்
மற்றும் அனைத்து வாகன சட்டப்பிரச்சனைகளுக்கும்
VINOTHKUMAR
LICENSED PARALEGAL
647.667.6034
WWW.TRAFFICKUMAR.CA
TK LEGALS

28 வது ஆண்டில்
கனடாவின் மூத்த தமிழ் இதழ்
# விளம்பரம்
VLAMBARAM™
Tel: 416-282-8059
Fax: 416-286-0334
email: vlambaram@sympatico.ca
info@vlambaram.com
web: vlambaram.com
tamilvanakkam.com

துரித பணமாற்றுச் சேவை
மு. காசிப்பிள்ளை சக புத்திரர்கள்
3228 Eglinton Ave. E. Suite #3
(Eglinton & Markham)
Scarborough ON M1J 2H6
Tel: 416-267-8221

நதி: 28 | பாலம்: 06 | சமூக முன்னேற்றப்பத்திரிகை | மாதமிருமுறை | இலவசம் | MARCH 15, 2018

# பழமைவாதக் கட்சியின் புதிய தலைவர் டக்லஸ் ஃபோர்ட்

ஒன்ராரியோ மாகாண பழமைவாதக் கட்சியின் தலைவராக 2018 மார்ச் 10இல் டக்லஸ் ஃபோர்ட் தெரிவு செய்யப்பட்டுள்ளார். 53 வயதான டக்லஸ் ஃபோர்ட் 2010இல் இருந்து 2014வரை ரொறன்ரோ மாநகரசபை உறுப்பினராக இருந்தார். இவரது தகப்பனான டக்லஸ் ஃபோர்ட்டும் ஒன்ராரியோ மாகாண நாடாளுமன்ற உறுப்பினராக இருந்தவர்.



தகப்பனான டக்லஸ் ஃபோர்ட் பழமைவாதக் கட்சியின் சார்பிலேயே 1995இல் நாடாளுமன்ற உறுப்பினராக ஒன்ராரியோ நாடாளுமன்றத்திற்குத் தெரிவு செய்யப்பட்டவர். டக் ஃபோர்ட் ரொறன்ரோ மாநகர சபை உறுப்பினராக இருந்த காலப்பகுதியில் அவரின் தம்பியான காலம்சென்ற றொப் ஃபோர்ட் ரொறன்ரோ மாநகர முதல்வராக பதவி வகித்தார்.

ஒன்ராரியோ மாகாண பழமைவாதக் கட்சியின் தலைவராக இருந்த பற்றிக் பிறவுண் பாலியல் ரீதியில் இரு பெண்களுடன் தவறாக நடந்தார் என்ற குற்றச்சாட்டை CTV தொலைக்காட்சி ஊடகம் முன்வைத்ததைத் தொடர்ந்து 2018 ஜனவரி 25இல் அவர் தனது கட்சித்தலைமைப் பதவியில் இருந்து விலகினார். இதைத் தொடர்ந்து கட்சியின் இடைக்காலத் தலைவராக Vic Fedeli தெரிவு செய்யப்பட்டார். ஒன்ராரியோ பழமைவாதக்கட்சியின் நிர்வாக சபை 2018 மார்ச் 02இல் இருந்து 08ஆம் திகதிவரை தேர்தலை நடத்தி 2018 மார்ச் 10இல் தமது கட்சிக்கான புதிய தலைவரைத் தெரிவு செய்வது எனத் தீர்மானித்தது.

பழமைவாதக்கட்சியின் தலைவர் பதவிக்கு வேட்பாளராக டக் ஃபோர்ட் (Doug Ford), கிறிஸ்டின் எலியட் (Christien Elliott), கரோலின் மல்ரோனி (Caroline Mulroney) மற்றும் தானியா கிறனிக் அலென் (Tanya Granic Allen) ஆகியோர் போட்டியிட்டனர். பழமைவாதக் கட்சியின் முன்னாள் தலைவரான பற்றிக் பிறவுண் தன்மேல் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள் தவறு எனக் கூறி மீண்டும் தலைவர் பதவிக்குப் போட்டியிட முன்வந்தார். பின்னர் அவர் அம்முடிவில் இருந்து பின்வாங்கிவிட்டார்.

பழமைவாதக் கட்சியின் உறுப்பினர்களின் எண்ணிக்கையில் தவறுகள் இருந்தன எனவும், அவற்றையும் மற்றும் கட்சிக்குள் பல சீர்சிருத்தங்களையும் செய்ய வேண்டும் என்றும் கூறிய கட்சியின் இடைக்காலத் தலைவர் Vic Fedeli நிரந்தர தலைவர் பதவிக்குத் தான் போட்டியிடமாட்டேன் என்று தெரிவித்தார்.

பழமைவாதக் கட்சிக்கு ஒரு நிரந்தர தலைவர் இல்லாத நிலையிலும் ஒன்ராரியோ மாகாணத்தில் மக்களிடையே நடைபெற்ற கருத்துக் கணிப்பில் ஒன்ராரியோ மாகாணத்தில் அடுத்த அரசை அமைக்கும் சந்தர்ப்பம் பழமைவாதக் கட்சிக்கே இருப்பதாகக்

(தொடர்ச்சி 10 ஆம் பக்கம்...)

Raj A. Rasaratnam
Cell: 416-726-8055
Bus: 416-321-6969
HomeLife/GTA Realty Inc

Lexus of Richmond Hill
LEXUS
குமார் ஜெகசோதி
Tel. 905.883.8812
Cell: 416.451.0565
Kumar Jegasothy
Sales Consultant
11552 Yonge Street
Richmond Hill, ON L4E 3N7
www.lexusrh.com

Your Real Estate Investment Consultant
Dedicated for your success
OPPORTUNITIES ARE WAITING...
CALL ME FOR A FREE CONSULTATION
BUY SELL INVEST
DIVAGARAN MANIKKAVASAGAR
416.888.7877
www.divhomes.com

TD Canada Trust
Supen Subramaniyam
(Manager, Residential Mortgage)
ADVICE WHEREVER WHENEVER
416-844-8692
888-809-9154

BUY & SELL THROUGH ME & SEE THE DIFFERENCE!
Kannan Nadarajah
416-889-1083
kannanhomes143@yahoo.com
HomeLife/Future Realty Inc.

DENTAL OFFICE
இப்பொழுது 2 இடங்களில்
Dr.Iru Vijayanathan,
BDS, FAGD, MFDS, RCPS(Glasg.)
DENTAL SURGEON
✓Wisdom Tooth Extraction.
✓Root Canal.
✓Gum Treatment.
✓Tooth Filling.
✓Dental Implant.
✓Dentures.
3150 Eglinton Ave. East, Unit #5
Markham & Eglinton
Tel: 416-264-3232
3351 Markham Road., #129
Markham & Steeles
Tel: 416-609-2022

Sothihomes
Sothi Anandakumar
CIPS
iList Globally
Buy-Sell-Invest
Cell: (647) 408-1859 USA (609) 423-6907
www.sothihomes.guru

Royal Kitchen
DESIGN. MANUFACTURE. INSTALL
Custom Cabinets & Bath. All kinds of Countertops
Showroom: 120 Whitmore Road, Unit 3&4
Vaughan, ON. L4L 5Z1
www.royalkitchen.ca
Tharma Tharmalingam
905-264-0090 | 416-728-6510

MORTGAGE
For all your Mortgage
We Deal with all banks
Any situations
NESAN 416-908-5656
Toll Free: 1-844-878-2721 Fax: 647-351-3099
mortgage@nesan.ca www.nesan.ca
1585 Markham Rd, Unit #407A,
Toronto, M1B 2W1
SUBRA MORTGAGES INC.

JENA GULASINGHAM
Sales Representative
416.702.2030
jenahomelife@gmail.com
This Special Offer Valid Only This Year
Buy a Home with Me & Listing Commission FREE FREE FREE
HomeLife/Future Realty Inc.


$889,000
Detached Home in Oshawa. One Year New, Almost 3000 SF BR:4 WR:4 Financing Available with 10% Down
Coming Soon to MLS
Detached 2-Storey BR:4 WR:3 Excellent Neighborhood Financing Available
$359,900
Under Construction. Yonge & 16 th Ave. Move in 6 months BR: 1 WR: 1 Parking/Locker
Sold
118 Silverwood Cré. Ajax Monarch Built Detached 2-storey BR:3 WR:4 Finished Basement
$769,000
End Unit Townhouse in Markham BR:3+1 WR: 3 Finished Basement
$129,900
Residential Vacant Land in Town of Lindsay. Almost .65 Acres. Municipal Water/Sewer, Build Your Dream Home
Power of Sale Properties
Oshawa: Detached Side Split BR:3+1 WR:3 $584,000
Whitby: Detached 2 Storey BR:4 WR:3 Fin. Bsmt $659,900
Richmond Hill: Detached 2 Storey BR:4 WR:3 $929,900
Brampton: Detached 2 Storey BR:4+2 WR:5 Fin. Bsmt. 3Years Old $1,010,000
Renovators' Specials
Scarborough: Det.Bungalow BR:3+2 WR:2 $629,900
Vaughan: Detached 2 Storey BR:3 WR:3 $829,000
FREE Reports for Buyers and Sellers
Visit www.soldbythas.com
Sellers: 27 Quick & Easy Fixups Before you Sell
Costly Homesellers Mistakes
How to Sell your Home that was Expired
Buyers: How to Save Thousands When you buy
Tips for First Time Home buyers
......I recently listed a property in GTA and sold within 2 weeks. As per Seller & MLS, it was previously listed by another agent, in the market for 156 days, didn't sell, and the property was in vacant position...... Are you in the same boat? Call me today and SAVE THOUSANDS.
15 Years of Business Experience
Your Home Sold GUARANTEED Or I'll Buy It!
Top Negotiator!
Thas Thirunavukkarasu
Sales Representative Dip-in-Eng(Hons)
416-388-4333
thasremax@gmail.com
3-1286 Kennedy Rd. Toronto, Ont.
www.soldbythas.com
FREE Quick OVER THE PHONE Home Evaluation
RE/MAX
RE/MAX ACE REALTY INC., BROKERAGE


குளிர் காலம் ஆரம்பமாகிவிட்டது...
Unique HVAC Inc.
Heating & Cooling
50% கழிவு விலையில் உங்களது Heating உபகரணங்களின் தரத்தையும் பாதுகாப்பையும் உறுதிப்படுத்த ஒரு அரிய சந்தர்ப்பம்!!!
ONLY!!! $39.99
WATER TANK Six Months Free Rental
RENTAL Starting From: $ 17.99 per month
WHAT WE DO:
Δ BBQ Gas Line.
Δ Fire Place.
Δ Humidifier.
Δ Air Cleaners.
Δ Air Conditioners.
Δ Furnaces.
Δ Natural Gas Dryer.
Δ Electrical Services.
Δ Water Heaters - Tank/ Tankless.
Purchase an Air Conditioner and Furnace together SAVE BIG!!!
உங்களது உபகரணங்கள் ஒன்ராரியோ மாகாண அரசால் அங்கீகரிக்கப்பட்ட தகுதிவாய்ந்த தொழில் நுட்ப வல்லுனர்களால் சரிபார்க்கப்பட்டதா?
COMBO SPECIAL Starting at: $3100
FURNACE BY ITSELF Starting at: $2199
தொடர்புகளுக்கு:
Vino 647.989.4217
Kapilan 647.981.5224
Thano 416.543.5125
www.uniquehvacinc.com
uniquehvac.inc@gmail.com
www.facebook.com/uniquehvacinc

# சிறுபான்மை மக்களை அச்சுறுத்தும் கலவரங்கள்!

**- விகிர்தன் -**

கண்டி - திகன பகுதியில் இடம்பெற்ற கலவரத்தை, அண்மைய காலங்களில் இடம்பெற்ற இன, சமூகரீதியான மோதல்களில் மிக உச்சமானதாகவே கருத முடிகின்றது. நாட்டில் வாழும் சிறுபான்மை சமூகங்கள் மத்தியில் இக்கலவரமானது பெரும் அச்சத்தையும் நம்பிக்கையீனத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

அம்பாறையில் முஸ்லிம் சமூகத்தவர் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்கள் இடம்பெற்று ஒரு வாரம் கடந்த நிலையில் கண்டியில் மோசமான கலவரம் ஒன்று நடைபெற்றுள்ளது.

கடந்த பெப்ரவரி மாதம் 26ஆம் திகதி இரவு அம்பாறையில் முஸ்லிம் உணவகம் ஒன்றில் அதன் உரிமையாளருடன் சில சிங்கள இளைஞர்கள் வாய்த்தர்க்கத்தில் ஈடுபட்ட நிலையில், அங்கு வந்தடைந்த சிங்கள இளைஞர் கும்பல் ஒன்று குறித்த கடை மீது தாக்குதலை மேற்கொண்டது. தொடர்ந்து முஸ்லிம் பள்ளிவாசல் ஒன்றின் மீதும், முஸ்லிம்களுக்கு சொந்தமான வணிக நிலையங்கள் மீதும் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன. சுமார் 16இற்கும் மேற்பட்ட முஸ்லிம் வணிக நிலையங்கள் தாக்குதலுக்குள்ளானதாக தெரிவிக்கப்பட்டது. உடனடியாக மேற்கொள்ளப்பட்ட பாதுகாப்பு நடவடிக்கைகள் மற்றும் சமூக, மதத் தலைவர்களின் முயற்சியின் காரணமாக கலவரம் கட்டுக்குள் கொண்டுவரப்பட்டது. இச்சம்பவம் இடம்பெற்று ஒரு வார காலத்திற்குள் கண்டியில் கலவரம் ஏற்பட்டது. அதனை உடனடியாக தடுத்து நிறுத்தக்கூடியதான பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை என்ற குற்றச்சாட்டு அரசாங்கத்தின் மீது விழுந்துள்ளது.

பெப்ரவரி 22ஆம் திகதி சிங்களப் பொது மகன் ஒருவர் சில முஸ்லிம் நபர்களால் தாக்கப்பட்டார். தாக்கப்பட்டு ஒரு வாரத்தின் பின்னரே அவர் இறந்துள்ளார். அதனைத் தொடர்ந்தே முஸ்லிம்களின் சொத்துக்கள் மீதான தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இத்தாக்குதல் சம்பவம் குறித்து சற்று விரிவாக பார்ப்போம்.



கண்டி நகரை அண்மித்த ஒரு இடமான திகன பகுதியில் இடம்பெற்ற ஒரு கொலைச் சம்பவமே இந்தக் கலவரம் உருவாகக் காரணம் என்று கூறப்படுகின்றது. ஆனால், இது திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்பட்ட ஒன்று எனவும் விமர்சிக்கப்படுகின்றது.

பெப்ரவரி 22ஆம் திகதி நள்ளிரவு லொறி சாரதியான குறித்த சிங்கள இளைஞர் லொறியை பின்நோக்கி நகர்த்தும் போது பின்னால் நிறுத்தப்பட்டிருந்த முச்சக்கர வண்டியின் பக்கவாட்டுக் கண்ணாடி உடைந்துள்ளது. அந்த முச்சக்கர வண்டிக்குள் மதுபானம் அருந்திக்கொண்டிருந்த முச்சக்கரவண்டியின் முஸ்லிம் உரிமையாளரும் அவரின் நண்பர்களும் இதனால் ஆத்திரமுற்றுள்ளனர். விடிந்தவுடன் கண்ணாடி வாங்கித் தருவதாகக் கூறிய லொறி சாரதி ஆயிரம் ரூபா பணத்தையும் அவர்களிடம் கொடுத்துவிட்டுச் சென்றிருக்கின்றார். ஆனாலும் அவரைத் துரத்திச் சென்று ஒரு எரிபொருள் நிலையத்தில் வைத்துப்பிடித்து தாக்குதல் நடத்தியுள்ளனர். இதனால் காயங்களுக்குள்ளான சாரதி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த நிலையில் கடந்த மார்ச் மாதம் 3ஆம் திகதி உயிரிழந்தார்.

மரணித்த சிங்கள சாரதியின் இறுதிக் கிரியைகள் நடைபெற்ற தினத்தன்று அப்பிரதேசத்தில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருந்தது. பொலிஸாரின் அறிவுறுத்தலுக்கு அமைய திகன, தெல்தெனிய பகுதி முஸ்லிம்கள் தங்களது கடைகளை மூடியதுடன் வீடுகளுக்குள்ளேயே முடங்கியிருந்தனர். அந்த நேரத்தில் ஊர்வலம் வருவது போல் வந்த காடையர்கள், முஸ்லிம் வர்த்தக நிலையங்கள்மீது தாக்குதல் நடத்தினர். முஸ்லிம்களின் சொத்துகளுக்கு தீவைத்தனர். வீடு ஒன்றிற்குள் தீயில் அகப்பட்டு முஸ்லிம் இளைஞன் ஒருவர் உயிரிழந்த துயரச் சம்பவமும் இதன்போது இடம்பெற்றது.

திகன பல்லேகல பகுதியை சேர்ந்த 22

(தொடர்ச்சி 14 ஆம் பக்கம்...)



# நாமும் நமது இல்லமும் - 507



**ராஜா மகேந்திரன்**, P.Eng.
raja@mahendran.ca
416.315.9397
416.321.6969

கனடாவின் முக்கிய நகரங்களான: வன்கூவர், ரொறன்ரோ, மொன்றியல், ஒட்டாவா மற்றும் கல்ஹரி ஆகிய நகரங்களை சுற்றியே ஆதன வியாபாரம் அதிகமாகப் பேசப்படுகின்றன. குறிப்பாக வன்கூவர், ரொறன்ரோ போன்ற நகரங்களில் ஆதன வியாபாரம் அண்மைக்காலமாக பேசு பொருளாகக் காணப்படுகின்றது. இன்றைய கால கட்டத்தில் (மார்ச் 2018) வன்கூவர் நகரம் ஆதன வியாபாரத்தில் விலையிலும், வியா பாரத்திலும் மேல்நோக்கிய திசையிலே செல்வதனைக் காணலாம். அண்மையில் பிரிட்டிஷ் கொலம்பியாவில் (British Columbia) புதிதாக ஆட்சி அமைத்திருக்கும் NDP அரசிற்கு இது ஒரு சங்கடமான நிலையில் இருக்கின்றது. உள்ளூர் மக்கள் ஆதனத்தில் முதலிடுவது என்பது மிகவும் நெருக்கடியாக இருப்பதனைக் காணலாம்.

கடந்த வருடம் (2017), வன்கூவரில் கொண்டு வரப்பட்ட வெளிநாட்டவர்கள் மீதான 15% நிலமாற்று வரி (Land Tranfer Tax) ஆரம் பத்தில் ஆதன வியாபாரத்தை மந்த நிலைக்குக் கொண்டு சென்றது. இந்நிலைமை சில மாதங்கள் மட்டுமே. மீண்டும் ஆதன வியாபாரம் சூடு பிடிக்கத் தொடங்கியது. இதனைக் கட்டுப்படுத்த வேண்டிய நிலையில் இன்றைய NDP அரசு முயற்சி எடுத்தது. இதன் முதல் கட்டமாக ஆதனம் கொள்வனவு செய்வதில் புதிய திட்டங்களை பெப்ரவரி 2018இல் கொண்டு வந்தது. இதனை 30 points Housing plan என்று அழைக்கப்படுகின்றது. முக்கியமாக ஏற்கனவே வெளிநாட்டவர்களை கொள்வனவு செய்யும் ஆதனத்திற்கு 15% நில மாற்றுவரி இருந்தது. இதனை பெப்ரவரி 2018இலிருந்து 20%ஆக அதிகரித்துள்ளது. இதனைவிட முக்கியமானதாகக் கருதப்படுவது புதிய சோலைவரி திட்டம் (Property



tax plan). இந்தப் புதிய வரி, வெளிநாட்டவர்களுக்கும் கனடாவின் மற்றைய மாகாணங்களிலிருந்தும் வன்கூவர் பெரும்பாகத்தில் ஆதனம் கொள்வனவு செய்பவர்களுக்கும் பொருந்தும். மேலும் 3 மில்லியனிற்கு மேலான ஆதனங்களுக்கு மேலதிக வரியை வசூலிப்பதாகவும் தெரியவருகின்றது. இந்தத் திட்டத் திலிருந்து நாம் அறியக்கூடியது, இன்றைய காலகட்டத்தில் ரொறன்ரோவிலும் அதன் பெரும்பாகத்திலும் அடுக்குமாடி மனைகளின் விலையில் ஏற்படும் விலை அதிகரிப்பை கட்டுப்படுத்த இதேமாதிரியான திட்டங் கள் நடைமுறைப் படுத்தலாம்.(?) கடந்த வருடம் முதல்தடவையாக வன்கூவரில் வெளிநாட்டவர்கள் மீதான வரி கொண்டு வந்ததனைத் தொடர்ந்து ரொறன்ரோவிலும் லிபரல் அரசு 15% வரியை நடைமுறைப்படுத்தியது.

இன்றைய காலகட்டத்தில் ரொறன்ரோவிலும் அதனைச் சுற்றிய பகுதியிலும் விலையிலும் வியாபாரத்திலும் ஒருவித மந்தநிலை காணப்படுவதால் இன்றைய திட்டம் உடனடியாக கொண்டுவரப்படும் என்று எதிர்பார்க்க முடியாது. அத்துடன் யூன் 07, 2018இல் ஒன்ராறியோ மாகாண அரசின் தேர்தலும் நடைபெற இருக்கின்றது. மூன்று மாதம் என்ற குறுகிய காலமே தேர்தலுக்கு இருப்பதால், புதிய திட்டம் எதனையும் உடனடியாக ஆட்சியில் இருக்கும் லிபரல் அரசு செய்வதற்கு முற்படாது எனக் கொள்ளலாம். ஆனால் இலவசங்கள் கொடுக்கத் தயங்காது.

உலகமயமாக்கலினால் (Globalization) வசதி படைத்தவர்கள் தமது செல்வங்களை பாதுகாப்பான நாடுகளில் முதலிடுவது வழக்கமாகி விட்டது. குறிப்பாக அவுஸ்திரேலியா, நியூசிலாந்து, ஹொங்கொங் மற்றும் கனடா போன்ற நாடுகள் இதில் முன்னணி வகிக்கின்றன. ஏற்கனவே இந்நாடுகளில் சில வெளிநாட்டவர்கள் ஆதனம் வாங்குவதற்கு இறுக்கமான நிலையை உருவாக்கியுள்ளது அந்நாடுகள். ரொறன்ரோ, வன்கூவரில் ஆதனவிலை எதிர் காலத்தில் கட்டுக்கடங்காமல் போகும்போது கனடாவும் இவ்வாறான திட்டங்களைக் கொண்டுவராது என்பதற்கு நியாயம் இல்லை எனக் கொள்ளலாம்.

உலகில் அதிகூடிய ஆதன விலையான நகரங்களில் வன்கூவர் மூன்றாவது இடத்தில் உள்ளது. ஹொங்கொங் கடந்த எட்டு ஆண்டுகளாக முதல் இடத்தில் உள்ளது.



# மோட்கேஜ் & லைன் ஒப் கிரெடிட்

- பவர் ஒப் சேல் பிரச்சினையிலிருந்து விடுபட ,
- நல்ல ரேட்ல மோட்கேஜ் பெற்றுக்கொள்ள
- லைன் ஒப் கிரெடிட் எடுக்க
- ரீபைனான்ஸ் செய்ய
- 2வது, 3வது மோட்கேஜ் பெற்றுக்கொள்ள
- கொன்சுமர் ப்ரொபோசல், பாங்க்ரப்சி நிலையில மோட்கேஜ் பெற்றுக்கொள்ள
- எல்லா கடனையும் ஒரே பேமென்டாக்க





## மற்றும் உங்கள் அனைத்து விதமான மோட்கேஜ், ரியல் எஸ்டேட் தேவைகளுக்கும்...

Win Up To
**$100,000**
Everyone Who Funds A Mortgage With US Ask How !
*See contest rules at www.mortgagealliance.com/JeyRasathurai/contest.asp

"மோட்கேஜ் கிளினிக்"

உங்களுக்கு கைகொடுக்க காத்திருக்கிறது.





**வோக் இன்**

**சனி 9.00 - 5.00 மணிவரை**

**416-613-2788 / 416-816-9011**

திங்கள்—வெள்ளி (call for an appointment)

எமது முகவரி
**1504 Markham Rd, Toronto, ON, M1B 2V9**
(Markham & HWY 401)

**ஜெ(Jey) இராசதுரை** MBA, BBA (Hon), AMP
Team Leader / Mortgage Agent / Real Estate Broker
FSCO Lic # M 09001428

**Cell : 416-624-4843**

MORTGAGE ALLIANCE
RIGHTBROKER = RIGHTMORTGAGE
Lic # 10530

RIGHT AT HOME REALTY INC. BROKERAGE
#1 Brokerage in Toronto*

Corporate Office : 2006 Sheppard Ave E, Suite 200, Toronto, ON, M2J 5B4 Toll Free : 1-877-366-3487 Brokerage Office : 112–895, Don Mills Rd, Toronto, ON, M3C 1W3 Office Phone : 416-391-3232




# சகல தீர்வுகளுக்கும் சர்வதேச பொறிமுறையினையே வலியுறுத்த வேண்டும்!

- ஆதித்தன் -

காணாமலாக்கப்பட்டோர் விடயத்தில் இலங்கை அரசாங்கம் எந்தவொரு தீர்வினையும் வழங்கப் போவதில்லை என்பதில், உறுதியானதொரு நிலைப்பாட்டுக்கு நீண்ட காலமாக போராட்டத்தில் ஈடுபட்டுவரும் காணாமலாக்கப்பட்டோரின் உறவினர்கள் வந்துள்ளனர். இந்த விவகாரம் தொடர்பில் இலங்கை அரசாங்கத்தின் நடவடிக்கைகள் வெறும் கண்துடைப்பாகவும், ஏமாற்றும் முயற்சியாகவுமே நடைபெற்றுக்கொண்டிருப்பதாக அவர்கள் தெரிவிக்கின்றனர்.

தற்போது ஜெனிவாவில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் ஐக்கிய நாடுகள் சபையின் 37ஆவது கூட்டத்தொடரில் இந்த விவகாரம் தொடர்பில் இலங்கை அரசாங்கத்திற்கு அழுத்தம் கொடுக்கும் விதமாக தமிழ் பிரதிநிதிகள் செயற்பட வேண்டும் என அவர்கள் எதிர்பார்க்கின்றனர். தமிழ் பிரதிநிதிகள் ஜெனிவா பயணமாகியுள்ள நிலையில், இது குறித்து அவர்களிடம் வலியுறுத்தப்பட்டுள்ளது.

கடந்த 9ஆம் திகதி வெள்ளிக்கிழமை வட மாகாண அமைச்சர் அனந்தி சசிதரனை சந்தித்த காணாமலாக்கப்பட்டோரின் உறவினர்கள் அவரிடம் இது குறித்து நேரில் வலியுறுத்தியுள்ளனர். தாங்கள் இலங்கை அரசாங்கத்தின் நடவடிக்கைகளில் முழு வதுமாக நம்பிக்கை இழந்து விட்டதாகவும், இனிமேல் சர்வதேசத்தின் முடிவையே தாங்கள் எதிர்பார்ப்பதாகவும் அவர்கள் அந்த சந்திப்பில் தெரிவித்தனர்.

எனவே, காணாமலாக்கப்பட்டோர் தொடர்பில் சர்வதேச தலையீட்டையே கோருமாறு அவர்கள் அனந்தியிடம் கேட்டுக்கொண்டனர். ஜெனீவா மனித உரிமைகள் பேரவையின் கூட்டத்தொடரில் அமைச்சர் அனந்தி சசிதரனும் பங்கேற்கும் நிலையில் இந்த கோரிக்கையை அவர்கள் விடுத்துள்ளனர்.

அமைச்சர் அனந்தி சசிதரனின் அலுவலகத்திற்கு வருகை தந்திருந்த இவர்கள் காணாமலாக்கப்பட்டோர் விடயத்தில் இலங்கை அரசின் நடவடிக்கைகள் காலத்தை இழுத்தடித்து ஏமாற்றும் வகையிலேயே உள்ளது எனவும், போர் முடிவடைந்து எட்டு ஆண்டுகள் கடந்துவிட்ட போதிலும் இதுவரை இவ்விடயத்தில் ஆக்கபூர்வமான நடவடிக்கை எதுவுமே இலங்கை அரசாங்கத்தினால் மேற்டிகொள்ளப்பட வில்லை என்பதையும் சுட்டிக்காட்டினர்.

இனியும் இலங்கை அரசாங்கத்தை நம்பிக் கொண்டிருப்பதில் பிரயோசனமில்லை எனவும், இவ்விடயத்தில் சர்வதேசத்தின் நேரடித் தலையீடு ஒன்றே உரிய நீதியைப் பெற்றுத்தரும் என்று தாங்கள் நம்புவதாகவும் அவர்கள் குறிப்பிட்டனர்.

தமிழ் மக்களால் தெரிவுசெய்யப்பட்டுள்ள பிரதிநிதிகளாக பலர் ஜெனிவா செல்கின்ற போதும், காணாமலாக்கப்பட்டோரது உறவுகளின் பிரதிநிதியாக ஜெனிவாவில் இவ் விடயத்தை அழுத்திக் கூறுமாறு அனந்தியிடம் அவர்கள் வலியுறுத்தியுள்ளனர். நடைபெற்றுக் கொண்டிருக்கும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் அமர்வில் கலந்துகொள்வதற்காக வடக்கின் அமைச்சர் அனந்தி சசிதரன் 11ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை ஜெனிவா புறப்பட்டுச் சென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. மேலும் தமிழ் கட்சிகளின் தலைவர்கள், பிரதிநிதிகளும் இக்கூட்டத் தொடரில் கலந்துகொள்ள ஜெனிவா சென்றுள்ளனர்.

இம்முறை நடைபெறும் இக்கூட்டத் தொடரில் இலங்கை விவகாரம் தொடர்பில் மனித உரிமைகள் ஆணையாளர் செய்ட் அல்ஹுசென் கடும் அழுத்தங்களை பிரயோகிப்பார் என்றே எதிர்பார்க்கப்படுகின்றது.

கடந்த 2015ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட தீர்மானம், மீண்டும் 2017ஆம் ஆண்டு இரண்டு வருட கால நீடிப்பிற்கு உட்பட்டது. கடந்த ஒரு வருட காலத்தில் இலங்கை அரசாங்கத்தினால் எந்தெந்த விடயங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன என்பது குறித்து இந்தக் கூட்டத் தொடரில் ஆராயப்படவுள்ளது.

குறிப்பாக, எதிர்வரும் மாதம் 16ஆம் திகதி பூகோள காலக்கிரம மீளாய்வு விவாதம் நடைபெறவுள்ள நிலையில் 21ஆம் திகதி இலங்கை குறித்த பிரதான விவாதம் இடம் பெறவுள்ளது. இதேவேளை, கடந்த 9ஆம் திகதி வெள்ளிக்கிழமை ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர் அரச சார்பற்ற அமைப்புக்களின் பிரதிநிதிகளை சந்தித்து சில கருத்துக்களை தெரிவித்துள்ளார். இலங்கை விவகாரத்தில் பாதிக்கப்பட்ட மக்களின் பக்கம் தாம் நிற்பதாகவும், இயன்றவரை நீதியைப் பெற்றுக்கொடுப்பதற்குரிய ஆக்கபூர்வமான விடயங்களை மேற்கொண்டு வருவதாகவும் ஆணையாளர் தெரிவித்துள்ளார். இந்த சந்திப்பில் கலந்துகொண்டிருந்த தமிழர் தரப்பு பிரதிநிதிகளில் ஒருவர் கேட்ட கேள்வி ஒன்றிற்கு பதில் அளிக்கும்போதே ஆணையாளர் இவ்வாறு தெரிவித்துள்ளார். இந்த சந்திப்பில் காணாமலாக்கப்பட்டோரின் உறவுகளுக்காகப் போராடும் தாய்மார் சிலரும் கலந்து கொண்டிருந்தனர். இதில் கலந்து கொண்ட வட மாகாணசபை உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் பாதிக்கப்பட்ட மக்களின் சார்பில் மனுவொன்றினை ஆணை யாளரிடம் கையளித்தார். இச்சந்தர்ப்பத்தில் ஐ.நாவின் முன்னாள் மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம் பிள்ளை தெரிவித் துள்ள கருத்துக்களும் கவனத்திற் கொள்ளத்தக்கது.




புதிய அரசாங்கம் ஐக்கிய நாடுகள் சபைக்கு வழங்கிய உறுதிமொழிகளை முழுமையாக நிறைவேற்றும் என்ற நம்பிக்கை இருந்தது. ஆனால், இலங்கை அரசாங்கத்தின் தற்போதைய செயற்பாடுகள் இந்த நம்பிக்கையை குறையச் செய்துள்ளது என அவர் தெரிவித்துள்ளார். ஐக்கிய நாடுகளுக்கு வழங்கிய உறுதிமொழிகளை நிறைவேற்றாமல் இலங்கையால் நம்பிக்கையை கட்டி யெழுப்ப முடியாது என்றும் நவநீதம்பிள்ளை குறிப்பிட்டுள்ளார். அண்மையில் கண்டியில் நடைபெற்ற கலவரம் தொடர் பிலும் அவர் தனது கண்டனத்தை வெளியிட்டுள்ளார்.

இதேவேளை, இலங்கையில் முஸ்லிம்களுக்கு எதிராக கட்டவிழ்த்துவிடப்பட்டுள்ள வன்முறைகள் தொடர்பில் ஐ.நா மனித உரிமைப் பேரவையில் முஸ்லிம் தரப்பினர் முறைப்பாட்டில் ஈடுபட்டு வருவதாகவும் ஜெனீவா செய்திகள் தெரிவிக்கின்றன.

எனவே, ஜெனீவா கூட்டத்தொடர் நடைபெறும் தற்போதைய சூழல் இலங்கைக்கு பாதகமானதொரு நிலையிலேயே உள்ளது. புதிய 'நல்லாட்சி' அரசாங்கம் மீதான நம்பிக்கைகள், எதிர்பார்ப்புக்கள் சர்வதேச மட்டத்திலும் சரிவடையும் நிலையே தோன்றியுள்ளது. இனிமேலும் இலங்கை அரசாங்கத்திற்கு கால அவகாசங்களை வழங்கவோ, அரசாங்கத்தின் நடவடிக்கை தொடர்பில் ஒரு மென்போக்கினை கடைப்பிடிக்கவோ சர்வதேச சமூகத்திற்கு வாய்ப்பு களற்றுப் போயுள்ளது. இந்த சந்தர்ப் பத்தை தமிழர் தரப்பு சரியான முறையில் கையாள வேண்டும். வெறும் கோசங்களை எழுப்பி ஆர்ப்பாட்டங்களை மேற்கொள்வதை விடுத்து அறிவுபூர்வமான செயற்பாட்டின் மூலம் அரசாங்கத்திற்கு அழுத்தம் கொடுக்கும் நடவடிக்கைகளையே மேற்கொள்ள வேண்டும்.

இலங்கையில் இடம்பெற்ற சகல மனித உரிமை மீறல்களுக்கும் சர்வதேச பொறிமுறையினூடாகவே தீர்வு காணும் வகையில் அழுத்தங்களை கொடுப்பதே இன்று ஜெனிவாவில் தமிழர் தரப்பு பிரதிநிதிகளின் ஒருமித்த செயற்பாடாக அமைய வேண்டும்.


CEDARGREEN COIN LAUNDRY & DRY CLEAN DEPOT
" VERY CLEAN LAUNDRY" Avoid The Rush ..... Come during weekdays!
• Large laundry Folding Tables, Lots of Space • We offer wash, Dry & fold at .99Cents /lb
Commercial
. We Clean Commercial Linens, Aprons, & Towels • We Clean Uniforms Dry Clean or Wash & Dry
. We Clean Towels/Sheets from Daycare, Clinics, Hair Saloon, Nail Spa, Restaurants etc
STORE Tel: 416-289-7514
OPEN DAILY 8 am – 11 pm
Sat. & Sun 7 Am – 11 pm
(Near Bellamy & Lawrence – find us in GOOGLE !!) 3340 Lawrence Ave. East, Unit 5, Scarborough, ON M1H 1A7

# கனடாவின் பழங்குடியினரும் ஈழத்தமிழரும் – 21

## கனடாவின் 150ஆவது பிறந்த தினத்தை முன்னிட்டு வெளியாகும் கட்டுரை.



குரு அரவிந்தன்

கல்வித்துறையில் பல காலமாகக் கனடிய முதற்குடி மக்கள் ஆர்வம் காட்டவில்லை. அவர்கள் வளர்ந்த சூழ்நிலையும் அவர்களைக் கல்வி அறிவு பெறுவதற்கு இடம் தரவில்லை. 150 வருடங்களைக் கடந்து விட்ட இந்த நிலையில், இன்று முதற்குடி மக்களின் அடுத்ததலை முறையினர் ஓரளவு கல்வித் துறையில் ஈடுபாடு காட்டத்தொடங்கியதன் காரணமாகச் சிலர் உயர் கல்வி கற்கத் தொடங்கிவிட்டனர். இன்னும் சிலர் உயர் பதவிகளையும் பெற்றிருக் கின்றனர். அதேபோல பல்வேறு துறைகளிலும் முதற்குடி மக்களின் அடுத்த தலைமுறையினர் தற்போது ஈடுபாடு கொள்ளத் தொடங்கியுள்ளனர். குறிப்பாக சர்வதேச விளையாட்டுத் துறையைப் பொறுத்த வரையில் ஒலிம்பிக் போட்டிகளில் பங்குபற்றக் கூடிய தரத்தை இவர்களில் சிலர் இன்று அடைந்திருக் கிறார்கள். பனிப் பிரதேசங் களில் வாழ்ந்ததால், முக்கியமாக ஐஸ்ஹொக்கி, ஸ்கீயிங், ஸ்சினோபோர்டிங், கேளிங் (ice hockey, skiing, snowboarding and curling) போன்ற துறைகளில் மிகவும் திறமையாகச் செயற்படுகின்றார்கள். அவர்களில் சிலரைப் பற்றியாவது இங்கே குறிப்பிடுவது சிறப்பானது என்று நினைக்கின்றேன்.



Brigette Lacquette

கனடாவின் பெண்கள் ஹொக்கி குழுவில் இடம்பெற்ற கோற் முதற்குடி மக்கள் இனத்தைச் சேர்ந்த பிறிஜெட் லக்குயூட்டி (Brigette Lacquette) என்ற பெண்மணி கனடாவின் பெண்கள் ஹொக்கி ஒலிம்பிக் குழுவில் விளையாடுகின்றார். இவர் கனடாவின் முதலாவது முதற்குடி மக்கள் இனத்தைச் சேர்ந்தவராவார். 25 வயதான இவர் வின்னிபெக் என்ற இடத்தில் இருந்து சுமார் 300 கிலோ மீட்டர் தூரத்தில் இருக்கும் குக்கிராமமான மலாட் என்ற இடத்தைச் சேர்ந்தவர். சின்ன வயதில் இருந்தே தனது தந்தையின் வழிகாட்டலில் ஹொக்கி விளையாடக் கற்றுக் கொண்டதாக அவர் குறிப்பிட்டார். தென் கொரியாவில் நடந்த குளிர்கால ஒலிம்பிக் போட்டியில் இவர் பங்கு பற்றி விளையாடியிருந்தார். இந்தப் போட்டியில் கனடாவுக்கு வெள்ளிப் பதக்கம் கிடைத்திருந்தது. முதற்குடி மக்களின் அடுத்த தலைமுறையினருக்கு, குறிப்பாகப் பெண்களுக்கு இவர் ஓர் எடுத்துக் காட்டு என்று தொடர்பு சாதனங்கள் இவரைப் புகழ்ந்திருந்தன.

முதற்குடி மக்களின் பாரம்பரிய நடனங்களில் 'கூப்டான்ஸ்' என்ற நடனமும் ஒன்றாகும். 2010ஆம் ஆண்டு வான்கூவரில் நடந்த குளிர்கால ஒலிம்பிக் போட்டியின்போது 'கூப்டான்ஸ்' என்று சொல்லப்படுகின்ற இந்த நடனத்தை முதற்குடி மக்களின் நடனக்காரரான டலாஸ் ஆர்கண்ட் என்பவர் (Dallas Arcand Sr) மேடை ஏற்றியதன் மூலம் மிகவும் புகழ் பெற்றிருந்தார். எட்டு வருடங்களின் பின் அவரது பாதையைத் தொடர்ந்த 20 வயதான அவரது மகன் தென்கொரியாவில் நடந்த கலாச்சார விழாவில் தனது கூப்டான்ஸ் நடனத்தை மேடை ஏற்றி இருந்தார். கனடா முதற்குடி மக்களின் பாரம்பரிய நடனம் மீண்டும் ஒலிம்பிக் விழாவில் மேடை ஏறியது அவர்களுக்குக் கௌரவம் தரும் நிகழ்வாக அமைந்திருந்தது.

ஒலிம்பிக் குளிர்கால விளையாட்டு கனடா முதற்குடி மக்களுக்குப் பிடித்தமான விளையாட்டாக இருக்கின்றது. அதில் பங்குபற்றுவதை இவர்கள் மிகவும் பெருமையாகக் கருதுகின்றார்கள். முதற்குடி மக்கள் இனத்தைச் சேர்ந்த கென்னத் என்பவரே முதன் முதலாக லேக் பிளேசிற் என்ற இடத்தில் (1932 Winter Olympics held at Lake Placid) நடந்த ஒலிம்பிக் போட்டியில் கலந்து தங்கப் பதக்கத்தை வென்றவராவார். இவர் சஸ்கச்சுவான் மாகாணத்தைச் சேர்ந்தவர். இவரைத் தொடர்ந்து முதற்குடி இனத்தைச் சேர்ந்த பலர் சர்வதேசப் போட்டிகளில் பங்கு பற்றித் தங்கள் திறமையைக் காட்டத் தொடங்கினர். அந்த வரிசையில் சரோன், ஷேலி என்ற இரு சகோதரிகள் 1972,1976,1980,1984 ஆகிய ஒலிம்பிக் போட்டிகளில் தொடராகப் பங்கு பற்றிப் பல பதக்கங்களை வென்றிருக் கிறார்கள். இதுவரை இவர்கள் 48 தேசிய பதக்கங்களைப் பெற்றிருக்கிறார்கள். இவர்களைப் போலவே றோசானி, ரோஜர் என்ற இருவரும் ஜப்பானில் நடைபெற்ற ஒலிம்பிக்கில் பங்குபற்றியிருந்தனர். திரோன் புலுறி கனடாவின் ஹொக்கி குழுவில் 2002 ஆம் ஆண்டு ஸோல்ட் லேக் சிற்ரியில் நடைபெற்ற போட்டியில் பங்குபற்றியிருந்தார். அமெரிக்க ஹொக்கி குழுவை 1952 ஆம் ஆண்டுக்குப்பின் மீண்டும் வென்றபோது இவரும் கனடா குழுவில் விளையாடியிருந்தார். கரோலின் ஹாவ் 2010 ஆம் ஆண்டு வான்கூவரிலும், 2014ஆம் ஆண்டு ஷோச்சியிலும் நடைபெற்ற ஒலிம்பிக் போட்டியில் பங்குபற்றியிருந்தார். இவர் கியுபெக்கைச் சேர்ந்தவர். கரோலின் டாபி ஷெயர் 2010 ஒலிம்பிக்கில் பங்குபற்றி இருந்தார். ஸ்பென்ஷர் ஓபிரெயின் 2014, 2018 ஒலிம்பிக் போட்டிகளில் பங்கு பற்றியிருந்தார். ஜெசி கொக்னியும் 2014, 2018 ஒலிம்பிக் போட்டிகளில் பங்கு பற்றியிருந்தார். ஹரி பிறைஸ் ஷோச்சியில் நடைபெற்ற ஒலிம்பிக் ஹொக்கிக் குழுவில் பங்குபற்றி இருந்தார். இவர் பிரிட்டிஸ் கொலம்பியாவைச் சேர்ந்தவர். வட அல்பேட்டாவைச் சேர்ந்த ரொனி போக்கியூ ஆண்களுக்கான ஹொக்கி விளையாட்டுக் குழுவில் இணைந்து 2018ஆம் ஆண்டு தென் கொரியாவில் நடந்த போட்டியில் பங்குபற்றி இருந்தார். கெவின்கோ கனடாவின் கேளிங் குழுவில் இடம்பெற்று தென் கொரியாவில் நடந்த ஒலிம்பிக் போட்டியில் பங்குபற்றி இருக்கின்றார். இவர் வடமேற்கு பிரதேசத்தைச் சேர்ந்தவர். இவர்களைப் போலவே, ஒலிம்பிக் போட்டிகளில் பங்கு பற்றிச் சாதனைகள் படைப்பதற்காக முதற்குடி இனத்தைச் சேர்ந்த பலர் தாமாகவே முன்வந்து பயிற்சி பெறுகின்றார்கள்.

விளையாட்டுத் துறையில் முதற்குடி மக்களின் முன்னேற்றத்திற்கு இத்துறையில் அவர்கள் நன்கு திட்மிட்டு செயற்படுவதும் முக்கியமான ஒரு காரணமாகும். அவர்களின் தற்போதைய சமூக சிந்தனை அவர்களிடம் இருக்கும் திறமைகளை வெளியே கொண்டு வரவேண்டும் என்ற திடமான நோக்கத்தோடு செயற்படுவதாகும். சமீபத்தில் வான்கூவர் சென்றபோது ஒலிம்பிக் போட்டி நடந்த இடத்தில் உள்ள நினைவுச் சின்னத்தை பார்த்துவிட்டு அத்துறையில் ஈடுபாடு கொண்ட முதற்குடி இனத்தைச் சேர்ந்த ஒருவருடன் அங்கே உரையாடச் சந்தர்ப்பம் கிடைத்தது. விளையாட்டுத் துறையைப் பொறுத்தவரையில் முதற்குடி மக்களிடையே நீண்டகாலத் திட்டங்களை அறிமுகம் செய்திருக்கிறார்கள் என்பதை அவர் குறிப்பிட்டார். மத்திய மாகாண அரசுகளிடம் இருந்து இதற்கான உதவிகளைப் பெற்றிருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார். சின்ன வயதில் இருந்தே இத்துறையில் ஈடுபாடு கொண்டவர்களைத் தெரிவுசெய்து பயிற்சி கொடுக்கிறார்களாம். உடல், மனரீதியாக ஆரோக்கியமானவர்களைத் தெரிந்தெடுத்து கலாச்சார, ஆன்மீகக் கட்டுப்பாடுகளோடு, பாடல்கள், நடனங்கள், பிரார்த்தனைகள் போன்றவற்றின் மூலமும் (physical, cultural, mental (intellectual-emotional), and spiritual) இப்பயிற்சித் திட்டங்களை நடைமுறைப் படுத்துகின்றனர். இவர்களில் சாதனை படைக்க வேண்டும் என்ற விருப்பம் கொண்ட ஒதுக்குப் பகுதிகளில் இருப்பவர்கள்கூடப் பல மைல் தூரத்திற்கு சென்று விளையாட்டுத் துறையில் பயிற்சி எடுக் கிறார்கள். தொலைதூர நோக்கில் இத் திட்டங்கள் தீட்டப்பட்டிருப்பதால், சிறந்த முறையில் இத்திட்டங்கள் நடைமுறைப் படுத்தப்பட்டால், எதிர்காலத்தில் இன்னும் பல சாதனைகளை முதற்குடி மக்களின் அடுத்த தலைமுறையினர் படைப்பார்கள் என்ற நம்பிக்கை எல்லோருக்கும் உண்டு.



முதற்குடி மக்கள் போலவே கனடாவில் உள்ள ஈழத்தமிழர்களின் அடுத்த தலைமுறையினரும் பலவேறு துறைகளில் சாதனைகள் படைக்கத் தொடங்கி இருக் கிறார்கள். கல்வியில் மட்டுமல்ல, விளையாட்டுத் துறைகளிலும் சாதனைகள் படைக்கத் தொடங்கி இருக்கின்றார்கள். ஆனால் முதற்குடி மக்கள்போல இவர்களிடம் நீண்டகாலத் திட்டங்கள் இன்னும் உருவாக்கப்படவில்லை. பல இளைஞர்களும் யுவதிகளும் விளையாட்டுத் துறையில் உள்ள ஆர்வம் காரணமாக அத் துறைகளில் பயிற்சி எடுக்கின்றார்கள். ஆனால் தொலைதூர நோக்குப் பார்வையோடு அவர்கள் இத்துறையில் ஈடுபடவில்லை என்பதை அவதானிக்க முடிகின்றது. இங்கே உள்ள ஈழத்தமிழர்கள் பலரிடம் திறமைகள் இருப்பதால் திட்டமிட்டுச் செயற்பட்டால், விளையாட்டுத் துறையிலும் சர்வதேச அளவில் சாதனைகள் படைக்க முடியும் என்ற நம்பிக்கை உண்டு.


Build Your Career in Mortgage Lending! Join My Office

MORTGAGE ALLIANCE

MORTGAGE FINANCING SOLUTIONS AVAILABLE FROM MULTIPLE LENDERS

1585 Markham Road, Suite 110
Scarborough, ON M1B 2W1
Tel: 647-922-5704

SAM SURENDRAN
Mortgage Agent Lic# 16002312
Direct: 647-922-5704
www. OKmortgages.ca



Corporate office: Mortgage Alliance, 200-2005 Sheppard Ave E, Toronto, ON M2J 5B4. Tel:1-877-366-3487. Lic# 10530

# நான் சோறு, கறி, பீசா எது சாப்பிட்டாலும் அதுக்குக் காரணம் புரோட்டாதாண்ணே!

## நகைச்சுவை நடிகர் சூரி நேர்காணல்

**சந்திப்பு: கண்ணன்**

"இன்னிக்கு நான் சோறு, கறி, பீசான்னு எது சாப்பிட்டாலும் அதுக்குக் காரணம் புரோட்டாதாண்ணே… அந்த நகைச்சுவை தான் சினிமாவில் எனக்குப் பெரிய ஏணியை போட்டுக்கொடுத்து உயர்ந்த இடத்துக்குக் கொண்டு வந்துச்சு. வசதி வாய்ப்பென்று இப்போது நான் நல்லாயிருக்கேண்ணா இயக்குநர் சுசீந்திரன் அண்ணே ஏத்தி வச்ச விளக்குதான் காரணம்." மண் வாசனை மறக்காத வழக்கில் இயல்பாகப் பேசும் சூரி இன்றைய தேதியில் தமிழ் திரையுலகில் அனைத்து தரப்பினரும் விரும்பும் நகைச்சுவை நடிகர். தான் கடந்துவந்த பாதை, நகைச்சுவையில் தொடர்ந்து கொண்டிருக்கும் வெற்றிப் பயணம் பற்றி நம்மிடம் மனம் திறந்து பேசினார்.

"மதுரை பக்கத்தில் ராஜாக்கூர்தாண்ணே நான் பிறந்த மண்ணு. அப்பா முத்துசாமி சரியான சேட்டைக்காரர். செய்து வச்ச மாதிரி முரட்டு மீசை வைத்திருப்பார். மீசைக்கும் அவர் அடிக்கிற நகைச்சுவைக்கும் சம்பந்தமே இருக்காது அஞ்சு நிமிஷம் பேசினார்னா அவர் அடிக்கிற நகைச்சுவையில் ஆளையே கவுத்திடுவார். அப்படி-யொரு நகைச்சுவை உணர்வு உள்ளவர். அவரிடம் இருந்த அந்தத் திறமைதான் எனக்கும் ஒட்டிக்கிச்சு. அப்பாவுடைய நகைச்சுவை உணர்வுதான் திரைப்படத்தில் நாமும் நடிகராகணும்ங்கற ஆசையைத் தூண்டி, 1996இல் சென்னைக்கு வந்தேன்."

### திரைப்பட வாய்ப்பு எப்போது வந்தது?

வாய்ப்புக்காக எல்லோரும், செருப்புத் தேயத்தேய நடந்தேனென்று சொல்வார்கள். எனக்கு அப்படியில்ல. ஒவ்வொரு நிறுனமா போய் வாய்ப்பு கேட்டேன். அப்படி 'ஜி' படத்தில் சின்னதா ஒரு வாய்ப்பு கிடைத்தது. கல்லூரி மாணவர்கள் தேர்தலில் ஜெயித்த அணியை கலாய்க்கிற மாதிரியான ஒரு காட்சி. அஜித் நடந்து வரும்போது அவரைக் கிண்டல் பண்ற மாதிரி ஒரு வசனம் பேசவேண்டும். வாய்ப்பு கிடைத்த ஆர்வத்தில் அதிகமாக இரண்டு வார்த்தையைப் பேசி அஜித்தை கிண்டல் பண்ணினேன்.



மானிட்டர் பார்த்துக் கொண்டிருந்த இயக்குநர் லிங்குசாமி, "யேய் அந்தச் சுள்ளான வரச்சொல்லு" என்று என்னைய கூப்பிட்டார். ஆகா நம்மளோட ஆர்வக் கோளாறுக்கு ஆப்பு வந்துடுச்சேன்னு பயந்துகிட்டே போனேன். பக்கத்தில் அஜித்தும் இருந்தார். "என்ன வசனம் பேசின சொல்லு"என்றார் என்னைப் பார்த்து. எனக்கு உடம்பெல்லாம் நடங்குது.

"இல்ல சார் அது வந்து…"னு இழுக்கிறேன். "சும்மா சொல்லுப்பா" என்றார் மறுபடியும். நான் பேசிக்காட்டியதும் பக்கத்தில் இருந்த அஜித், "அருமை பயமில்லாமல் தைரியமா பேசுனீங்க… நல்லா பண்ற உனக்கு எந்த ஊரு" என்று விசாரித்து பாராட்டினப்பதான் எனக்கு உசுரு வந்துச்சு.

'காதல்' படத்தில் மேன்ஷனில் எண்ணெய் தேய்ச்சிட்டு நிக்குற கல்யாணமாக இளைஞன் வாய்ப்பு கொடுத்தார் பாலாஜி சக்திவேல். 'தீபாவளி' படத்தில் சின்ன பாத்திரத்தில் நடிச்சப்பதான் அதில் உதவி இயக்குநரா இருந்த சுசீந்திரன் அண்ணனை தெரியும். அந்தப் படத்துக்குப் பிறகு ஆறு மாசம் கழித்து டீக்கடையில் நின்னுக் கிட்டிருந்தேன். "உன்ன சுசீந்திரன் தேடிட்டு இருந்தார் போய் பார்" என்று ஒரு நண்பர் சொன்னார்.

விலாசம் கண்டுப்பிடிச்சு போனேன். பேப்பரும் கையுமாக இருந்த சுசி அண்ணன், "உனக்குக் கபடி விளையாடத் தெரியுமா" என்று கேட்டார். "தெரியும்" என்று சொன்ன என்னிடம், "அப்படியென்றால் ஒரு ஆறு மாசம் கபடி விளையாடவேண்டும் வந்திடு" என்றார். "அண்ணே சினிமால நடிக்கத்தான் வந்தேன் கபடி விளையாடச் சொல்கிறீர்களே" என்று வெள்ளந்தியா கேட்டப்போதான், 'கபடி சம்பந்தப்பட்ட' படங்கறதை சொல்லி, 'வெண்ணிலா கபடி குழு' படத்தில் நடிக்க வாய்ப்பு கொடுத்தார்.

அன்னிக்கு ஆரம்பித்த நல்ல நேரம் என்னையும் என் குடும்பத்தையும் இப்ப வரைக்கும் வாழ வச்சிட்டு இருக்கு.

### வடிவேலு, சந்தானம் என நகைச்சுவை நடிகர்கள் எல்லோரும் நாயகனாக நடித்துவிட்டார்கள். நீங்கள் எப்போது நாயகனாக நடிக்கப் போகிறீர்கள்?

ஏண்ணே… எல்லாம் நல்லாதானே போய்ட்டு இருக்கு. இதுவரைக்கும் ஒரு நொடிகூட நாயகன் ஆசை எனக்குள்ள வந்ததில்லை. நகைச்சுவையிலேயே இன்னும் நிறையச் சாதிக்க வேண்டியிருக்கு. நகைச்சுவை ஏரியா நல்லாயிருக்கும்போது நாயகனாக ஆசைப்பட்டு ஏன் பொழப்ப கெடுத்துக்கொள்ளவேண்டும்.

### நாயகன் ஆசை இல்லையென்றால், நீங்கள் ஏன் 'சிக்ஸ் போக்'கிற்கு முயற்சி பண்றீங்க?

திரைப்படத்தில் எந்தப் பாத்திரம் கொடுத்தாலும் அதை ஏற்று நடிக்க உடம்பு தயாராக இருக்க வேண்டும், அதுக்காகத்தான். ஓட்டம், உடற்பயிற்சி, உணவு கட்டுப்பாடென்று கொஞ்சம் உடம்பை குறைச்சிருக்கேன். என்னை இளைஞனா வச்சிக்கிட்டாதானே இன்னும் சில காலத்துக்கு நாயகனோட நண்பனா வண்டியை ஓட்ட முடியும். என் மனைவிகிட்ட சிக்ஸ் பேக் வைக்கப்போறேன்னு சொன்னப்போ, "சிப்ஸ் பாக்கெட் மாதிரி இருந்திட்டு சிக்ஸ் பேக் கேக்குதா?"னு கிண்டல் பண்ணினார்கள்.

### படப்பிடிப்பு தளங்களில் நாயக நடிகர்களைவிட நீங்கதான் நாயகி நடிகைக-ளிடம் அதிக நேரம் பேசுகிறீர்களாமே?

க்கும் அந்த கம்ப்ளைண்ட் வேற இருக்கா. திரைப்படம், நடிப்பு தவிர நடிகைகளிடம் அதிகமா ஒரு வார்த்தைகூட பேசமாட்டேன். அதனால்தான் எல்லா நடிகைகளிடமும் எனக்கு மரியாதை இருக்கு.

### எந்த நாயகியுடன் பாடி ஆட ஆசைப்படுகிறீர்கள்?

நயன்தாரா, ஸ்ருதிஹாசன் என்று எல்லார் கூடவும் இணையாக நடிக்க ஆசைதான். ஆனால், நான் ஆசைப்படுகிறது அவர்களுக்கு தெரிஞ்சா, என் மேல வழக்கு போட்டு உள்ளே தள்ளிடப் பேறாங்க. அதான் ஆசைப்படுறதோட அடுத்த கோட்ட தாண்டுகிறதில்ல.

### கவுண்டமணி போன்ற நடிகர்கள் தங்களுக்கு நகைச்சுவை பகுதி எழுத தனியாக ஆள் வைத்திருந்ததாக சொல்வார்கள். நீங்கள் அதுபோல் ஆள் வைத்திருக்கிறீர்களா?

இப்போதுதான் நகைச்சுவை பகுதி என தனியாக இல்லாமல் போச்சே. ஆனால், சில படங்களில் நகைச்சுவை ஐடியா சொல்ல இயக்குநர் எஸ்.பி. ராஜ்குமார், கணேஷ்ராம், ஜோதி என்று சில பேர் இருக்கிறார்கள்.

### நகைச்சுவை நடிகர்களில் உங்கள் மேல் பாதிப்பை செலுத்தியவர்கள் யார்?

நாகேஷ், சந்திரபாபு, வி.கே. ராமசாமியை எனக்கு ரொம்பப் பிடிக்கும். இந்த பட்டியலில் எங்கள் அப்பா முத்துசாமியும் இருக்கிறார். நான் ஊருக்குப் போகும்போதெல்லாம், "முத்துசாமி நகைச்சுவையில் பத்து சதவிகிதம்தான் நீ பணியிருக்க. அம்பது சதவிகிதம் பண்ணினா இன்னும் பெரிய நகைச்சுவை நடிகனா ஆகிடுவ" என்று ஊரும் உறவும் சொல்லும்போது அப்பா ஆசீர்வாதம் பண்ற மாதிரியே இருக்கும்.

### உங்கள் மனைவி, குழந்தைகளுக்கு நீங்க நடித்த படங்களில் எது பிடிக்கும்?



எனக்கும் என் மனைவிக்கும் 'வெண்ணிலா கபடிக் குழு' பிடிக்கும். என்னுடைய குழந்தைகளுக்கு 'அரண்மனை 2' பிடிக்கும். 'புரோட்டா காமெடிக்குப் பிறகு 'புஷ்பா புருஷன்' நகைச்சுவைதான் பெரிய அளவில் ரசிகர்களிடம் போய் சேர்ந்திருக்கிறது. ஒரு படத்தில் நடித்து முடித்ததும் நமது வேலை முடிஞ்சிருச்சுன்னு நினைக்கமாட்டேன். எடிட்டிங், டப்பிங், மிக்ஸிங் வேலைகள் நடக்கும்போதுகூட புதுசா ஒரு எண்ணமோ வசனமோ தோன்றினால் உடனே இயக்குநருக்கு போன் பண்ணி, "சார் இத சேத்துக்கலாமா"ன்னு கேட்டு நகைச்சுவைக்கு மெருகூட்டுவேன். ஃபீல்டுல நீக்கவேண்டுமானால் நெருப்பா இருந்தா மட்டும் பத்தாதுண்ணே பொறுப்பாவும் இருக்க வேண்டும். அதுதாண்ணே என்னை உயர்த்திட்டு வருகிறது.


விளம்பரம் VLAMBARAM

பதிப்பாளர்: ராஜா மகேந்திரன்
ஆசிரியர்: சத்தியா மகேந்திரன்
முகாமையாளர்: கமல் செல்லையா
ஊடகப்பொறுப்பாளர்: விஜய் செல்லையா
தட்டச்சு: கலா விஜயபாலன்
அலுவலக பொறுப்பாளர்: தாரணி இந்திரராஜ், பிரசாந்தி அருள்தாசன்
பதிப்பு: Canyon Press Inc.

**Vlambaram Publications Inc.**
GTA SQUARE, 5215 FINCH AVE. E.,
#201, TORONTO, ON M1S 0C2, CANADA
TEL: 416-282-8059 / FAX: 416-286-0334
e-mail: Vlambaram@sympatico.ca / info@vlambaram.com
Web: www.vlambaram.com / www. tamilvanakkam.com


விளம்பரம் பத்திரிகை 'விளம்பரம் பப்ளிக்கேஷன்ஸ் இங்' நிறுவனத்தால் வெளியிடப்படுகிறது. விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்களுக்கு எழுத்தாளர்களும், விளம்பரங்களுக்கு விளம்பரதாரர்களுமே பொறுப்பாளர்கள். பதிப்புரிமை: 2004 விளம்பரம் பப்ளிக்கேஷன்ஸ் இங். விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்களை முழுமையாகவோ, பகுதியாகவோ ஆசிரியரின் எழுத்து மூல அனுமதியின்றி மறுபிரசுரம் செய்தலாகாது.

# விலா கருணா முதியோர் இல்லம்

## TET - HD-யுடன்

இணைந்து வழங்கும்

# சந்தியாராகம் 2018

விளம்பர அனுசரணை
COMPUTEK COLLEGE
416-321-9911

மீண்டும் இதோ, மறைந்து கிடக்கும் உங்கள் பாடல் திறமையை வெளியுலகத்திற்கு வெளிப்படுத்த வழங்கப்படும் ஓர் உன்னத மேடை. தாமதிக்காதீர்கள், தயங்காதீர்கள் கீழ் காணப்படும் விண்ணப்ப படிவத்தை உடனடியாக பூர்த்தி செய்து மார்ச் 25ம் தேதிக்குள் அனுப்பவும். ஏப்ரல் 7ம் தேதி நேரடி தேர்வு காலை 10 மணியில் இருந்து மாலை 5 மணி வரை நடைபெறும். விபரங்கள் பின்னர் அறிவிக்கப்படும்.

Mailing Address: 602 Brimley Rd, Scarborough, ON M1J 1B5
Tel: 416-200-6971, Email: villakaruna602@gmail.com

55 வயதுக்கு மேற்பட்ட இருபாலரும் கலந்து கொள்ள வாருங்கள்.

**PLEASE FILL WITH BLOCK LETTER - THANK YOU**

FULL NAME:........................................................

ADDRESS:........................................................

........................................................

AGE/DOB:........................................................

TEL DAY TIME / CELL:........................................................

EMAIL ADDRESS :........................................................

ADMIN FEE : $30

PRIOR PARTICIPATION IN ANY SINGING COMPETITION:

........................................................

........................................................

........................................................

SIGNTURE OF THE PARTICIPANT:........................................................

Date:........................................................

**OFFICE USE ONLY :** ____________________

**AUDITION RESULT:** ____________________ **SCORE:** ____________________

**FINAL RESULT :** ____________________ **SCORE:** ____________________

TBC Toronto Business College

கணக்கியல் கல்வியின் ஓர் முதன்மை நிறுவனம்

Education is A Lifelong Journey




EARLY CHILDCARE ASSISTANT (ECA)
Work as Childcare Assistant , Childcare Worker Etc.
40 Weeks Diploma
Immediate Job Opportunities

PERSONAL SUPPORT WORKER (PSW)
28 Weeks Certificate
Work as Support Worker , Care Giver , Personal Attendant , Etc.
Immediate Job Opportunities

ACCOUNTING & PAYROLL ADMIN.
35 Weeks Diploma
Work as Account Payable , Accounts Receivable , Book Keeper Etc.
Jobs available in plenty

COMPUTERIZED ACCOUNTING
26 Weeks Diploma
Work as Account Payable , Accounts Receivable , Book Keeper Etc.
Many Jobs are available

FOOD SERVICE WORKER (FSW)
12 Weeks Diploma

GOVERNMENT GRANT
யார் தகுதி உடையவர்கள் ?
★ EI பெற்றுக்கொண்டிருப்பவர்கள்
★ 2005ம் ஆண்டுக்குப்பின் EI பெற்றவர்கள்
★ 5 வருடங்களுக்குள் Maternity / Parental Benefit பெற்றவர்கள் அரசாங்க நன்கொடையாக $28000 or more பெறலாம் திருப்பி செலுத்தத் தேவையில்லை
● Certain conditions may apply

Part Time Courses
Windows, Word, Excel, Power Point, Access, QuickBooks, Sage50 Accounting (Simply) & Sage 300 ERP 2012 (Accpac)
Workshops
Food Handler Certification
First Aid & CPR
Mask Fit Testing

- 100% Instructor Led Training
- Small Class Sizes
- Student Friendly Environment
- Ample Free Parking
- Placement Assistance
- TTC Accessible

416-291-5155 / 416-500-5300
4465 Sheppard Ave. East #208
( Sheppard & Brimley ) Scarborough
www.tbcollege.com t.businesscollege@gmail.com
(Registered as a Private Career College under the Private Career Colleges Act 2005)


# பழமைவாதக்...

## 01 ஆம் பக்கத்தொடர்ச்சி

கருத்துக் கணிப்புக்களை நடத்தும் Ipsos நிறுவனம் 2018 பெப்ரவரி 22இல் தெரிவித்தது. ஒன்ராரியோ மக்களிடையே பழமைவாதக் கட்சிக்கு 38%உம், லிபரல் கட்சிக்கு 29% உம், புதிய ஜனநாயக்கட்சிக்கு 26%உம் செல்வாக்கு இருப்பதாக இக்கருத்துக் கணிப்பு தெரிவித்தது.



பழமைவாதக் கட்சியில் 190,000 உறுப்பினர்கள் இருப்பது உறுதி செய்யப்பட்டது. அதன்பின்னர் ஒவ்வொரு உறுப்பினர்களுக்கும் ஒரு வாக்கு அளிப்பதன் மூலம் கட்சித் தலைவர் தெரிவு செய்யப்படுவார். அவ்வாக்குகள் ஒன்ராரியோ மாகாணத்தில் உள்ள 124 தொகுதிக்களுக்கும் கிடைக்கும் வாக்குகள் பிரிக்கப்பட்டு அதன் விதாசரத்திற்கேற்ப புள்ளிகள் கொடுக்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டது. இவ்வாறே பற்றிக் பிறவுண் தலைவராகத் தெரிவு செய்யப்பட்ட போதும் வாக்குகள் எண்ணப்பட்டன. இம்முறையையே கனேடிய பழமைவாதக் கட்சியும் தனது தலைவரை தெரிவு செய்யும்போது பாவித்தது. இம்முறை மூலம் ஒவ்வொரு தொகுதி யிலும் விழுந்த வாக்குகளின் எண்ணிக்கை 100ஆகக் கருதப்படும். அதன்படி ஒவ்வொரு வேட்பாளருக்கும் விழுந்த வாக்குகளின் வீதம் எவ்வளவோ அவ்வளவு புள்ளிகள் வழங்கப்படும்.

உதாரணமாக ஒரு தொகுதியில் 2,500 பேர் வாக்களித்து அதில் ஒரு வேட்பாளருக்கு 1,250உம், மற்றவருக்கு 750உம், மூன்றாமவருக்கு 475உம், நான்காமவருக்கு 25உம் கிடைத்தால் அவர்களுக்கு விழுந்த வாக்குகளின் வீதப்படி அவர்களுக்கு 50 (1250/2500 X 100%), 30, 19, 1 புள்ளிகள் வழங்கப்படும். சில தொகுதிகளில் மொத்தமாக 100 வாக்குகளுக்குக் குறைவாக விழுந்திருந்தால் விழுந்த வாக்குகளின் எண்ணிக்கையே புள்ளிகளாக வழங்கப்படும். இம்முறை மூலம் கட்சியில் 190,000 உறுப்பினர்கள் இருந்தாலும் மொத்த வாக்குகளின் (புள்ளிகளின்) எண்ணிக்கை ஆகக்கூடியது 12,400 (= 124 X 100) ஆகவே இருக்கும்.

கட்சியின் தலைவராக 50% இற்கு மேற்பட்ட புள்ளிகளைப் பெற்றவரே தெரிவு செய்யப்படுவார். இதனால் முதன்முறையாக வாக்குகள் (புள்ளிகள்) எண்ணப்படும்போது ஒருவர் 50% இற்கு மேற்பட்ட புள்ளிகளைப் பெறாவிட்டால் அதில் மிகக்குறைந்த புள்ளிகளைப் பெற்ற நான்காமவர் நீக்கப்பட்டு அவரிற்கு விழுந்த வாக்குகளில் உள்ள அவர்களது இரண்டாவது விருப்பு வேட்பாளர்களுக்கு அவரின் வாக்கு வழங்கப்பட்டு மீண்டும் எண்ணப்படும். இவ்வாறே ஒருவர் 50% இற்குக் கூடிய புள்ளிகள் பெறும்வரை இறுதியில் உள்ளவர் நீக்கப்பட்டு திரும்பத் திரும்ப வாக்கு எண்ணிக்கை கணிக்கப்படும்.

இதனால் கட்சி உறுப்பினர்கள் வாக்களிக்கும்போது தங்களது இரண்டாவது, மூன்றாவது தெரிவுகளையும் தங்கள் வாக்கில் குறிப்பிடுவது முக்கியமாகிறது. ஒருவர் இரண்டாவது மூன்றாவது தெரிவுகளைக் குறிப்பிடாவிட்டால் அவரது வாக்கு அவரது முதலாவது தெரிவு செய்யப்பட்டவர் போட்டியில் இருந்து விலக்கப்பட்டவுடன் வாக்குக் கணிப்பில் இருந்து நீக்கப்பட்டு விடும்.

பழமைவாதக்கட்சியின் நிரந்தர தலைவருக்குப் போட்டியிட்ட நான்கு வேட்பாளர்களில் கரோலின் மல்ரோனியே அதிக அளவு பணத்தைக் கட்சி நிதிக்கு சேகரித்தவர் ஆவார். கரோலின் மல்ரோனி $938,000 உம், கிறிஸ்ரின் எலியட் $746,000உம், டக் ஃபோர்ட் $400,000உம் மற்றும் தானியா கிறனிக் அலென் $118,000உம் இந்தத் தேர்தல் பிரசார காலத்தில் கட்சி நிதிக்கு சேகரித்திருந்தனர்.

ஒன்ராரியோ பழமைவாதக்கட்சியில் 14 வயதுக்கு மேற்பட்ட எவரும் $10 பணம் செலுத்துவதன் மூலம் உறுப்பினராகலாம். இதனால் கட்சியில் தவறாகப் பதிவு செய்யப்பட்ட உறுப்பினர்கள் வாக்களிப்பதைத் தடுக்க இம்முறை தேர்தலின்போது இரண்டு படி (2 steps) வாக்களிக்கும் முறை அமலாக்கப்பட்டது. அதன்படி ஒரு உறுப்பினர் தனது அடையாளங்களை உறுதி செய்து கட்சித்தலைமைக்கு மின் அஞ்சல் அனுப்பி ஓர் இரகசிய இலக்கத்தை முதலில் பெறவேண்டும். பின்னர் அந்த இலக்கத்தைப் பாவித்து இணையதளத்தில் தமது வாக்குகளைப் பதியவேண்டும்.

இம்முறையில் பல தொழில் நுட்பக் கோளாறுகள் ஏற்பட்டபடியால் வாக்களிக்கும் காலம் முடிவடையும் நேரம் மார்ச் 08இல் இருந்து மார்ச் 09ஆம் திகதி மாலை வரை நீடிக்கப்பட்டது. அவ்வாறு நீடிக்கப்பட்டும் கட்சி உறுப்பினர்கள் எல்லோருக்கும் வாக்களிக்கும் இரகசிய இலக்கம் வழங்கப்படவில்லை.

இதனால் கட்சியின் தலைவர் பதவிக்கான வேட்பாளர்கள் நால்வரில் டக் ஃபோர்ட், கரோலின் மல்கோனி மற்றும் தானியா கிறனிக் அலென் ஆகிய மூவரது ஆதர

(தொடர்ச்சி 14 ஆம் பக்கம்...)

# காப்புறுதி கேள்வி பதில்கள்?



சிவ. பஞ்சலிங்கம், B.Com.,
(Licensed Insurance Broker)
காப்புறுதி சம்பந்தமான ஆலோசனைகளுக்கு
416.321.0999

**வாகன காப்புறுதியில் 'பொறுப்பு காப்புறுதி' (Liability) என்ற உடன் படிக்கையின் தொகை எவ்வளவு வரை இருக்க வேண்டும். இதன் தொகை குறைவாக இருந்தால் எப்படியான எதிர்விளைவுகளை எதிர்கொள்ள வேண்டி வரும்?**

எதிர் விளைவுகள் என்பது எப்படியிருக்கும் என்பதனை எச்சரித்து பல செய்திக் கட்டுரைகள் கனடாவின் பிரபல்யமான காப்புறுதி சஞ்சிகைகளில் பல தடவை வெளியாகியிருந்தன.

வாகன காப்புறுதிகளின் சட்டங்கள், அமலாக்கங்கள், நிர்வாக கட்டமைப்புக்கள் யாவும் மாகாண அரசின் கீழ் இருப்பதனால் பொறுப்பு காப்புறுதியின் (Third Party Liability Coverage) எல்லை எவ்வளவு தொகை என்பதனை ஒவ்வொரு மாகாணமும் கனடாவில் நிர்ணயிக்கின்றது.

வாகன விபத்துகளில் எங்கள் தப்பினால் இன்னொருவருக்கு ஏற்படும் பாதிப்புகளுக் காக நாம் வாழும் ஒன்ராரியோ மாகாணத் தில் குறைந்தது இரண்டு இலட்சம் டொலர் வரை காப்புறுதி ஒப்பந்த பிரிவு இருக்க வேண்டும் என்பது சட்டத்தின் நிபந்தனை யாகும்.

இரண்டு இலட்சம் டொலர்வரை ஒருவருக்கு காப்புறுதி இருந்தால், அவரால் ஏனையோ ருக்கு ஏற்படும் பாதிப்புகள், அவருக்காக அவரின் காப்புறுதி கம்பனி மேற்கொள்ளும் சட்டச் செலவுகள், புலனாய்வு என்பனவற் றிற்கு மொத்தமாக இரண்டு இலட்சம் டொலர்வரையே கம்பனி கொடுக்கும். ஆனால் விபத்து ஒன்றில் ஒருவர் தவறினால் நிரந்தரமான உடல் காயங்களினால் முடமா கிய இன்னொருவருக்கு ஒரு மில்லியன் டொலர்வரை நட்டாடு வழங்க வேண்டும் என நீதிமன்றம் தீர்ப்பு வழங்கினால்...? இரண்டு இலட்சம் வரை காப்புறுதி கை கொடுக்கும். மிகுதி எட்டு இலட்சம் டொலரும் ஒருவரின் சொந்த பணத்திலேயே செலுத்த வேண்டும். பணத்தினை செலுத்த வில்லையானால், சட்டம் ஒருவரின் வருமானங்கள், சொத்துக்களை எடுத்துக் கொள்ளும்.

### இதற்கு தீர்வு என்ன?

பொறுப்பு காப்புறுதியின் (Liability) தொகை யினை மில்லியன் டொலருக்கு வைத்திருப்ப தேயாகும். இங்கு 'பூரணமான பொறுப்பு சட்டம்' (Absolute Liability Law) என்பது அப்பாவித்தனமாக பாதிக்கப்பட்ட ஒருவரை பாதுகாக்கின்றது. அதாவது பாதிக்கப்பட்ட வருக்குரிய மேலதிக எட்டு இலட்சம் டொலரையும் கம்பனி வழங்கிவிட்டு அந்தத் தொகையினை கம்பனியே அவரிடம் (தவறு செய்தவரிடம்) அறவிட முயற்சிக்கும்.

# கனடிய தகவல் தொடர் 286

**பல பக்கங்களைக் கொண்ட 'நீதி மன்ற ஆணை' (Court Summons) பதிவுத் தபாலில் ஒருவரின் வீடு தேடி வந்திருந்தது. அது என்றோ ஒரு நாள் நடந்த வீதி விபத்தில் பாதிக்கப்பட்டு உடல் காயமுற்ற வர் பெரும் தொகை பணத்திற்கு நட்டஈடு கோரி தொடர்ந்த வழக் காகும். அந்த நிலைமையில் அவருக்கு தீர்வு என்ன?**

விபத்து நடந்த நேரம் ஒருவரின் வாகன காப்புறுதி வலிமையாக இருந்திருக்க வேண் டும். அதில் பாரிய தொகைக்கு 'பொறுப்பு காப்புறுதியின்' (Liability Coverage) பிரிவு இருந்திருக்குமானால் இந்த நீதிமன்ற ஆணைக்கு அஞ்ச வேண்டிய அவசிய மில்லை. இப்படியான பிரச்சினைகள் ஆபத் துகள் எந்த நேரத்திலும் உருவாகலாம் என எதிர்பார்த்தே வாகன காப்புறுதிக்கு மாதா மாதம் பணம் நாம் செலுத்துகின்றோம்.

'நீதிமன்ற ஆணையின்' பிரதிகளை ஒரு பாதுகாப்புக்காக எடுத்து வைத்துக்கொண்டு, அதனை அவரின் வாகன காப்புறுதி கம்பனி யிடமே சமர்ப்பிக்க வேண்டும். அவரின் சார் பில் அதனை பார்த்துக்கொள்ள வேண்டியது அக்கம்பனியின் பொறுப்பு ஆகும். இந்த விடயத்தில், ஒருவருக்கு ஏற்படும் சட்டத் தரணியின் செலவு, புலனாய்வு செலவு, நீதிமன்ற செலவு என்பவற்றினை அவரின் வாகன காப்புறுதி கம்பனியே பொறுப்பு எடுத்துக் கொள்ளும். நீதிமன்றத்தினால் முடிவு செய்யப்படும் நட்டாட்டு தொகையி னையும் காப்புறுதி கம்பனியே கொடுத்து தீர்க்கும்.

ஒருவரின் வாகன காப்புறுதி கம்பனி இந்த விடயத்தில் ஏதாவது மேலதிக தகவல்கள் தேவையாக இருந்தால் அவற்றை வழங் கலாம். அவர்களுக்கு ஒத்துழைப்பு வழங்கி னால் சரி. சரி, இனி இந்நீதிமன்ற ஆணை மற்றும் தொடரப்பட்ட வழக்கு தொடர்பான விபரத்துக்கு வருவோம்.

விபத்துகளில் வாகனங்களின் பாதிப்புக்களை எதிர்கொண்டவர்கள், உடல் காயமுற்றவர் கள் எவரும் முதலில் தத்தமது கம்பனி யோடு மட்டுமே நட்டாடு கோரலை முன் எடுக்க வேண்டும். உடல் காயத்திற்கு அவர வர் காப்புறுதிப் பிரிவில் குறிப்பிடப்பட்ட வரையறை வரை நிவாரணம் வழங்குவார் கள். இதற்கு மேலால் உடற் காயமடைந் தவருக்கு இன்னுமோர் வாய்ப்பு உண்டு.


- சட்ட ஒழுங்கு விதிகளின்படி, விபத்தில் உடல் காயமுற்றவரில் எதுவிதமான தவறும் இல்லையென்றால் (Not at Fault Accident)
- நடந்த விபத்தில் ஏற்பட்ட உடல்காயம் என்பது ஒருவரின் அன்றாட இயங்கு சக்தி யினை வாழ்வில் நிரந்தரமாக முடக்குமா னால் (Catastrophic Impairment) மற்ற வருக்கு எதிராக பாரிய தொகைக்கு நட்டாடு கோரி (Tort Claim) வழக்கு தொடரலாம்.

(தொடர்ச்சி 12 ஆம் பக்கம்...)

NO MEDICAL INSURANCE
No Questions Asked! No Medical Exams! 100% Guaranteed Approval!
Recently got cancer, heart attack, any heart conditions, stroke, high blood pressure, diabetes, or any medical conditions.
• 18 முதல் 85 வயதானவர்கள் எவரும் எந்த நோயினால் பாதிக்கப்பட்டவர்களாயினும், எந்தக் குறைபாடு உள்ளவர்களாயினும், வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தாலும் இந்தக் காப்புறுதியைப் பெறலாம்.
• விசா இல்லாதவர்களும் சுப்பர் விசாவில் உள்ளவர்களும் 78 வயதுவரை பெறலாம்
KABIS
KABIS & ASSOCIATES INC.

உங்கள் தற்போதைய காப்புறுதி பற்றிய சகல சந்தேகங்களுக்கும் உடன் அழையுங்கள்.
Does your current life insurance policy need a tune up please call me.
Nimal Subramaniam
Cell: 416.816.7994 Email:neel900@hotmail.com
La Capitale Financial Group
INDUSTRIAL ALLIANCE INSURANCE AND FINANCIAL SERVICES INC.
Assumption Life
•Life Insurance • Critical Illness Insurance • Disability Insurance • Mortgage Insurance • RRSP • RESP
•Non-Medical Insurance •Travel Insurance •Super Visa Medical Coverage •Drug and Dental Plan •TFSA

# மணம் மிக்க மலர்களைப் பாருங்கள்



## சத்குரு வாசுதேவ்

“என் கல்லூரிப் பேராசிரியர் ஒருவரை, என் மூத்த சகோதரி போல் நினைத்திருந்தேன். வாழ்க்கையில் நான் எடுத்த பல முக்கியமான முடிவுகளுக்கு அவர் தான் வழிகாட்டியாக இருந்தார். அப்படிப்பட்டவரை அண்மையில் முன்னறிவிப்பின்றிச் சந்திக்கச் சென்றேன். வாசல் கதவைத் தட்டியதும், அவர் வந்து திறந்தபோதே போதையில் தள்ளாடுவதைப் பார்த்துத் திடுக்கிட்டேன். உள்ளே ஆண்களின் குரல்கள் கேட்டன. “எதுவாயிருந்தாலும் நாளைக்கு வா” என்று வாசலோடு என்னை அனுப்பி, கதவைச் சாத்திவிட்டார். அந்தக் கணத்திலேயே அவர் மீது எனக்கு இருந்த மரியாதையெல்லாம் ஒட்டுமொத்தமாக நொறுங்கிவிட்டது. அதற்குப் பிறகு அவரைத் தவிர்க்கத் தொடங்கி விட்டேன். ஆனால், மனம் எதையோ இழந்து விட்டதுபோல் தவிக்கிறதே...?”

உங்களிடம் மட்டுமல்ல. நம் நாட்டில் இருக்கும் பலரிடம் நான் காணும் பிரச்சனை இது.

கிரிக்கெட்டில் ஒருவரை உங்கள் அபிமான வீரராக நினைக்கிறீர்கள். அவரிடம் நீங்கள் என்ன எதிர்பார்க்கலாம்? தேவையான ரன்கள் எடுக்கிறாரா? அவசியமான விக்கெட்களைக் கைப்பற்றுகிறாரா? கேட்சுகளைக் கோட்டை விடாமல் பிடிக்கிறாரா? அவ்வளவுதானே?

ஆனால், அவருடைய குடும்பம் பற்றி, அவருடைய முதல் காதலி பற்றி, அவர் சேர்த்த சொத்து பற்றி, அவருக்கும், அவர் மனைவிக்கும் பிரச்சனையா என்பது பற்றியெல்லாம் உங்களுக்கு ஏன் கவலை?

கிரிக்கெட் மைதானத்தில் மட்டுமே அவர் உங்களின் நியாயமான எதிர்பார்ப்புகளுக்குப் பொறுப்பானவர். மைதானத்துக்கு வெளியே நடப்பது அவருடைய பிரத்தியேகமான, அந்தரங்கமான வாழ்க்கை. அதில் தலையிட உங்களுக்கு எந்த உரிமையும் இல்லை.

சினிமா நட்சத்திரங்கள், விளையாட்டு வீரர்கள், அமைச்சர்கள், ஆசிரியர்கள் என்று அத்தனை பேருக்கும் அவரவர் வாழ்க்கையை வாழ்வதற்கு உரிமை உண்டு.

பேராசிரியர் உங்கள் பிரச்சனைகளுக்குச் சரியான தீர்வு தருகிறார் எனும்போது, அவர் அவருடைய வீட்டுக்குள் குடித்தால் என்ன? ஆண்களோடு நட்பாக இருந்தால் என்ன, கயிற்றில் தொங்கினால் என்ன, காற்றில் நடந்தால்தான் உங்களுக்கு என்ன?

அவர் ஏற்றுக் கொண்ட பொறுப்பைச் சரிவர நிறைவேற்றுகிறாரா என்பதை மட்டும் கவனியுங்கள்.

“அதெப்படி சத்குரு, ஒழுக்கம் இல்லாத ஒருவர் எனக்கு அறிவுரை தர முடியும்? அதற்கு அவருக்கு என்ன தகுதி இருக்கிறது?”

அவரென்ன உங்களையும் தன்னுடன் அமர்ந்து மது அருந்தச் சொல்லி வற்புறுத்தினாரா? அல்லது குடித்துவிட்டு உங்களிடம் தவறாக நடந்து கொள்ள முயற்சி செய்தாரா? அப்படி ஏதாவது நடந்திருந்தால், அது வேற விடயம்.

தான் போதையில் இருக்கையில் உங்களுக்கு எந்தத் தர்மசங்கடமும் தரக்கூடாது என்று மறுநாள் வரச்சொல்லி அனுப்பினாரே, உங்களைப் பொறுத்தவரையில் அவரிடம் அதைவிடப் பெரிய ஒழுக்கம் என்ன எதிர்பார்க்கிறீர்கள்?

அடுத்தவர் விடத்தில் அவசியத்துக்கும் அதிகமாக மூக்கை நீட்டுவது மட்டும் எந்த ஒழுக்கத்தில் சேர்ந்தது?

“அப்படியானால், அவர் செய்வது சரியா?”

அது வேறு பிரச்சனை. அவருடைய வாழ்க்கையைப் பற்றி சரியா, தவறா என்று தீர்ப்புச் சொல்ல, நான் தயாராக இல்லை. உங்களுக்கும் அது அவசியமில்லை என்கிறேன்.

உங்களின் எதிர்பார்ப்புகளுக்கு ஏற்ப அடுத்தவர் நடக்கவில்லை என்பதற்காக, அவரைக் குறையுள்ளவர் என்று முடிவு கட்ட உங்களுக்கு உரிமை இல்லை.

சங்கரன் பிள்ளையின் பக்கத்து வீட்டுத் தோட்டத்தில் மாம்பழங்கள் கனிந்து தொங்கின. யாரும் இல்லாத சமயத்தில், சங்கரன் பிள்ளை ரகசியமாக அங்கே புகுந்தார். முதல் பழத்தை அவர் பறித்ததும், “கடவுள் உன்னைக் கவனிக்கிறார்” என்று ஒரு குரல் வந்தது.

திடுக்கிட்டார். அக்கம்பக்கம் பார்த்தார். யாரும் இல்லை. பிரமையென்று நினைத்து, அடுத்தடுத்து பழங்களைப் பறித்தார்.

“நான்கு பழங்களுக்கு மேல் கடவுள் சும்மா இருக்க மாட்டார்” என்று மறுபடியும் அதே குரல் கேட்டது.

சங்கரன் பிள்ளை சட்டெனத் திரும்பினார். குரல் வந்த திசையில் ஒரு கிளி உட்கார்ந்திருப்பதைக் கவனித்தார். புன்னகைத்தார்.

“கடவுள் கவனிப்பதாக மிரட்டியது நீதானா?”

“ஆமாம்” என்றது கிளி.

“செல்லக்கிளியே, உன் பெயர் என்ன?”

“தேவதை!”

“கிளிக்குத் தேவதை என்று பெயரா? விநோதமாக இருக்கிறதே?” என்றார் சங்கரன் பிள்ளை.

“டாபர்மேன் நாய்க்குக் கடவுள் என்று பெயர் வைத்திருப்பதை விடவா?” என்று திருப்பிக் கேட்டது கிளி.

சங்கரன்பிள்ளைக்கு அங்கே என்ன ஆனது என்பது முக்கியமல்ல. தேவதை என்ற பெயரின் மீதோ, கடவுள் என்ற பெயரின் மீதோ சங்கரன்பிள்ளை சில எதிர்பார்ப்புகளைச் சுமத்தியிருந்தால், அது யார் குற்றம்?

Contact: 1 866 424 ISHA (4742)
Email: toronto@ishafoundation.org
Website: www.ishafoundation.org /
**Inner Engineering Program is now online with Sadhguru:** www.innerengineering.org

அந்தச் சகோதரி திடீரென்று மாறிவிடவில்லை. அவரைப் பற்றி நீங்கள் வைத்திருந்த பிம்பம்தான் மாறிவிட்டது. கண்ணாடி நொறுங்கிவிட்டது. அதில் தெரிந்த அவருடைய பிம்பம் நொறுங்குமே தவிர, அவரே நொறுங்கிவிட்டார் என்று எப்படித் தீர்மானிப்பது?

நீங்கள் ஒரு மலர்ச் செடியைப் பார்க்கிறீர்கள். அதில் மலர்ந்து மணக்கும் பூக்களை அன்றாடம் பறித்து ரசிக்கிறீர்கள். ஒருநாள் தற்செயலாகக் குனிந்து பார்க்கிறீர்கள். செடியின் வேர்கள் அழுக்கிலும், அசிங்கத்திலும் ஊன்றியிருப்பதைக் கவனிக்கிறீர்கள். உடனே, பூக்களே அருவருப்பாகிவிடுமா?

செடிக்குத் தண்டனை தருவதாக நினைத்து, மணம் மிக்க மலர்களை வேண்டாம் என்று ஒதுக்குவதால் யாருக்கு நஷ்டம்?

அமுதம் தேடிப் போகையில் விஷத்தில் ஏன் கவனம் போகிறது?

“கொஞ்சம் அமுதம், கொஞ்சம் விஷம்” புத்தகத்திலிருந்து

நன்றி விகடன் பிரசுரம்




## காப்புறுதி...

11 ஆம்பக்கத்தொடர்ச்சி

அதுவே இங்கு நடந்துள்ளது. ஆனால் இப்படியான நிகழ்வுகளில் அறியாமையால், நடைபெறும் சம்பவங்களுக்கு பல உண்டு.

விபத்துகளில் ஏற்படும் உடல்காயம் என்பது சிகிச்சையினால் குணமாகும் ஒரு சாதாரண விடயமாகவும் இருக்கும். இவர்கள் சட்டத்தரணியின் அலுவலங்களுக்கு சென்று பணம் செலவழித்து, அல்லது சில சட்ட உதவியாளர்கள் இவர்களைக் கொண்டு பணம் செலவழிக்க பண்ணி இப் பாரிய தொகை நட்ட ஈடு கோரலுக்கு (Tort Claim) வழக்கு தொடர்ந்திருப்பார்கள்.

எவரும் எவருக்கு எதிராகப் பணம் செலவழித்து வழக்கு தாக்கல் செய்யலாம். ஆனால் நீதிமன்றம் அவற்றினை எல்லாம் ஏற்றுக்கொள்ளப் போவதுமில்லை. காப்புறுதி கம்பனிகள் அவசரப்பட்டு பல வாடிக்கையாளர்களின் அந்தப் பொதுப்பணத்தினை கொடுக்கப்போவதுமில்லை. மருத்துவ பரிசோதனைகள், சட்ட ஆய்வுகள் என பல நடந்த பின்பே முடிவுக்கு வரும்.

அது அன்றாட வாழ்வினை நிரநதரமாக முடக்கும் உடல் காயம் விபத்தில் ஏற்பட்டிருந்தால் விபத்தில் நட்டஈடு கோருபவர் நிரபராதியானால்? இவை இரண்டு சந்தேகத்திற்கு அப்பால் நிரூபிக்கப்படும் போது நட்டஈடு கிடைக்கலாம். இல்லையேல் முடிவு என்பது கனவு, கற்பனைகளோடு சேர்ந்த அலைச்சலாகவே வழக்கு தொடர்ந்தவருக்கு இருக்கும்.


**வாகனம் திருத்தும் நிலையத்தில் திருத்த வேலைக்காக வாகனத்தினை ஒப்படைத்திருந்தேன். திருத்த வேலையினை முடித்து விட்டு பரிசோதனைக்காக மெக்கானிக் அதனை ஓட்டிப் பார்த்த போது வாகனம் விபத்துக்குள்ளாகியது.**

நட்டஈடு வழங்குவதில் காப்புறுதி கம்பனி எப்படி இதனை கையாளும்?

இப்படியான ஒரு நிலையில் நட்டஈடு வழங்கல் என்பது எப்படியிருக்க வேண்டும் என்பது ஒன்ராரியோ மாகாண வாகன காப்புறுதி சட்டப்பிரிவு 664(6) ( Ontario Automobile Insurance Act 664 (6)) பூரணமாக தெளிவுபண்ணுகிறது. இங்கு நட்டஈடு கோரலின் முன்னெடுப்புகள் என்பது அவரின் வாகன காப்புறுதியினூடாகவே முதலில் பெற்றுக்கொள்ள வேண்டும். பின்னர் அவரின் வாகன காப்புறுதி வாகனம் திருத்தும் நிலைய காப்புறுதி கம்பனியிடமிருந்து அதனை மீள அறவிட்டுக் கொள்ளும், உரிமை (Subrogate Rights) அவர்களுக்கு

(தொடர்ச்சி 20 ஆம் பக்கம்...)

# இரத்தப் புற்றுநோய்



சிந்தனைப்பூக்கள்
எஸ். பத்மநாதன்

## LEUKEMIA

இன்றைய பல்வேறு சமூக அமைப்புகளில் குழந்தைகளையும், இளையோரையும், வயது வந்தவர்களையும் ஒன்றாக தாக்கக் கூடியது இரத்தப் புற்றுநோய் (Leukemia) ஆகும். இரத்தத்தில் ஏற்படும் பல்வேறு புற்று நோய்களுள் அதிகம் முக்கியத்துவம் வாய்ந் தது இவ்வகையான புற்றுநோயாகும். இரத் தத்தையும், எலும்பு மச்சை (Bone Marrow) ஐயும் ஒரு சேர பாதிப்பது இந்த வகை யாகும். எலும்பு மச்சையிலேயே இரத்தக் கலங்கள் உருவாகின்றன. இரத்தக்கலங்கள் உருவாகுவதற்கு முன்பு குருத்தணு (Stem cell) உருவாகிறது. இந்தக் குருத்து கலங் கள் வெள்ளை இரத்த கலங்களாகவோ (white blood cell) அல்லது சிவப்பு இரத்தக் கலங்களாகவோ (Red Blood Cell) விருத்தி பெறுகின்றன. இதனால் இவ்வகை புற்று நோயும் பல வகைகளாக இருக்கின்றன. குறிப்பிட்ட இரத்தக் கலங்களுக்கு ஏற்ற மாதிரி வேறுவேறு முறையில் அடையாளம் காணப்படுகின்றன. குறிப்பாக சிலவகை புற்றுநோய் மிகத் தீவிரமானது (Acute). சில நீண்ட நாட்களுக்கு தொடரக்கூடியவை (Chronic). முதலில் கூறப்பட்ட வகையை 'Lymphoblastic Leukemia' என்பர். இது பொதுவாக சிறுவர்களிடையிலே ஏற்படுகிறது. இரண்டாவது வகையை 'Chronic Lymphocytic Leukemia' என்பர். இரண்டு வகை யான புற்று நோய்களுக்கும் குணம் குறிகள் ஒன்றாகவே இருக்கும்.

குருத்தணுக்கள் பொதுவாக Lymphoid குருத்தணுவாகவும் அல்லது Myeloid குருத் தணுவாகவும் இருக்கலாம். முதற்பிரிவில் வெள்ளை இரத்தக்கலங்களும், இரண்டா வது பிரிவில் சிவப்பு இரத்தக்கலங்களும் உருவாகின்றன. சிவப்பு கலங்கள் நுரையீர லில் இருந்து பிராணவாயுவை உடலில் உள்ள எல்லா திசுக்களுக்கும் எடுத்துச் செல்கின்றன. அத்துடன் பக்ரீயாக்களை அழித்து நோய்களை எதிர்க்கின்றன. அதே வேளையில் வெள்ளை கலங்களும் தொற்று நோய்களை எதிர்க்கும் சக்தியுள்ளன.

சாதாரண ஒரு மனிதனின் இரத்தத்தில் 25 இலட்சம் கோடி செவ்வணுக்களும் 5,000 கோடி வெள்ளை கலங்களும் இருக்கும். ஒவ்வொரு நொடியிலும் இலட்சக்கணக்கான சிவப்பு கலங்கள் அழிய அதற்கு ஈடாக எலும்பு மச்சையில் கலங்கள் உருவாகின் றன. சிவப்பு அணுக்கள் 4 மாதங்கள் உயிர் வாழும். அதன்பின்பு அதன் புரதமும், இரும் பும் எலும்பு மச்சைகளுக்கு திரும்பி வந்து மீண்டும் சிவப்புக் கலங்கள் உற்பத்தியாகின் றன. எனவே இந்த சிவப்பு கலங்கள் மிக முக்கியமானவை. இந்தக் கலங்கள் குறைந் தால் சிவப்பு நிறச்சத்துக் குறையும். பிராண வாயு செறிவு குறையும். வெள்ளை அணுக் கள் பெருகும். உடல் பலவீனமடைந்து விடும். எலும்பு மச்சையின் தொழிற்பாடு குறையும். இதேவேளையில் வெள்ளை இரத் தக் கலங்கள் உருவாக 12 நாட்கள் எடுக் கும். பின்பு இவை இரத்தத்தில் சேர்ந்து நோய்களை எதிர்க்கும். உண்மையில் வெள்ளைக் கலங்கள் வியத்தகு செயல் களை செய்கின்றன. நாம் வாழ்வதற்கு ஒரு பாதுகாவலனாக இவை உள்ளன. ஆனால் தேவைக்கு கூடுதலாக வெள்ளை அணுக் கள் பெருகுவதால் ஏற்படும் சூழ்நிலை யிலேயே மிக கொடுமையான புற்றுநோயும் உருவாகி விடுகிறது.

**பல்வேறு குணங்குறிகள் இவ்வகை புற்றுநோயின் போது காணப்படும்.**

1. காய்ச்சலும், குளிரும் உடலில் ஏற்படும். பொதுவாக ஆரம்பத்தில் காய்ச்சல் போன்ற அறிகுறி (Flu-Like Illness) இருக்கும். அதே வேளையில் சிலருக்கு உடல் சில்லென்று இருக்கும். இது Cold Chills போன்றது. கூடியவிரைவில் இது போகமாட்டாது. இப்படி யான நிலையிருந்தால் வைத்திய ஆலோ சனை தேவை. பல வைத்தியர் ஆரம்பத்தில் இதனை இனம் காணமாட்டார்கள்.


2. எடை குறைவடையும். ஏனைய புற்று நோய்கள் போல இந்த வகை புற்றுநோயி லும் பசிக்குறைவு ஏற்படும். ஒரு கிழமைக்கு 1-2 இறாத்தல் எடை குறையும். தொடர்ந்து குறைவடையும்.

3. அடிக்கடி சிறுநீர் கழியும். பொதுவாக பக்ரீரியா, வைரஸ் தொற்றுநோய்கள் இலகு வில் ஏற்பட்டு பரவுவதால் சுகாதார பாதிப்பு ஏற்படலாம். நிணநீர்பகுதி சரியாக தொழிற் படாது விட்டுவிடும். இவ்வகை புற்று நோயால் வெள்ளைக்கலங்கள் குறைய நேரிடும். இதனாலும் சிறுநீர் அடிக்கடி வெளியேறலாம்.

4. இரவு வேளையில் வியர்வை ஏற்படும். இரத்தப் புற்றுநோய் உள்ளவர்களது உடல் சூட்டினை உடல் சரி செய்யாது. காய்சலும், குளிரும் மாறிமாறி ஏற்படுவதால் இரவில் கூடிய வியர்வை ஏற்படும். படுக்கை விரிப்பு கள் வியர்வையால் நனைந்து விடும். இத் துடன் களைப்பு தொற்றுநோய் காணப்பட்டால் வைத்திய ஆலோசனை தேவைப்படும்.

5. மூட்டுக்களும் எலும்புகளும் நோவடை யும். தொடர்ந்து எலும்பும், மூட்டுக்களும் வலி எடுத்தால் அதுஇப்புற்று நோயின் அறி குறியாகலாம். எலும்பு ஒடுக்கம் ஏற்படல், எலும்பு மச்சையில் பிரச்சினை ஏற்படுவ தாலும் இவ்வாறான நோவுகள் ஏற்படலாம்.

6. மிகவும் களைப்பு ஏற்படும். சிவப்பு கலங் களே உடல் முழுவதும் பிராணவாயுவை வழங்குகின்றன. சிவப்புக் கலங்கள் குறை வடைவதால் உடலுக்கு தேவையான பிராண வாயு கிடைக்காது. கடுமையான களைப்பு ஏற்படும். இரும்புச்சத்து குறைந்தாலும் இவ்வாறு ஏற்படலாம். எனவே அடிப்படைக் காரணத்தை அறிய வேண்டும்.




7. இரத்தம் கழிவுறுதல் - இரதத்தத்தை உறையச் செய்வதற்கு 'Platelets' என்னும் திரவம் உதவுகின்றது. ஏதாவது காயம் ஏற் பட்டால் இந்தத் திரவம் உடனடியாக தொழில்பட்டு இரத்தத்தை நிறுத்த முயல் கிறது. சிலருக்கு இந்தத் திரவம் குறைவாகி விடும். இதனை Thrombocytopenia' என லாம். முரசு கரைவதுகூட இதன் குறை பாட்டால் தான். மலத்தில் அல்லது சிறுநீரில் இரத்தம் சென்றால் அல்லது மூக்கு வழியாக இரத்தம் வந்தால் உடனடி சிகிச்சை அவசியம். எனவே இதுவும் புற்றுநோயின் அறிகுறியாகலாம்.

8. தோலின் மேற்பகுதியில் சிவப்பு புள்ளிகள் ஏற்படல். இதனை 'Petechiae' எனலாம். சிறிய இரத்தக் கால்வாய்கள் மூலம் இரத்தம் கசியலாம். வேறு பல காரணங்களால் ஏற் பட்டால் கூட இதுவும் இரத்தப் புற்று நோயின் ஆரம்பமாக இருக்கலாம். இவ்வாறு நிகழ்ந்தால் அவசியம் வைத்தியரிடம் செல்ல வேண்டும்.

9. வயிற்றுக்கோளாறு ஏற்படல். மண்ணீரல் (Spleen) என்பது வயிற்றின் இடது புறத்தில் உள்ளது. இது நிணநீர் சுரப்பின் முக்கிய பகுதி. இரத்தப் புற்றுநோய் ஏற்பட்டால் மண் ணீரல் வீக்கமடையும். பசி குறையும். எந்த நேரமும் வயிறு நிரம்பிய உணர்வு ஏற்படும்.

10. தலைவலி ஏற்படும். வெள்ளை இரத்தக் கலங்கள் குறைவது காரணமாக உடல் அதனை உற்பத்தி செய்ய முயலும். அதிக-மான வெள்ளைக்கலங்கள் இரத்தக் கால் வாய்களை தடைசெய்யும். இதனால் அடிக் கடி தலைவலி ஏற்படும். பல காரணங்களால் தலைவலி ஏற்பட்டாலும் இந்நோய்க்கும் இது காரணமாகலாம். இவை எல்லாம் ஒருவருக்கு ஏற்படும் என்பதல்ல. ஒன்றோ சிலவோ காரணமாகலாம். அவதானம் தேவை.

மேற்கூறியவற்றைவிட மூச்சுவிட கஷ்டமுறல், அடிக்கடி வேகமான இதயத்துடிப்பு ஏற்படல், பெண்களுக்கு மாதவிடாய் அடிக்கடி ஏற் படல், வாந்தி எடுத்தல், கழுத்தில் உள்ள நிணநீர் முடிச்சு, அக்குள் (Underarm), துடை இடுக்குக் பகுதி (Groin) பகுதிகளில் உள்ள நிணநீர் முடிச்சு வீக்கமுறும், பார்வை பிரச்சினை, கண் வரட்சி, விதை வீக்கம், தோலில் ஒவ்வாமை ஏற்படல் ஆகிய பல தோற்றப்பாடுகள் எழலாம்.

ஒருவருக்கு லூக்கீமியா எனப்படும் புற்று நோய் உள்ளது என அறிந்தால் முதலில் குடும்ப வைத்தியரிடம் செல்ல வேண்டும். அவ்வேளையில் உண்மையான புற்றுநோய் உள்ளதென கண்டால் விசேட நிபுணரிடம் அவர் அனுப்பலாம். அதன்பின்பு பல பரி சோதனைகள் இடம்பெறும்.

படிப்படியான பரிசோதனைகள் பலவாகும். அவை முதலில் உடல்நல வரலாறும், உடற் பரிசோதனையும் செய்யப்படும். அடுத்து முழுமையான இரத்தப் பரிசோதனை (Complete Blood Count - CBC) இரத்த ரசாயன பரிசோதனைகள், இரத்தம் வெளியே வரு வதும் உறைவதும் பற்றிய ஆய்வு, Cytochemistry ஆய்வு, உடலில் எதிர்ப்புணர்வு பற்றிய ஆய்வு (Immunophenotyping), Molecular பரிசோதனை, எலும்புமச்சை மாதிரி சோதனை, கீழ்முதுகெலும்பு ஆய்வு, நிணநீர் பகுதியின் மாதிரி ஆய்வு இடம் பெறும். இதுதவிர வேறு பரிசோதனைகளும் உள. மார்பு நிழலுரு (Chest-X-Ray), CT Scan, MRI, Ultrasound என்பனவே அவையாகும்.

உடல்நல வரலாற்றில் நோயாளியிடம் உள்ள அடையாளங்கள், மரபுவழி அடையாளங்கள் (Genetic syndromes, Benzene என்னும் இரசாயனத்திற்கு உட்பட்டமை, முன்பு செய்யப்பட்டுள்ள மருத்துவசிகிச்சை, இரத்த ஒழுங்கீனம், வைரஸ், தொற்றுகள் பற்றி அறிதல் முக்கியம். இதன்போது முரசு வீக் கம், முரசில் இரத்தம் வரல், நிணநீர் முடிச்சு வீக்கம் எல்லாம் அவதானிக்கப்படும். அதே போல இரத்தப் பரிசோதனையில் வெள்ளை, சிவப்பு கலங்களின் மாற்றம் அறியப்படும். அத்துடன் இரத்தத்தில் உள்ள யூரியா, நைதரசன், கிரியேட்டினைன், பொஸ்பேட், யூரிக் அசிட் என்பன அறியப்படும். இதேபால எலும்புமச்சையில் உள்ள புற்றுநோய் கலங்கள், நிணநீர் முடிச்சில் உள்ள புற்று நோய்க்கலங்கள் அறியப்படும். CT படங்கள் மூலம் உள் உறுப்புகளின் வீக்கம், MRI மூலம் உறுப்புகள், திசுக்கள் இரத்தக் குழாய்கள் யாவும் துல்லியமாக அறியப்

(தொடர்ச்சி 20 ஆம் பக்கம்...)



## பழமைவாதக்...

10 ஆம் பக்கத்தொடர்ச்சி

வாளர்கள் சார்பில் தேர்தல் வாக்களிப்பு முடிவடையும் காலத்தை இன்னமும் ஒரு கிழமையால் நீடிக்கும்படி வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. இவர்கள் கட்சியின் நிர்வாகம் கிறிஸ்ரின் எலியட் இற்கு ஆதரவு காட்டும்முகமாக மற்றைய வேட்பாளர்களின் ஆதரவுக் கட்சி உறுப்பினர்களுக்கு இரகசிய இலக்கம் வழங்காமல் காலத்தைத் தாழ்த்துகிறது எனக் குற்றச்சாட்டை வைத்தார்கள்.

கட்சி நிர்வாகம் இம்முறை கட்சியின் சரித்திரத்தில் என்றும் இல்லாதவாறு ஏற்கனவே அதிக உறுப்பினர்கள் வாக்களித்து விட்டதாகவும் தொழில்நுட்பக் கோளாறுதான் காலதாமதத்திற்குக் காரணம் என்றும், கட்சி விதிமுறை, அதிக பணச்செலவு மற்றும் பொதுத்தேர்தல் நெருங்குகிறது எனப் பல்வேறு காரணங்களால் கால நீடிப்பு இயலாது என வாதிட்டது.

இறுதியாக வழக்கை விசாரித்த நீதிபதி கட்சி விதிமுறையைக் காரணம் காட்டி இவ்வழக்கைத் தள்ளுபடி செய்தார். இதனால் பழமைவாதக் கட்சித் தலைவருக்கான தேர்தல் வாக்களிப்பு மார்ச் 09ஆம் திகதி மாலை எட்டு மணியுடன் நிறைவானது. கட்சியில் 190,000 உறுப்பினர்கள் இருந்த போதிலும் 71,450 பேரிற்கே வாக்களிக்கக்கூடிய இரகசிய இலக்கம் கிடைத்தது. அதில் 64,053 பேரே இத்தலைவர் தெரிவில் வாக்களித்தனர். இதற்கு முன்னைய பழமைவாதக் கட்சித் தலைவர் தேர்தல்களில் அதிகூடிய வாக்குகள் 2002ஆம் ஆண்டு நடந்த தேர்தலிலேயே விழுந்துள்ளன. அத்தேர்தலில் 44,188பேர் வாக்களித்திருந்தனர்.

இம்முறை நடைபெற்ற தலைவர் தேர்தலுக்கான வாக்குகள் எண்ணப்பட்டு முடிவுகள் 2018 மார்ச் 10இல் மார்க்கம் நகரில் நடைபெறும் பொதுக்கூட்டத்தில் தெரிவிக்கப் படுவதாக இருந்தது.

முதல் சுற்றில் எண்ணப்பட்ட வாக்குகளின் முடிவில் தானியா 15.3%, கரோலின் 17.2%, டக் 33.4% மற்றும் கிறிஸ்ரின் 34.1% புள்ளிகளைப் பெற்றிருந்தனர். எவரும் 50% இற்கு மேற்பட்ட புள்ளிகளைப் பெறாதபடியால் மிகக்குறைந்த புள்ளிகளைப் பெற்ற தானியா கிறனிக் அலென் போட்டியில் இருந்து விலக்கப்பட்டு அவர் பெற்ற வாக்குகள் அதில் உள்ள இரண்டாவது விருப்பு வாக்காளருக்கு வழங்கப்பட்டு ஏனைய மூவரும் பெற்ற புள்ளிகள் மீண்டும் கணிக்கப்பட்டன.




இரண்டாம் சுற்றில் எண்ணப்பட்ட வாக்குகளின் முடிவில் கரோலின் 18.1%, கிறிஸ்ரின் 35.8%, மற்றும் டக் 46.1% புள்ளிகளைப் பெற்றிருந்தனர். எவரும் 50% இற்கு மேற்பட்ட புள்ளிகளைப் பெறாதபடியால் மிகக் குறைந்த புள்ளிகளைப் பெற்ற கரோலின் மல்ரோனி போட்டியில் இருந்து விலக்கப்பட்டு அவர் பெற்ற வாக்குகள் அதில் உள்ள இரண்டாவது விருப்பு வாக்காளருக்கு வழங்கப்பட்டு ஏனைய இருவரும் பெற்ற புள்ளிகள் மீண்டும் கணிக்கப்பெற்றன.

மூன்றாம் சுற்றில் எண்ணப்பட்ட வாக்குகளின் முடிவில் கிறிஸ்ரின் எலியட் இற்கு 6,049 புள்ளிகளும், டக் ஃபோர்ட் இற்கு 6,202 புள்ளிகளும் கிடைத்தன. இதன்படி 50.62% புள்ளிகளைப் பெற்ற டக் ஃபோர்ட் பழமைவாதக்கட்சியின் தலைவராக அறிவிக்கப்பட்டார். கிறிஸ்ரின் எலியட் இற்கு 49.38% புள்ளிகளே கிடைத்தன. 153 அதிகப்படியான புள்ளிகளைப் பெற்று டக் ஃபோர்ட் பழமைவாதக்கட்சியின் புதிய தலைவரானார்.

மூன்றாம் சுற்றில் புள்ளிகள் அடிப்படையில் அதாவது தலைவரை தெரிவு செய்யும் முறையில் டக் ஃபோர்ட் வெற்றி பெற்றாலும் வாக்குகளின் எண்ணிக்கையின்படி கிறிஸ்ரின் எலியட்இற்கு 32,202 வாக்குகளும் டக் ஃபோர்ட் இற்கு 30,041 வாக்குகளும் கிடைத்துள்ளன. அதாவது வாக்குகளின் எண்ணிக்கையின் அடிப்படையில் கிறிஸ்ரின் 51.7% வாக்குகளையும் டக் ஃபோர்ட் 48.3% வாக்குகளையும் பெற்றுள்ளனர். ஒன்ராரியோவில் உள்ள 124 தொகுதிகளையும் பார்க்கப் போனால் 64 தொகுதிகளில் கிறிஸ்ரின் வெற்றி பெற்றுள்ளார். ஆனால் 60 தொகுதிகளில்தான் டக் வெற்றி பெற்றுள்ளார்.

டக் வெற்றி பெற்ற தொகுதிகளில் அதிகூடிய புள்ளிகளைப் பெற்றதாலேயே அவர் தலைவர் தெரிவில் வெற்றி பெறக்கூடியதாக இருந்தது. மூன்றாம் சுற்றில் கிறிஸ்ரின் Whitby உட்பட ஆறு தொகுதிகளில் மட்டுமே 70% இற்கு மேற்பட்ட புள்ளிகளைப் பெற்றார். ஆனால் டக் Etobicoke, Mississauga மற்றும் Scarborough உட்பட 11 தொகுதிகளில் 70% இற்கு மேற்பட்ட புள்ளிகளைப் பெற்றிருந்தார்.

இவ்வாக்கெடுப்பில் 1,300 பேருடைய வாக்குகள் சரியான தொகுதிக்கு ஒதுக்கப்படவில்லை எனக் கூறி கிறிஸ்ரின் எலியட் தனது தோல்வியை உடனடியாக ஏற்றுக்கொள்ள மறுத்தார். இதனால் மாலை 4 மணியளவில் வாக்கெடுப்பு முடிவுகள் CBC ஊடகத்தால் வெளிவிடப்பட்டாலும் மார்க்கம் நகரில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் பழமைவாதக்கட்சியால் உத்தியோக பூர்வமாக முடிவுகள் அறிவிக்கப்படாமல் மாலை 7:30 மணியளவில் கூட்டம் முடிவுற்றது.

பின்னர் பழமைவாதக் கட்சியின் நிர்வாகம் அந்த 1,300 பேருடைய வாக்குகளை மீள் பரிசீலனை செய்து இரவு 10:00 மணியளவில் டக் ஃபோர்ட் பழமைவாதக் கட்சியின் தலைமைப்பதவியை வென்றார் எனத் தெரிவித்தது. உடனடியாக அவருடன் போட்டியிட்ட தானியாவும் கரோலினும் டக் இற்கு வாழ்த்துத் தெரிவித்து தங்களது முழு ஒத்துழைப்பையும் தெரிவித்தனர். பழமைவாதக் கட்சியின் முன்னாள் தலைவர்கள் பற்றிக் பிறவுண், ரிம் கூடக், மைக் ஹரிஸ் ஆகியோரும் டக் ஃபோர்ட் இற்கு தங்களது வாழ்த்தை தெரிவித்தனர். ஆனால் அடுத்த நாள் மார்ச் 11 மாலை 8:00 மணியளவில் தான் கிறிஸ்ரின் எலியட் தனது தோல்வியை ஏற்றுக்கொண்டு டக் ஃபோர்ட் இற்கு வாழ்த்தைத் தெரிவித்து, அவருக்கும் கட்சிக்கும் தனது ஒத்துழைப்பை வழங்குவதாகவும் கூறியிருந்தார்.

டக் ஃபோர்ட் தனது உரையில் எல்லோருக்கும் நன்றி தெரிவித்ததுடன் ஒன்ராரியோ மக்களுக்கு நிவாரணம் விரைவில் வர இருக்கிறது என்று கூறினார். மேலும் அவர் ஒன்ராரியோ மாகாணம் வர்த்தகத்திற்காக எப்போதும் திறந்திருக்கும் என்றார்.

அடுத்த ஒன்ராறியோ முதல்வர் யார் என்பது யூன் 07, 2018ஆம் திகதி தான் தெரியவரும்.

## சிறுபான்மை...

03 ஆம் பக்கத்தொடர்ச்சி

வயதுடைய அப்துல் பாசித் என்ற இளைஞர் தனது வீட்டிற்கு தீ வைக்கப்பட்ட வேளையில் தாய், தந்தை மற்றும் சகோதரனை காப்பாற்றி விட்டு தப்பிக்க முடியாமல் வீட்டினுள் சிக்குண்ட நிலையில் தீயில் கருகி உயிரிழந்ததாக தெரிவிக்கப்படுகின்றது.

முஸ்லிம்களின் சொத்துக்கள் நாசப்படுத்தப்படும்போது அப்பகுதிகளில் நின்ற இராணுவத்தினர் பார்த்துக் கொண்டிருந்தனர் என்றும் பிரதேசவாசிகள் கூறுகின்றனர்.

சிங்கள சாரதியின் உயிரிழப்பிற்கு காரணமான அவரைத் தாக்கிய முஸ்லிம் நபர்களை அப்பகுதி முஸ்லிம் மக்கள் காப்பாற்ற முயலவில்லை எனவும், அவர்கள் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டதாகவும் கூறப்படுகின்றது. அத்துடன் குறித்த சிங்கள சாரதி ஒழுக்கமானவர் என்றும், அதே வேளையில் வறுமையான குடும்பத்தைச் சேரந்தவர் என்றும் முஸ்லிம் மக்களே குறிப்பிடுகின்றனர்.

அவரது தந்தை நீரிழிவு நோயால் பாதிக்கப்பட்டு ஒரு காலை இழந்தவர் என்றும், தாய் பாரிசவாத நோயினால் பாதிக்கப்பட்டவர் என்றும், இக்குடும்ப சூழலால் தங்கை மனநோயாளியானவர் என்றும், இக்காரணங்களால் கடுமையாக உழைக்க வேண்டிய நிலையில் இருந்தவரே உயிரிழந்த நபர் என்றும் அவர்கள் கவலையுடன் தெரிவிக்கின்றனர். அவரது இழப்பின் பின்னர் யார் அந்தக் குடும்பத்தை காப்பாற்றுவது என்ற கேள்விகளையும் அவர்கள் எழுப்பியுள்ளனர். மனிதாபிமானம் மிக்க முஸ்லிகள் சிலர் சமூக வலைத்தளங்களில் இதனை பதிவிட்டுள்ளனர்.

கண்டி - திகன பகுதியில் இடம்பெற்ற இந்தக் கலவரம் நாட்டில் ஏனைய பகுதிகளுக்கும் பரவக் கூடிய நிலை ஏற்பட்டபோதும், அவை தற்போது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளன. ஆனால், மக்கள் மனங்களில் ஏற்பட்டுள்ள அச்ச நிலை இன்னும் நீங்கவில்லை.



இப்போது, இக்கலவரம் தற்செயலாக - ஒரு சம்பவத்தையொட்டி ஏற்பட்டதா? அல்லது திட்டமிடப்பட்ட ஒன்றா? என்பது குறித்து கேள்விகள், கருத்துக்கள் வெளியிடப்பட்டு வருகின்றன. அரசியல்வாதிகள் ஒருவருக்கொருவர் குற்றம்சாட்டி வருகின்றனர். முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஸவின் ஆட்களே பின்னணியில் இருந்து இன ரீதியான குழப்பங்களைத் தூண்டுகின்றனர் என்று ஆளும் தரப்பினரும், பாதுகாப்பு நடவடிக்கைகள் முறையாக மேற்கொள்ளப்படாத காரணத்தினாலேயே இக்கலவரங்கள் நீடித்தன என்று மஹிந்த தரப்பினரும் கூறுகின்றனர்.

மஹிந்த ராஜபக்ஸவின் ஆட்சிக்காலத்தில் இன, மத வன்முறைகள் அடிக்கடி இடம் பெற்றமையினை யாரும் மறந்துவிட முடியாது. பௌத்த தீவிரவாதிகளால் முஸ்லிம் பள்ளிவாசல்கள், இந்துக் கோவில்கள், கிறிஸ்தவ ஆலயங்கள் என்பன அடிக்கடி தாக்குதலுக்குள்ளான போதும் அதற்கு காரணமானவர்கள் தண்டிக்கப்படவில்லை. இவ்வாறான சம்பவங்கள் தொடர்ந்து கொண்டேயிருந்தன.

ஆட்சி மாற்றம் ஏற்பட்ட பின்னர் இவை கட்டுப்பாட்டுக்குள் வந்தன. ஆனால், தற்போதைய தேசிய அரசாங்கத்திற்கு, 'கண்டிக் கலவரம்' ஒரு கறையாகவே அமைந்து விட்டது. கடந்த உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலில் பெரும் சரிவை எதிர்கொண்ட அரசாங்கம் இப்போது ஏற்பட்டுள்ள சமூகங்களிடையிலான வன்முறைகளால் மேலும் ஒரு பாதிப்பை அடைந்துள்ளது என்றே கருத முடிகின்றது.

குவிந்து கிடக்கும் ஊழல் மோசடி குற்றச்சாட்டுக்கள் தொடர்பில், குற்றவாளிகளுக்கு தண்டனை வழங்க முடியாத நிலை, மக்களின் அன்றாட வாழ்க்கைப் பிரச்சினையை சீர்செய்ய முடியாத நிலை போன்றனவே தேசிய அரசாங்கத்தின் பலவீனமாகப் பார்க்க முடிகின்றது. அத்துடன் நாட்டில் கலவரங்களும் தொடருமானால் நிலைமை மேலும் மோசமானதாகவே இருக்கும்.

அடுத்துவரும் இரு வருட காலப்பகுதிக்குள் எதனைத்தான் இந்த அரசாங்கம் சீர்செய்யப் போகின்றது? என்கின்ற சந்தேகமே இப்போது மக்களுக்கு அதிகம் ஏற்பட்டுள்ளது.

யோகா சோதிடம்



- கிரகப்பொருத்தம் பார்த்தல்
- சுபமுகூர்த்தம் கணித்தல்
- பலன் பார்த்தல்
- சாதகக் குறிப்புக் கணித்தல்

தொடர்புகளுக்கு: 416.299.8361

# வாழ்க்கை நம் கையில்

## நீண்டநாள் வாழ நினைத்ததை அடைய நோய் தடுக்கும் வழிமுறைகள்




C - 416.617.5721/H - 416.289.2033 after 7:00pm

பரிணாம வளர்ச்சியில் இயற்கையின் கொடைகள்தான் எத்தனை. சூரியன், சந்திரன் போன்ற பல கோள்கள். அவற்றின் செயல்பாடுகள் பற்றி இன்றும் பல அதிசயிக்கத்தக்க விடயங்கள்பற்றி நாம் அன்றாடம் கண்டும் கேட்டும் வருகிறோம். இத்தகைய நிகழ்வுகள் அனைத்தும் இயற்கையின் படைப்பே. உலக உயிரினங்களில் மனித இனத்தை மட்டுமே ஆறறிவு அதாவது பகுத்தறிவு கொண்ட இனமாகப் படைத்துள்ளது. இப்படி படைக்கப்பட்ட மனிதன் தன் தவறான செயல்களால் இயற்கையைச் சீரழித்து இன்று நோயும் மருந்துமாக வாழ்கிறான்.

காற்றை மாசுபடுத்தி, நீரை மாசுபடுத்தி இயற்கை நிலத்தை சீரழித்து, ஆகாயத்தை மாசுபடுத்தி அத்துடன் தான்வாழும் சூழலையே செயற்கையாக்கின்றான். அதன் விளைவே நோய்கள், பிணிகள்.

அன்றாடம் அதாவது சாப்பிடுவதற்கு முன்போ அல்லது பின்போ மருந்து மாத்திரைகளை உட்கொள்ளாத 50, 60 வயதைத் தாண்டியவர்களை விரல்விட்டு எண்ணி விடலாம். அதேவேளை மருந்துகளை உட்கொண்டுதான் ஆகவேண்டும் என்ற கட்டாயத்தில் இருப்போரையும் நாம் காண்கிறோம். எந்தநோயும் தானாக வருவதில்லை. அதனை நாமே வரவழைத்துக் கொள்கிறோம். இதற்கு பிறரைக் குற்றம் சொல்ல முடியாது. இன்றைய பொருளாதார தேடலில் உடலைப் பேணுவதுபற்றி பலரும் நினைப்பதில்லை. பொருள் என்பது எல்லோருக்கும் தேவைதான். அதற்காக உடலை பாதுகாக்காது விட்டு நோயின் பாதிப்பிற்கு ஆளாகி அவதிப்படுவது ஏன் என்பதை யாரும் புரிந்து கொள்வதில்லை. நோய் வந்தபின் அதற்கு மருந்து எடுக்கின்றதைத் தவிர அது வந்ததன் காரணத்தை அறிய யாரும் சிந்திப்பதில்லை. அதற்கு நேரமும் இல்லை.

மேலும் தற்போதெல்லாம் காலை முதல் மாலை வரை கைபேசியில் பேசிக்கொண்டும் குறும் செய்திகளை அனுப்பிக்கொண்டும் நேரத்தை வீணடிக்கின்றனர். இப்படிப்பட் டவர்களுக்கு உடலைப் பேணுவதற்கு நேரம் ஏது.

**நோய் வருவதன் காரணம் இரண்டு வகை**

1. புறக் காரணங்கள். அதாவது சுற்றுச் சூழல், உணவுமுறை.
2. அகச்சூழ்நிலை - அதாவது மனம் சம்பந்தப்பட்டது.



இதைத்தான் சித்தர்கள் மலச்சிக்கலும் மனச்சிக்கலும் ஆதிநோய்கள் என்கின்றனர். இதில் எந்த ஒன்று இருந்தாலும் நோய்கள் பல தானாக வந்து ஒட்டிக்கொள்ளும். உணவு என்பது இப்போது நாக்கின் சுவைக்காகவே உண்பதுபோல ஆகிவிட்டது. அவசர கெதியில் அவசர உணவை அவசரமாக உண்பதால் உடலும் அவசரமாக நோய்களைப் பெறுகிறது.

மேலும் சாப்பிடும் முன்னர் கை கால் முகம் இவற்றை நன்கு சுத்தம் செய்து ஆற அமர உட்கார்ந்து உண்ண வேண்டும். எளிதில் ஜீரணமாகும் உணவுகளையே சாப்பிடுவது சிறந்தது. மனச் சஞ்சலம், கோபம், துக்கம் போன்ற நேரங்களில் உண்பதைத் தவிர்க்க வேண்டும். சாப்பிடும்போது கதைத்தபடியும், தொலைக்காட்சி பார்த்துக்கொண்டும் இருப்பதைத் தவிர்ப்பது நல்லது. உணவானது அனைத்துச் சத்துக்களும் இருப்பதையும், அது அறுசுவை உணவாக இருப்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டும். எண்ணெயில் வறுத்த உணவுகள், எளிதில் ஜீரணம் ஆகாத உணவுகள், வாயுவை அதிகரிக்கும் உணவுகள் போன்றவை தவிர்க்கப்பட வேண்டும்.

குறிப்பாக காலை உணவு கண்டிப்பாக உண்ண வேண்டும். அதுபோல் இரவு உணவு மென்மையானதாயும் எளிதில் ஜீரணிக்கும் தன்மையும் உள்ளதாக இருக்க வேண்டும். இரவு உணவு படுக்கைக்குச் செல்வதற்கு 2 மணி நேரத்திற்கு முன் சாப்பிடுவதுதான் உத்தமம். உண்டபின் சிறிது நேரமாவது மெதுவாக நடக்க வேண்டும். இதை சித்தர்கள் 'உண்டபின் குறுநடைபோடு' என்றார்கள்.

தூக்கமின்மைக்கு உணவு ஒரு காரணமாகும். உணவுமுறையை சீராக கடைப்பிடித்தால் அஜீரணம், மலச்சிக்கல், மூலவியாதி, வாயுக்கோளாறு போன்றவற்றைத் தவிர்க்கலாம்.

### அகச் சூழ்நிலை

அகச் சூழ்நிலை என்பது உடலுக்குள் நடைபெறும் செயல்களைக் குறிக்கிறது. உடலை இயக்கும் வாதம், பித்தம், கபம் என்பனவற்றின் செயல்பாடுகள் சீர்குலைவதால்தான் உடல் நோயின் தாக்கத்திற்கு உள்ளாகின்றது. இதற்கு நேரம் தவறிய உணவுமுறையும் ஒரு காரணமாகும். அது மட்டுமன்றி மனித மனத்தை குரங்கிற்கு ஒப்பிடுவார்கள் நம் முன்னோர்கள். நிமிடத்திற்கு நிமிடம் நொடிக்கு நொடி மாறக்கூடியதுதான் மனம். இந்த மனத்தை அடக்கியாண்டாலே மனிதன் நோயின்றி வாழலாம்.

'மனமது செம்மையானால் மந்திரம் செபிக்க வேண்டாம்' என்பது பெரியோர் வாக்கு. இதனால்தான் மன அமைதிபெற முன்னோர்கள் கோயில்களையும், தேவாலயங்களையும் கட்டி வைத்தனர். இது எல்லா மதங்களுக்கும் பொருந்தும். உடல், மனம், ஆன்மா இந்த மூன்றும் சீராக இருந்தால்தான் மனிதன் நோயின்றி பெருவாழ்வு வாழ முடியும். இதற்கு யோகாசனம், பிராணாயாமம், தியானம் என்பன மனித வர்க்கத்திற்கு மிகப்பெரும் கொடையாக அமைந்திருக்கின்றன.

### யோகாவும் நோயற்ற வாழ்வும்

'உடலால் அழிவின் உயிரால் அழிவீர்' என்பது திருமூலர் வாக்கு. உயிருக்கு அழிவில்லை. நமது உடல் நோய் வாய்ப்பட்டு அழியும்போது உயிரானது உடலைவிட்டுப் பிரியும் என்பது பொருள். இவ்வாறான புனிதமான உடலை பாதுகாக்கும் வழிமுறைகளில் யோகா பயிற்சியானது முதலிடம் பெறுகிறது. இதன்மூலம் முதுமையைத் தள்ளிப்போடவும் மரணத்தை 20 முதல் 30 ஆண்டுகாலம் ஒத்திவைக்க முடியுமென்றால் நம்புவீர்களா? அது முற்றிலிம் சாத்தியமானது தான்.

**TUTORING**
Math / Science / English
Over 8 years of Experience (M.Sc., Mathematics)
Param Jyothi Academy is a Tutoring Centre located in Markham. We are very passionate about ensuring that our students understand their Math problems by breaking them down into simple problems. The secret to success for achieving high scores in Math is by practice. That is why we ensure that our students do several problems. We also work with IEP students, ADHD Students and low mark students by catering our skills, experience and knowledge to meet their needs.
FREE ONE HOUR MATH CLASS
Call today to find out more!
- Grade 1-8: Math/Science/English
- Grade 9-12: Math/Science (Academic, applied, IB and AP)
- Principles of Mathematics. Calculus. Vectors.
- Functions. Advanced Functions.
- University: Calculus-1, Calculus-2, Calculus -3

PARAM JYOTHI ACADEMY
7393 Markham Road . Door #90
647.426.6329
Param Jyothi Academy

ரொறன்ரோ தமிழ்ச்சங்கம்
பங்குனி மாத இலக்கியக் கலந்துரையாடல்
அறிவியல் தமிழ்

பிரதம பேச்சாளர் உரை:
"இலக்கியத்தில் அறிவியல்" - பேராசிரியர் சு.பசுபதி
சிறப்புப் பேச்சாளர்கள் உரை:
"மனநலமருத்துவமும் பண்பாடும்" - மனநலமருத்துவர் வ.இரகுராமன்
"விழைந்ததும் விளைந்ததும்" - முனைவர் வெங்கட் வெங்கட்ரமணன்
ஜயந்தெளிதல் அரங்கு
நாள்: 31-03-2018
நேரம்: மாலை 3:00 முதல் 7:00 வரை
இடம்: ரொறன்ரோ தமிழ்ச்சங்க மண்டபம்
Unit 7, 5633, Finch Avenue East,
Scarborough, M1B 5K9
(Dr. Lambotharan's Clinic - Basement)
தொடர்புகளுக்கு: அகில் - 416-822-6316
அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.
அனுமதி இலவசம்!

## யாவரும் அறிந்திட இலகு தமிழில், அறிவியல்.

# அந்த மூன்று நிமிடங்கள்

## (பேரண்டத்தின் பரிணாம மாற்றத்தைக் கூறும் அழகியற் கதை)


- கனி -
416.261.1348
ptons@hotmail.ca




7. துணிக்கைகள் காலம் (தொடர்ச்சி)

இப்பொழுது பேரண்டத்தின் வயது 14 செக்கன்கள். என்னென்ன எல்லாம் இப்போது நிகழ்ந்தது எனப் பார்ப்போம். அதற்காக, இந்தப் 14 காலப்பகுதியில் பேரண்டத்துள் ஏற்பட்ட மாற்றங்களினால், பேரண்டத்தின் தற்போதைய சூழலையும் கொஞ்சம் நினைவுக்குக் கொண்டு வருவோம்.

பேரண்டத்துள் அதிக அளவில் போட்டோன்களும், குறைந்த அளவில் இலத்திரன்களும் பொசித்திரன்களும் வந்து விட்டன. கூடவே புரோத்தோன்களும் புரோத்தோன்களின் எண்ணிக்கையிலும் குறைவான நியூத்திரன்களும் அங்கு காணப்பட்டன. இவற்றுடன் ஒன்றுடனும் ஒட்டாமலும் உறவாடாமலும் இருக்கும் துணிக்கையான நியூற்றினோக்களும் அதிக அளவில் இருந்தன. நியூற்றினோக்கள் தவிர்ந்த மற்றத் துணிக்கைகள் எல்லாம் பேரண்டம் கொண்டிருந்த மூவாயிரம் மில்லியன் பாகை கெல்வின் வெப்பநிலையிலேயே இருந்தன. இதுவொரு மிகப் பெரிய வெப்பநிலையல்லவா! இவ்வுயர் வெப்பநிலையால் இத் துணிக்கைகள் ஒளிர்ந்து கொண்டு இருந்தன. அதனால் பிக்பாங்கின் போது இருந்ததைப் போலல்லாதுவிடினும் இன்னமும் பேரண்டம் ஒரொளிர்வுள்ள பொருளாகத்தான் ஒளிர்ந்து கொண்டு இருந்தது.

இவ்விடத்தில் இன்னொரு இயற்பியல் விடயத்தினையும் தெரிந்து கொள்வோம். பேரண்டத்தின் வயது 14 செக்கனாக இருக்கையில் பேரண்டம் ஒளிர்ந்து கொண்டு இருந்தாலும் அதனுள் ஒளிச் செலுத்துகை நிகழவில்லை. அதாவது ஒளியானது ஓர் இடத்தில் இருந்து இன்னோர் இடத்திற்குச் செல்ல முடியவில்லை. ஒளி ஓர் இடத்தில் இருந்து இன்னோர் இடத்திற்கு போட்டோன் துகள்களின் பாச்சலினாலேயே செல்கிறது. பொதுவாகப் போட்டோன்கள் நேர்கோட்டில் செல்கையிலேயே ஒளி ஓர் இடத்தில் இருந்து இன்னோர் இடத்திற்குச் செல்கின்றது. பிக்பாங்கின் பின் 14 செக்கனில் பேரண்ட வெளியினுள் ஏராளமான துணிக்கைகள் இருப்பது எங்களுக்குத் தெரியும். ஆனால் பேரண்ட வெளியோ சின்னஞ் சிறியதாக இருக்கிறது. அதனால் அத்துணிக்கைகள் இடநெருக்கடி யினால் ஒன்றுடன் ஒன்று முட்டி மோதிக் கொண்டு நெருக்கமாகத்தான் இருக்கமுடியும். இப்படியான நிலையில் போட்டோன்கள் ஓர் இடத்தில் இருந்து இன்னோர் இடத்திற்கு நேர்கோட்டிற் செல்வதென்பது வசதியாக இருக்கவில்லை. போட்டோன்கள் மாத்திரமல்ல, எல்லாத் துணிக்கைகளும் பேரண்டத்துள் தம்மருகில் இருந்த ஒவ்வொரு துணிக்கைகளுடனும் மாறிமாறி மோதுண்டு ஒரு குறிப்பிட்ட திசையில் வெல்ல முடியாது இருந்தன. அதனால் பேரண்ட வெளியானது இப்போது ஒளியைக் கடத்தும் ஊடகமாக இருக்கவில்லை.

இன்று நெடுந்தூரத்தில் உள்ள விண்மீனில் இருந்து வரும் போட்டோன்களைக் கொண்டு தான் அந்த விண்மீனை அடையாளம் காண்கின்றோம். இன்றுள்ள பேரண்ட வெளியினூடாக அவை வருகிற போது அவற்றின் பாதையில் தடங்கல் ஏதுமில்லை. அதனாலேயே அந்த விண்மீனைப் பார்க்க முடிகின்றது. அதாவது இன்று எங்களின் பேரண்டம் ஓர் ஒளிபுகவிடு ஊடகமாய் இருப்பதாலேயே தொலைவில் உள்ள பொருட்களையும் காண்கிறோம். அப்படியான ஒளிபுகவிடு ஊடகமாக, தனது வயது 14 செக்கனாக இருக்கையில் பேரண்டம் இருக்கவில்லை, இருக்க முடிய வில்லை.



இந்நேரத்தில் பேரண்டத்தின் வெப்பநிலை வலிந்தவிசைக்கு அதன் காரியங்களைச் செய்வதற்கு இன்னமும் வசதியாக அமைந்து விடுகின்றது. முன்னர் குவாச்சுகள் சிலவற்றை ஒன்றாகக் கட்டிக் கட்றோன்களாக்கிய வலிந்தவிசை இப்போது அக்கட்றோன்களையும் இழுத்து ஒன்றாக வைத்திருக்கக் கூடிய தன்மையைக் கொண்டு விட்டது. அதாவது, பேரண்டத்துள் இருந்த கட்றோன்களாகிய கருவோன்கள் (அவை புரோத்தோன்களும் நியூத்திரன்களும்) சில வற்றை ஒன்றாகக் கட்டி வைக்கக் கூடிய தான வலிமையை வலிந்தவிசை பெற்று விடுகின்றது. எனவே, வலிந்தவிசை தனது வேலையைக் காட்ட, மூவாயிரம் மில்லியன் பாகை கெல்வின் வெப்பநிலைக்குப் பேரண்டம் குளிர்ந்ததும் பேரண்டத்துள் சில அணுக்கருக்கள் தோன்றத் தொடங்கின.

இனி, எங்கள் பாதையிற் தொடருமுன், சில இரசாயன, பௌதீக விடயங்களைத் தெரிந்து கொள்ளுவோம். தனியவே ஒரு புரோத்தோனைக் கருதுவோமாயின் அதுவே ஐதரசன் அணுவின் கருவாகும். இந்தப் புரோத்தோன் பேரண்டத்துள் நியூத்திரன் களையும் விட அதிகமாக இருந்த போதும் அதனை நாங்கள் அப்போது ஐதரசன் அணுக்கரு எனக் கூறவில்லை. ஏனென்றால் அங்கு வலிந்தவிசையின் செயற்பாடு ஏதும் இருக்கவில்லை. ஆனால் மற்ற அணுக்கருக்களின் தோன்றுதலில் வலிந்த விசையின் பங்கு உள்ளது. இப்போதுதான் அது ஏற்படக் கூடியதாகவும் இருந்ததால் பேரண்ட வயது 14 செக்கனையே அணுக் கருக்களின் தோற்றக் காலமாகக் கூறுகின்றோம். இதுகூட ஒரு ஆரம்ப நிலைதான்.

இயற்கையில் 108 அணுக்கள் உள்ளன. இவ்வணுக்கள்தான் பொருட்களைத் தோற்றுவிக்கின்றன. எப்படியெனில், ஒரே மாதிரியான அணுக்கள் சேர்ந்தும், பல வெவ்வேறு வகையான அணுக்கள் சேர்ந்து கூட்டு அணுத் தொகுதியாகவும் இணைய, வெவ்வேறு பொருட்கள் தோன்றுகின்றன. ஆக, இந்த 108 அணுக்களுமே பேரண்டத்தின் சகல பொருட்களுக்கும் மூலமாக உள்ளன. இந்த 108 அணுக்களையும் விடப் பரிசோதனைச்சாலைகளிலும் விஞ்ஞானிகள் வேறு சில அணுக்களைத் தோற்றுவித்து வைத்திருக்கின்றார்கள். அதன்படி இப்போது மொத்தம் 115 அணுக்கள் இருப்பதாக விஞ்ஞானிகள் கணக்குக் காட்டுகின்றார்கள்.

இந்த அணுக்களின் உலகமே சுவாரசியமானது. ஒவ்வொன்றும் தத்தமக்கென இயற்பியல், வேதியல் இயல்புகளைக் காட்டி நிற்கின்றன. இவ்வியல்புகளை அறிந்து கொள்வதற்கு ஒவ்வொரு அணுவும் தமக்குத் தமக்கென இரண்டு சிறப்பான எண்களைக் கொண்டிருக்கின்றன என்கிறார்கள் விஞ்ஞானிகள். ஒன்று அணுவெண், மற்றது அணுநிறை. இவ்விரண்டு பதங்களையும் புரிந்து கொள்வதற்கு அணுக்கருவைப் பற்றித் தெரியவேண்டும். ஒவ்வொரு அணுவின் மத்தியிலும் அணுக்கரு உள்ளது. இந்த அணுக்கருவில் புரோத்தோன்களும், நியூத்திரன்களும் உள்ளன. அணுஒன்றில் உள்ள புரோத்தோன்களின் எண்ணிக்கை யைதான் அவ்வணுவின் அணுவெண் என்கிறார்கள். புரோத்தோன்களினதும் நியூத்திரன்களினதும் மொத்த எண்ணிக்கையை அணுநிறை என்கிறார்கள். இதன்படி, 115 அணுக்களுக்கும் 1இல் இருந்து 115 வரை இலக்கமிட்டு ஒழுங்கான ஓர் அட்டவணையில் அவற்றின் இயல்புகளுக்கு ஒப்ப அடுக்கி வைத்திருக்கிறார்கள் விஞ்ஞானிகள்.

இந்த 115 அணுக்களிலும் முதலாவது அணு ஐதரசன். இது மாத்திரம் நியூத்திரன் இல்லாது தனியவே ஒரு புரோத்தோனை மட்டும் கொண்டுள்ளது. ஐதரசனை அடுத்து இருக்கும் இரண்டாவது அணு ஈலியம். இந்த ஈலியம் அணுக்கருவில் இரண்டு புரோத்தோன்களும் இரண்டு நியூத்திரன்களும் காணப்படுகின்றன. இங்கு எங்களுக்குச் சில கேள்விகள் எழ வாய்ப்பிருக்கிறது. இரண்டாவது அணுவாக ஏன் ஈலியம் இருக்கின்றது? ஐதரசன் அணுவிற்கு அடுத்ததாக, ஒரு புரோத்தோனும் ஒரு நியூத்திரனும் இணைந்ததாக அணுக்கரு ஒன்று தோன்ற முடியாதா? அல்லது புரோத்தோன்கள் இரண்டும், நியூத்திரன் ஒன்றும் அணுக்கருவில் சேர்ந்திருக்க முடியாதா? இன்னமும் புரோத்தோன் ஒன்றும் இரண்டு நியூத்திரன்களும் கூட ஒன்றாக இருந்து ஓர் அணுக்கருவை ஆக்கியிருக்கலாமே? இல்லையா அல்லது ஏன் இல்லை என்ற கேள்விகள் இயல்பிலேயே எழும். அதற்கான பதில்கள் சற்று நேரத்திற் பார்ப்போம்.

ஈலியம் அணுக்கருவில் உள்ள இரண்டு புரோத்தோன்களையும், இரண்டு நியூத்திரன்களையும் ஒரு மிற்றரின் இலச்சம் பில்லியன் பங்கு என்ற மிகச் சிறிய தூரத்துக்குள் வலிந்தவிசை நெருக்கமாகப் பிணைத்து வைத்திருக்கிறது. இப்படியான ஈலியம் அணுக்கரு பேரண்டத்தின் 14 செக்கன் வயதில் அங்கிருந்த புரோத்தோன்களும் நியூத்திரன்களும் இணைந்து தோன்றக் கூடிய நிலையில் இருந்தது. ஆனாலும் அவ்வேளையில் ஈலியம் அணுக்கரு உருவாகவில்லை. அதாவது இரண்டு புரோத்தோன்களையும் இரண்டு நியூத்திரன்களையும் ஒன்றாகப் பிடித்து, ஒரு சின்ன இடத்துள் ஒன்றாகக் கட்டி வைக்க இயற்கையினால் அப்போது முடியவில்லை. ஏனெனில் பேரண்ட விரிவின் விளைவு அதற்கு இடம் தரவில்லை. மேலும் பேரண்டத்தின் உயர் வெப்பநிலையும் இரண்டுக்கு மேற்பட்ட கருவோன்களை ஒன்றாக அண்ட விடவில்லை. மேலும் ஈலியத்தின் அணுக்கருவில் நாலு கருவோன்கள் இருப்பதனால் அது நேரடியாகத் தோன்ற முடியவில்லை. ஈலியம் அணுக்கருவின் தோற்றுகையானது ஒரு தொடர் வினையின் முடிவாக அமைந்தது.

ஈலியம் அணுக்கரு உருவாகும் முறையினைப் பார்ப்போம். அதனை அடுத்த தடவையில் கூறுகிறேன், சரிதானே!


உங்களது கருத்துக்களை விளம்பரத்திற்கோ அல்லது எனக்கோ தெரிவிக்கலாம். எனது புதிய வெளியீடுகளாகிய புவியீர்ப்புப் பற்றிய வியப்பான விடயங்கள், வியத்தகு விண் மீன்கள் ஆகிய நூல்களை விளம்பரம் காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளலாம்.





# மலை உச்சி குளிர்ச்சியாக இருப்பதேன், திபெத்தியர் அதிக காலம் உயிர் வாழ்வதேன்!



சுந்தரம் இந்திரராஜா

நெருப்பின் அருகே நமது விரலைக் கொண்டு சென்றால் நம்மால் அவ்வெப்பத்தை உணர முடிகின்றது. இதுவே அந்த நெருப்பில் இருந்து நமது விரலை கொஞ்சம் கொஞ்சமாக விலத்தும்போது அந்த வெப்பம் குறைந்துகொண்டு போகின்றது. நாம் மலைப்பிரதேசத்தில், அதாவது சூரியனுக்குக் கொஞ்சம் அண்மையில் இருக்கும்போது, நமக்குக் குளிராக இருக்கும், ஆனால் மலைப்பிரதேசத்தை விட்டுக் கீழ் நோக்கிச் செல்லும்போது, அதாவது சூரியனை விட்டு விலகும்போது, வெப்பம் அதிகரிக்கின்றதே, அதுமட்டும் எப்படி? நாம் மலைப் பிரதேசத்தில் இருந்து கீழ் நோக்கிச் செல்லும்போது குளிர் அதிகரிக்கத்தானே வேண்டும்? இதற்குக் காரணத்தை நான் அறியத்தர முன்பு, வெப்பநிலை என்றால் என்ன என்பதைப் பார்ப்போம். நம்மை சுற்றி இருக்கும் காற்று, எண்ணற்ற துகள் களைக் கொண்டது. இந்தத் துகள்கள் அசைந்து ஒன்றுடன் ஒன்று உரசி, முட்டி மோதுவதால் தான் வெப்பம் ஏற்படுகின்றது. எனவே, இந்தத் துகள்கள் ஒன்றுடன் ஒன்று உரசுவதன் வேகம் அதிகரிக்கும் போது வெப்ப நிலையும் அதிகரிக்கின்றது. இதில் கவனிக்க வேண்டிய விடயம் என்னவென் றால், காற்றின் அழுத்தத்தைப் பொறுத்து இந்தத் துகள்களின் வேகம் அதிகரிக் கின்றது. அழுத்தம் கூடினால், துகள்களின் வேகமும் அதிகரித்து, அத்துடன் வெப்ப நிலையும் அதிகரிக்கின்றது. காற்றின் அழுத்தம் குறையும்போது, துகள்களின் வேகம் குறைந்து வெப்ப நிலையும் குறைகின்றது.

இது எல்லாம் இப்போது புரிந்த உங்களுக்கு, இனி ஏன் மலைப் பிரதேசத்தில் வெப்பநிலை குறைவாக இருக்கின்றது என்பது நன்றாகவே புரியும். அதற்குக் காரணம் நாம் மலை ஒன்றில் ஏறி மேலே செல்லச் செல்ல காற்றின் அழுத்தமும் குறைந்துகொண்டே போகின்றது. ஆகவே வெப்ப நிலையும் குறைந்துகொண்டே போகும். இதுவே நாம் மலையில் இருந்து கீழே



செல்லும்போது மறுபடியும் காற்றின் அழுத்தம் அதிகரித்து அத்துடன் வெப்பநிலையும் அதிகரிக்கின்றது. எனவே மலை பிரதேசத்தில் வெப்ப நிலை குறைவாக இருப்பதற்கு சூரியன் காரணம் அல்ல, அங்கே காற்றின் அழுத்தம் குறைவாக இருப்பதுதான் காரணமாக இருக்கின்றது. ஒவ்வொரு 100 மீற்றர் மேலே ஏறினால் 1டிகிரி செல்சியஸ் வெப்ப நிலை குறையும். அதிக உயரத்தில் “மெல்லிய” காற்று அதாவது குறைவான அழுத்தத்தில் குறைவாக பிராணவாயு கிடைப்பதாகும். உங்கள் உடலுக்குத் தேவையான அத்தியாவசியமான அளவு பிராணவாயு பெறுவதற்காக அதிக தடவை சுவாசிக்க வேண்டி வரலாம். இதன் அறிகுறியாக மூச்சுத்திணறல், தலைச்சுற்றல் மற்றும் சோர்வு ஏற்படும். தான்சானியா நாட்டில் உள்ள கிளிமஞ்சாரோ மலை அது ஆபிரிக்காவில் உயரமான மலையாகும். அதன் உயரம் 19,000அடி. உச்சியடியில் கிடைக்கும் பிராணவாயு எமக்குக் கிடைக்கும் பிராணவாயுவின் சரி பாதியாகும்.

விமானப் பயணிகள் மற்றும் விமான குழுவினர் அதிக உயரத்தில் பறக்கும்போது பாதுகாப்பான மற்றும் வசதியான சூழலை உருவாக்கும் வகையில், விமானத்தினுள் காற்று நிரப்பப்படுகிறது. வழக்கமாக விமான வாயு விசையாழி பொறிகளில் (gas turbine engines) இருந்து காற்று கசிந்து கொண்டு காற்றமுக்கத்தை உருவாக்கும். விமானத்தினுள் காற்று குளிராக்கப்பட்டு, ஈரப்பத நிலை சரிசெய்யப்பட்டு, மற்றும் தேவைப்பட்டால் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட சுற்றுச்சூழல் கட்டுப்பாட்டு அமைப்பு இயந்திரங்கள் மூலம் காற்றைச் சுழற்சி செய்வதன் மூலம் சரி செய்யப் படுகிறது. விமான அறை (Cabin) அழுத்தம் வெளியேற்றும் வால்வு (outflow valve) மூலம் கட்டுப்படுத்தலாம். இந்த நவீன தொழில்நுட்ப உதவி காரணமாக விமானத்தில் பயணிப்பவர்கள் பாதுகாப்பாக பயணிக்க முடிகிறது. விண்கலங்களில் (spacecraft), அது உயர் அழுத்தம் உருவாக்கப் பெரும்பாலும் உறைநிலை பிராணவாயு சிலிண்டர்களிலிருந்து (cryogenic tanks) காற்றை எடுத்து சுழற்சி மேற்கொள்ளப்படுகிறது.

வெப்பநிலை நீர்மட்டத்தின் சூழல் காற்றழுத்தத்தைப் பொறுத்துமாறுபடக்கூடியது. நீரானது கடல் மட்டத்தில் உள்ள காற்றழுத்ததில் 100 டிகிரி செல்சியஸ் வெப்பநிலையில் ஆவியாகும் என்பது புரிந்ததொன்று. ஆனால் மலை போன்ற உயரமான இடங்களில் காற்றழுத்தம் குறைவதால், கொதிநிலை (ஆவியாகும் வெப்பநிலை) குறையும். எவரெஸ்ட் மலை உயரம் 29,000 அடி, உச்சியில் நீரானது 70டிகிரி செல்சியஸ் வெப்பநிலையிலேயே கொதிநிலைக்கு வந்துவிடும். எவரெஸ்ட் உச்சியில் கிடைக்கும் பிராணவாயு எமக்குக் கிடைக்கும் பிராணவாயுவின் மூன்றில் ஒரு பங்காகும். கடல் மட்டத்தில் காற்றின் அழுத்தம் 101.325 kPa (கிலோ பாஸ்கல்), ஆனால் எவரஸ்ட் மலையின் உச்சியில் காற்றின் அழுத்தம் 26 kPa (கிலோ பாஸ்கல்) தான், எனவே கொதிநிலை குறைகின்றது. சூழ்ந் துள்ள காற்றின் அழுத்தம் குறைந்தால், நீர்மத்தில் உள்ள அணுக்களோ, மூலக்கூறுகளோ எளிதாக வெளியேறமுடியும், எனவே அங்கு குறைவான வெப்பநிலையே போதும்.

எவரெஸ்ட் மலையில் வைத்து பிரஷர் குக்கர் இல்லாமல் அரிசி, பருப்பை வேக வைக்க முடியாது என்கின்றனர். இது உண்மையா? ஆம்! அதாவது குறைந்த காற்றழுத்தம் உள்ள பகுதியில் நீரின் கொதிநிலையும் குறைவாகத்தான் இருக்கும். காற்றழுத்தம் எவரஸ்ட் மலை உச்சியில் கடல் மட்டத்திலிருந்து மூன்றில் ஒரு பங்குதான். நீரின் கொதிநிலை 70 டிகிரி செல்சியஸ். அரிசி, பருப்பு வேகவைக்க வேண்டுமானால் அதிக வெப்பநிலை தேவை. எனவே எவரெஸ்ட் மலை உச்சியில் நீரின் கொதிநிலை குறைவாக இருப்பதால் அரிசி மற்றும் பருப்பை சாதாரண பாத்திரத்தில் வேக வைக்க முடியாது. ஆனால் பிரஷர் குக்கரில் சமைக்கும்போது சாதாரண வெப்ப நிலையைவிட குக்கரில் அதிக வெப்ப நிலையில் கொதிக்கிறது. குக்கரின் உட்பகுதியில் வெப்ப அழுத்தம் அதிகமாகிறது. இதனால் அரிசி, பருப்பு வெந்து விடுகிறது.


குறைந்த காற்றழுத்தம், பிராணவாயு குறைவான காஷ்மீர் மலைப்பகுதியில், சாதாரணமாக மூச்சுவிட பயணிகள் சிரமப்படுவதுண்டு. லடாக் போன்ற மலை உச்சியில் ரோந்து செல்லும் இந்திய ராணுவ வீரர்கள், மூச்சு விடுவதில் சிரமங்களை சந்திக்கிறார்கள்.



திபெத் பகுதியில் குறைவான பிராணவாயு கிடைப்பதே அவர்கள் அதிக நாட்கள் உயிர் வாழ்வதற்கு காரணம் என்று ஆய்வில் தெரிய வந்தது. அதுமட்டும் எப்படி? உலகிலேயே திபெத்தான் உயர மான பகுதியாகும். கடல் மட்டத்தில் இருந்து 16,000அடி உயரத்தில் திபெத் பகுதி அமைந்துள்ளது. இதனால் அங்கு பூமியின் மற்றப் பகுதிகளைவிட பிராண வாயுவின் அளவு குறைவாக உள்ளது. எனவே திபெத் மக்களுக்கு சுவாசிப்பதற்கு போதிய பிராணவாயு கிடைப்பதில்லை. அதே நேரத்தில் குறைந்த பிராணவாயு இருந்தாலும் சிறப்பாக உயிர்வாழும் அளவுக்கு அவர்களுடைய உடலில் மரபணுக்களில் மாற்றங்கள் ஏற்பட்டு இருக்கிறது. சுமார் 8 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே அவர்களுடைய உடலில் இதுபோன்ற மாற்றங்கள் உருவாகி உள்ளன. இதன் காரணமாகத்தான் அவர்கள் அதிக காலம் உயிர் வாழ்கிறார்கள் என்பது ஆய்வில் தெரிகிறது.

# மரணமும் ஜெனமும்

ஜெனனம் ஒன்று நிகழின் நிஜம் வரும் மரணம்
மனிதனின் மனதைத் துவண்டு போக வைக்கும்
துயரம் மிக்கதே மரணம்



இழப்புக்களையும், சோகங்களையும் தாங்கி விட்ட
நெஞ்சங்களைக் கண்ணீரால்
கோலமிட வைக்கும் மரணம்

ஆறிலும் நிகழலாம் நூறிலும் நிகழலாம் மரணம்
எப்போது, எப்படி வரும் என்பதை
எவராலும் உணர முடியாதது மரணம்

உயிருக்கு ஏற்படுவதல்ல, உடலுக்கு மட்டுமே மரணம்
உறங்குவது போலும் மரணம், பின்
உறங்கி விழிப்பது போலாகும் ஜெனனம்
மறு ஜென்மத்துக்கான மௌனமே மரணம் அது
மரணத்தின் மின்னலில் துவண்டு மறுபடியும்
மழைத்துளியாய் வரும் ஜெனனம்

பாவம் பழிக்கு அஞ்சி வாழ்பவர்கள் எவருக்கும்
மரணபயம் வருவதற்கு வாய்ப்பில்லை அதனால்
பரிபூரணனாக வாழ்ந்து மரணத்தை வெல்லுங்கள்

அஞ்ஞானத்துடன் வாழ்ந்து மரணமடைந்தால் நீ
மறுஜென்மன் அடைவாய், மெஞ்ஞானத்துடன் வாழ்ந்து
மறுஜென்மத்தை அடையாதிரு.



கவிநாதம் பரந்தாமன்

# சாத்திரம் மெய் - சாத்திரி பொய்யாகலாம்!



நா. க. சிவராமலிங்கம்

ஆறு சாத்திரங்களில் ஆறாவதாயும், அறுபத்திநான்கு கலைகளுள் ஏழாவதாயும் சோதிடக்கலை இடம் பெறுகின்றது. சாஸ்திரங்களின் கண் போன்றதாய் இது திகழ்கின்றது.

ஆழம் காண இயலாத மாபெரும் சமுத்திரம் போன்று விடயங்கள் மிகுந்த இக்கலையை முழுமையாய் உணர்ந்தோர் இந்நாளில் இலர். பண்டைக்கால மகரிசிகளும், யோகிகளும், சித்தர்களும் இக்கலையை உருவாக்கி முறைப்படுத்தி, பல பகுதிகளை மாபெரும் பாகங்களாகப் படைத்தளித் தந்துள்ளனர்.

சோதிடக்கலையை இரண்டு வகையாகப் பிரிக்கலாம். ஒன்று கணித முறைகள். மற்றையது பலாபலன் முறைகள் என்பவை யாகும். கணித முறைகளை விரிவாக, விபரமாக, துல்லியமாக விளக்கலாம். ஆனால் பலாபலன்களை விளக்க இயலாது. இதனால், பலாபலன் முறைகளை விளக்கமாகத் தந்தோர் கணித நுட்பங்களைத் தராமல் போயினர். இவ்வாறாக சோதிடக் கலையின் விரிவு இருப்பினும் இதனைப் பல கோணங்களிலும் ஆய்ந்து இயன்றவரை விளக்கங்களை பலரும் படைத்தனர்.

இந்தியாவின் பொற்காலமாய் விளங்கிய குப்தர்கள் காலத்தில் வாழ்ந்த ஆரியப்பட்டர் அதுநாள்வரை வாய் வழியாக சொல்லப்பட்டு கடைப்பிடிக்கப்பட்டு வந்த சோதிடக் கருத்துக்களை வைத்து பஞ்சாங்கம் என்பதனை உருவாக்கினார். வான மண்டலத்தில் சஞ்சாரம் செய்யும் சூரியன், சந்திரன், கிரகங்கள் என்பவற்றின் சலன சஞ்சார நிலைகளை நன்கு ஆய்ந்து, கணக்கிட்டு அமைத்ததே இந்தப் பஞ்சாங்கமாகும். வாரம், திதி, நட்சத்திரம், யோகம், கரணம் எனும் இந்த ஐந்துமே பஞ்ச அங்கமாயிற்று. படைப்பின்போது சோதிடசாஸ்திரத்தை பிரம்மன் கார்க்க முனிவருக்கு உபதேசித்ததாகவும் அவரிடம் இருந்து பல ரிஷிகளும் அறிந்ததாகவும் சொல்லப்படுகின்றது. மேலும் சூரியன் அருண ரிசிக்கு சோதிட சாஸ்திரத்தை உபதேசித்ததாகவும் அதிலிருந்து மற்ற ரிசிகள் கற்று வழிவழியாக உபதேசித்து வந்ததாகவும் சொல்லப்படுகின்றது. இது எப்படி இருப்பினும் பிரம்மன், சூரியன் இவ் இருவருமேதான் சோதிட சாஸ்திரத்தை உபதேசித்த மூலகர்த்தாக்கள். இவர்கள் அறிந்த சோதிடக்கலையை பின்வந்த ஆசிரியர்கள் தத்தம் பாணியில் பொருள் குன்றாது விளக்கமுடன் எழுதிவைத்தனர்.

இவர்கள் மட்டுமன்றி மேலும் பற்பல சோதிட ஆசிரியர்கள் அவ்வப்போது தோன்றி மூல சோதிட நூல்களுக்கெல்லாம் தத்தம் மொழியில் விளக்கவுரைகளை படைத்தளித்தனர். இவற்றுள் பிருஹத் சம்ஹிதை, சாராவளி, ஜாதகாலங்காரம் எனும் சோதிட நூல்கள் குறிப்பிடத்தக்கவை. இவற்றைவிட நூற்றுக்கு மேற்பட்ட சோதிட நூல்களும் உள்ளன.



ஜோதியின் இருப்பிடமே ஜோதிடமாகும். ஜோதியை அறிந்தவனே ஜோதிடன். தெய்வத்தை அறிந்தவன் தெய்வக்ஞன் ஆகிறான். ஜோதிடனுக்கு தெய்வக்ஞன் என்ற சிறப்புப் பெயரும் உண்டு. கணிதம், வானவியல், விஞ்ஞானம், தெய்வீகம் இவை அனைத்தும் கலந்து மருவி இடம் பெற்றதே ஜோதிடமாகும். ஆகவே ஜோதிடம் கற்றுக்கொள்வதும், அதன் பலன் சொல்லப்புறப்பட்டு விடுவதும், அவ்வளவு சாதாரண விடயமல்ல. சுருதி, புத்தி, யுக்தி ஆகிய மூன்றையும் கடைப்பிடித்து அனுபவத்தையும் கைக்கொண்டு ஜோதிடப்பலன்களை உரைக்க முற்பட்டால் தவறின்றி பலிதமாகி ஜோதிடத் திற்கும் ஜோதிடனுக்கும் பெருமை தருவதாக அமையும். ஆகவே சோதிடன் எப்போதும் சோதிட ஆராய்ச்சிகளில் தொடர்ந்து ஈடுபட்ட வண்ணமாகவே இருத்தல் அவசியமாகும். சோதிடர்கள் மக்களை ஏமாற்றும் நிலை இப்பொழுது கடினம் எனலாம். ஏனெனில் சோதிடம் பற்றிய நூல்களை, சஞ்சிகைகளை கற்று மக்கள் நல்ல சோதிட அறிவு உள்ளவர்களாகவே காணப்படுகின்றனர்.

சோதிடக் கலையை நம்பி அதன் மூலம் தங்கள் கடந்த கால சிரமபாதிப்புக்களின் தன்மையை அறியவும் அவற்றிலிருந்து நிவர்த்தி பெறவும் எதிர்காலத்தில் ஏற்பட இருக்கும் பலன்கள் நல்லனவா? தீயனவா? அல்லது இரண்டும் கலந்தனவா? என்று அறியவும் மக்கள் எத்தனை விதமான சோதிட முறைகள் இருக்கின்றனவோ அத்தனை முறைகளிலும் பலன் கேட்க விதம் விதமான சோதிடர்களை அணுகுகின்றனர். குறிப்பிட்ட சிலர் அனைத்து சோதிடர்களையும் அடுத்தடுத்து அணுகி பல சோதிடவகைகள் மூலமும் பலன் அறிந்திட முற்படுகின்றனர். இவ்வாறான முறைகளால் சிலர் திருப்தி அடையாது காலமெல்லாம் மாறி மாறி பல சோதிடர்களை அணுகியவாறு இருக்கின்றனர். ஒரு சிலரை மட்டுமே சிலர் அணுகி கேட்டு பலன் திருப்தியற்றுப் போவதால் சோதிடக் கலையையே இகழவும், வெறுக்கவும் அல்லது புறக்கணிக்கவும் ஆரம்பித்து விடுகின்றனர். எனவே சரியான, துல்லியமான பலன் சொல்லும் சோதிடர்களையே அணுக வேண்டும். இதன் மூலம் சோதிடக்கலையின் உண்மையான பலனை அடையலாம். ஒரு சிலருக்கு குறிப்பிட்ட ஒரு சில சோதிடர்கள் சொல்வது ராசியாக அல்லது பொருத்தமாக அமையலாம். சாதகமுறை, கைரேகை முறை, எண்கணித முறை, நாடி சோதிடம், வசியமுறை, கிளி சோதிடம், ஆரூடசோதிடமுறை, அருள் வாக்கு, சாமுத்திரிகா இலட்சணம், இறை சாத்திரம், மனையடி சாத்திரம், குடுகுடுப்பை முறை என்று சோதிடத்தில் பல பிரிவுகள் உண்டு. சோதிடம் கற்றோர் எல்லோரும் சோதிடர் ஆகிவிட முடியாது. சோதிடருக்கு இருக்க வேண்டிய நற்குணங்கள் பின்வரும் பாடலில் கூறப்பட்டுள்ளன.

அருணோதயம் எழுந்து காலைக் கடன் முடித்து  
ஆற்றில் ஸ்நானம் செய்து சுத்தமாக  
மறுவிலா பீதாம்பரம் அணிந்தே வெண்ணீறு  
மாட்சிமையாய் திருமேனி தனிலணிந்து  
குருவருளால் சிவஸ்துதி செய்து கொண்டு  
குற்றமிலா மான் தோலாசனத்திலிருந்து  
தருமநெறி தவறாமல் ஜாதகர்கட் கோதும்  
தரணியில் ஜோதிடவல்லோர் நிலைமைதானே

மேற்கண்ட பாடலில் சோதிடர்களின் தூய்மை, ஒழுக்கவிதிகள், குணாதிசயங்கள் கூறப்பட்டுள்ளன. சோதிடர் ஆவதற்கு பூர்வ புண்ணியபலன் வேண்டும். ஐயம், திரிபு, அறியாமை ஆகிய முக்குற்றமற சோதிடக் கலையைக் கற்று, கற்றதை பயன்படுத்தி, ஜாதகத்தை முறையாகக் கணித்து பலன் சொல்ல வேண்டும். ஒளிப்பு மறைப்பு இன்றி உள்ளதை உள்ளவாறு எடுத்துக் கூறும் போது அத்தகைய சோதிடர் மதிப்பு பெறுகின்றார்.

மனித வகுப்பில் பிறந்து வளர்ந்திட்டாலும்  
மனதிலே துர்க்குணங்கள் அணுகிடாமல்  
இனிதான ஜீவ காருண்யத் தோடும்  
ஈஸ்வர தியானத் தோடிருக்க வேண்டும்  
முனிவில்லா சாந்தமன தாயிருந்து  
முகமலர்ச்சியாகவே ஜாதகர்க்கு  
கனிவுடனே பலாபலனை சொல்வோர் தன்னை  
காசினியில் ஜோதிடர் என்று உரைக்கலாமே

சோதிடம் ஒரு தெய்வீகக் கலை. அதனை சொல்பவர்களே தம்மை புனிதப்படுத்த வேண்டும். அவர்கள் உண்மை உள்ளவராகவும், எதையும் மறைக்காமல் பேசுபவராகவும் இருக்க வேண்டும். சூது, வாது, குரோதம், காமம் கடந்தவராக இருக்க வேண்டும். அனைவரிடமும் நற்பெயர் பெற செயல்பட வேண்டும். கருணை உள்ளத்துடன் முக மலர்ச்சியோடு சாந்தமான, சாத்வீகமான முறையில், எளிமையான வசன நடையில், பலாபலன்களை எடுத்துக்கூற வேண்டும். எனவே வாய்மை, தூய்மை உள்ளவர்களாக, நவக்கிரகங்களை துதித்து, வேகமின்றி விவேகத்துடன் சாஸ்திர ரீதியான பலன்களை முறையாக கணித்தாராய்ந்து சொல்வதே சோதிடர்களின் கடமையாகும். ஏட்டிக்குப் போட்டியாகப் பலன் சொல்வதும், பிறசோதிடர் கூறிய பலனை வேண்டுமென்றே புறக்கணித்து தன் இஷ்டம்போல பலன் சொல்வதும் கூடாது. சோதிடர்கள் தமது கடமையைச் சரிவரச் செய்யும்போது சோதிடக்கலைபற்றி மக்கள் கொண்டிருக்கும் அவநம்பிக்கை அகலும்.


mhc

MOHAN
HOMEOPATHIC CLINIC
& MASSAGE CLINIC

- கழுத்து,
- முதுகு நோவு
- வாகன விபத்து
- மன அழுத்தம்
- விளையாட்டுக் காயங்கள்
- தலையிடி, தலைவருத்தும்

போன்ற நோய்களிற்கு அழையுங்கள் டாக்டர் ஜே. மோகன்



Dr. J. Mohan
D.H.M.S., N.H.C.

WE OFFER CONSULTATION
REGARDING ALL HEALTH PROBLEMS INCLUDING:

• STRESS • TENNIS ELBOW PROBLEM
• SKIN PROBLEM • TREAT WITH MASSAGE THERAP
• RESPIRATORY PROBLEMS • ALLERGIES
• DIGESTIVE PROBLEMS • SEXUAL PROBLEMS
• VARICOSE VEINS • SEXUAL PROBLEMS
• BACK PROBLEM /NECK PROBLEM • CHOLESTEROL • TUMOR
• FOOT PROBLEM

HOMEOPATHIC TREATMENT ABOUT FOLLOWING

| | | | |
|---|---|---|---|
| Cough | Gout | Diabetes | Stumatitis |
| Flu | Arthritis | Cystitis | Colitis |
| Depression | P.M.S | Cancer | |
| Anxiety | Leucorrhea | Prostatitis | |
| Asthma | Migraines | Obesity | |
| Tonsillitis | Hair Loss | Hemorrhoids | |

Also other Acute & Chronic Problems
HOMEOPATHIC PRACTITIONER

TEL: 416-298-7537/416-291-3022

5200 Finch Ave, East Suite 210
At Middle Field, Scarborough, M1S 4Z4

# இன்னல் நீக்கும் இயற்கை - 21

- அகணி -
authorakani@gmail.com



இந்திய நாட்டில் தொன்மையான மருத்துவ முறைகளில் ஆயர்வேத மருத்துவமும் ஒன்றாகக் கருதப்படுகின்றது. ஆயர்வேதம் எனப்படுவது ஆயுளின் தத்துவங்களை அறிந்தும், உடல் நலத்தை நோய்கள் அணுகாத வண்ணம் பாதுகாத்து ஆயுளை நீடிக்கச் செய்வதற்கான முறைகளையும், நோய் தீர்க்கும் வழிமுறைகளையும் கூறுவது என்று சொல்லப்படுகின்றது. ரிக்வேத காலத்திலும், மகாபாரதம், இராமாயணம் போன்ற புராணங்களின் காலத்திலும் ஆயுள்வேத முறை இருந்ததாக அறியப்படுகின்றது. ஆயர்வேத தத்துவத்தைப் பற்றி நூல்கள் எழுதியவர்களான சரகர், சுச்ருதர், காசிபர், வாக்படர் ஆகியோர் மருத்துவத்துக்கு மூலதத்துவமாக விளங்கும் திரி-தோஷ தத்துவத்தை முக்கியமாகக் கருதுகின்றார்கள். உடம்பில் உடல் நலத்தைப் பேணும் மூன்று தாதுக்களான வாதம், பித்தம், கபம் போன்றவை உடல் நலம் குன்றும்பொழுது கோளாறுகளாக (தோஷங்களாக) மாறுகின்றன. இரண்டு தாதுக்கள் கோளாறு அடைந்தால் துவந்த தோஷம் என்றும், மூன்று தாதுக்களும் கோளாறு அடைந்தால் சன்னி பாதம் அல்லது சன்னி என்றும் கூறப்பட்டுள்ளது. ஆயுர்வேத மருத்துவ முறையில் 'நிதானம்' என்ற சொல்லுக்கு மூலகாரணம் அல்லது நோய்க் காரணம் என்று பொருள் கூறப்படுகின்றது. கி.பி 7ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த மாதவர் என்ற புலவர் 'நிதானம்' பற்றி 'மாதவ நிதானம்' என்ற புகழ்பெற்ற நூலை எழு-தினார். ஆயுர்வேதத்தில் முன்னோர் குறிப்பிட்ட கருத்துக்களைப் பின்பற்றியும், தனது கருத்துக்களை இணைத்தும் வைத்திய சிந்தாமணி என்ற பெயரில் ஒரு நூலை பூவல்லபேந்திரர் என்ற பெயராலும் அழைக்கப்பட்ட வல்லபாசாரியார் எழுதியுள்ளார். இந்த நூலின் பிரதியைப் பார்க்கும் வாய்ப்பு கிட்டியது. இந்த நூலில் பல நோய்களுக்கான இயற்கை வழிமுறைகள் எடுத்துக் கூறப்பட்டுள்ளன.

இதில் கூறப்பட்டுள்ள முறைகள் எல்லாம் இலகுவானவை அல்ல. இதில் கூறப்படும் மூலிகைகள் சில எளிதாகக் கிடைப்பதில்லை. மருந்து தயாரிக்கும் முறையும் சற்று சிரமமானது. ஆனாலும் சில இலகுவான வழிமுறைகளும் இந்த நூலில் உள்ளன. உதாரணமாக வாந்தி நிற்பதற்கு ஓர் இலகுவான வழிமுறை கூறப்பட்டுள்ளது. சாதிக்காயைப் பொடிசெய்து கொண்டு வெட்டிய எலுமிச்சம் பழத்தில் அந்தப் பொ-டியைப் பூசியபின்னர் திரும்பவும் எலுமிச்சம் பழத்தை மூடியவாறு சிறிதுநேரம் விட்ட பின்னர் சாதிக்காய்ப் பொடி சேர்ந்த எலுமிச்சம் சாற்றை உறிஞ் சிக் குடித்தால் வாந்தி கட்டுப்படும் என்று இந்த நூலில் கூறப்பட்டுள்ளது.

நற்சீரகம் 175 கிராம் எடுத்து நன்றாக இடித்துச் சூரணமாக்கி சீரகத்துக்கு சம எடையில் சர்க்கரை சேர்த்து அனலில் சூடாக்கிச் சாப்பிட்டால் வயிற்றுக் கடுப்பு நீங்கும் என்று கூறப்பட்டுள்ளது.



துளசி இலையை வாயில் போட்டு பசும் வெண்ணெய் சேர்த்து விழுங்கினால் வாந்தி கட்டுப்படும் என்ற வழிமுறையும் இந்த நூலில் கொடுக்கப்பட்டுள்ளது.

இப்பொழுது மஞ்சளில் (Turmeric) உள்ள மருத்துவக் குணங்களைப் பற்றி ஆராய்வோம். மஞ்சளின் விஞ்ஞானப் பெயர் கேர்குமா லொங்கா (Curcuma Longa) மரமஞ்சளை எடுத்து இரத்தம் கட்டி ஏற்படும் வீக்கத்திற்குப் பூசிவரக் குணமாகும். பத்து கிராம் மரமஞ்சள் தூளை எடுத்து நூறு மில்லி லீற்றர் தண்ணீரில் போட்டுக் காய்ச்சி வடிகட்டிக் குடிக்க உடலில் உள்ள உட்காய்ச்சல் குணமாகும். காய்ச்சலுக்குப் பின்னர் உள்ள சோர்வு நீங்கும். மஞ்சளுடன் வேப்பிலை சேர்த்து அரைத்துப் பூசி குளிர் நீரில் கழுவி வந்தால் முகப்பருக்களில் சீழ் பிடிக்காது. மஞ்சளுடன் மஞ்சள் இலையுடன் சேர்த்து பாசிப்பயறு மாவோடு கலந்து உடலில் பூசிக்குளித்தால் உடலில் உள்ள சுருக்கம் குறையும். கொதிநீரில் மஞ்சள் போட்டு ஆவியைப் பிடித்துவர முகம் பொலிவு பெறும். மஞ்சள் தூளை தயிரில் கலந்து கழுத்து, முழுங்கை, முழங்கால் போன்ற இடங்களில் பூசிவர அந்த இடங்களில் உள்ள கருமை நீங்கும். மஞ்சளில் நிறைந்தளவு நோய் எதிர்ப்புச் சக்தி உள்ளது. மஞ்சளை வெந்நீரில் கலந்து குடித்து வர மூட்டுவலி குறையும். இவ்வாறு குடித்து வர சர்க்கரை நோய் வருவதைக் குறைக்கும் என்றும் கூறப்படுகின்றது. செரிமானப் பிரச்சினைகள் வராமல் தடுக்க மஞ்சள் உதவுகின்றது. மஞ்சள் கல்லீரலில் உள்ள நச்சுப் பொருட்களை வெளியேற்றி கல்லீரலில் உள்ள பாதிக்கப்பட்ட கலங்களைப் புதுப்பிக்க உதவும். பித்தப்பையின் வேகத்தை அதிகரிக்கும். ஞாபக மறதியில் இருந்து விடுபட அருமையான மருந்தாக மஞ்சள் உள்ளது என்று கூறப்படுகின்றது. இரத்த நாளங்களில் கொழுப்பு படிவதைக் குறைக்கும். இதயத்தின் ஆரோக்கியத்துக்கு உதவும். புற்றுநோய் வராது தடுக்கும் சக்தியும் கொண்டது. மஞ்சள் தூளைப் பாலில் சேர்த்துக் குடிக்க காய்ச்சல், சளி, இருமல், தொண்டை நோ வராது தடுக்கும். உடலின் சருமம் பளபளப்பாகும்.

உடலில் உள்ள நோய் எதிர்ப்புச்சக்தியைக் கூட்டும். உடலின் எடை குறைய இஞ்சி, பால், மஞ்சள் சேர்த்துக் குடிக்கலாம். சத்திரசிக்சை செய்த பின்பும் அதற்கு முன்பும் மஞ்சள் உண்ணக் கூடாது என்பதையும் கவனித்துக் கொள்ளவும். பித்தப்பைக் கற்கள் பிரச்சினை உள்ளவர்கள் மஞ்சளைத் தவிர்க்க வேண்டும். குழந்தை பெற்றுக்கொள்ள இருக்கும் தம்பதிகள் மஞ்சளை அதிகளவில் உண்ணக் கூடாது. ஆதரற்றீஸ் எனப்படும் மூட்டுவலி உள்ளவர்கள் மஞ்சளை உணவில் சேர்த்துச் சாப்பிட்டு வருவது நல்லது. உடலில் உள்ள வைரஸ், பக்ரீரியா போன்றவற்றை அழிப்பதற்கு மஞ்சள் மிகவும் நல்லது. வயிற்றுப் புண்ணைக் குணப்படுத்த மஞ்சள் உதவும். இரத்தத்தை மஞ்சள் சுத்திகரிக்கும் தன்மை கொண்டது. மஞ்சளைச் சுட்டு வரும் புகையைச் சுவாசித்தால் மூக்கடைப்பு நீங்குவ-தோடு சளியும் குறையும். கஸ்தூரி மஞ்சள் சரும நலத்திற்கும் அழகுக்கும் மிகவும் நல்லது. கஸ்தூரி மஞ்சளுடன் துளசி இலை சேர்த்து அரைத்துப் பூசிப் பின்பு குளித்தால் நோய்களில் இருந்து நிவாரணம் கிடைக்கும்.

மஞ்சளில் உள்ள மருத்துவ குணங்களோடு மஞ்சளை எந்தச் சூழ்நிலையில் பயன்படுத்தக் கூடாது என்றும் இன்று உரையாடிக் கொண்டோம். எல்லா இயற்கை மருத்துவப் பொருட்களும் அதிகளவில் பயன்படுத்தினால் அதனால் தீமையும் ஏற்படலாம் என்பதை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள்.

அடுத்த இதழிலும் எனது தேடலில் கிடைக்கும் புதிய தகவல்களுடன் தொடர்ந்து உரையாடுவோம். உங்கள் எண்ணங்களையும் தெரியப்படுத்துங்கள். மீண்டும் சந்திப்போம் என்று கூறி விடைபெறுகின்றேன்.


**அன்பான விளம்பரம் வாசகர்களே!**
இயற்கை வளங்களால் எவ்வாறு இன்னல் நீங்கி வாழலாம் என்று அறியும் பொருட்டு எழுந்த தேடலில் கிடைத்த தகவல் பதிவாக அசைந்து கொண்டிருக்கும் இந்தத் தொடர் கட்டுரை எமது பொது அறிவை விருத்தி செய்யும் நோக்குடன் எழுதப்படுகின்றது. இந்தக் கட்டுரையில் கூறப்படும் கருத்துக்கள் இயற்கை சார்ந்து இருந்தாலும் உங்கள் உடல் நிலைக்கேற்ப பொருத்தமான மருத்துவ கருத்துக்களாக அமைந்துவிடாது என்பதை கவனத்தில் எடுத்துக் கொள்ளுங்கள். எப்பொழுதும் பொருத்தமான வைத்திய ஆலோசனையை மேற்கொள்ளுங்கள் என்று வலியுறுத்திக் கூறிக் கொள்கின்றேன். ஆனாலும் நாம் இயற்கையோடு இணைந்து வாழ்வதற்கான தகவலையும், விழிப்புணர்வையும், ஆரோக்கியமாக வாழ்வதற்கு வேண்டிய பொதுவறிவையும் இந்தக் கட்டுரை வழங்கும் என்று நம்புகின்றேன்.

நாமும் நன்றாக வாழ்வோம். நம்மைச் சூழவுள்ளவர்களும் நன்றாகவே வாழட்டும்.

(தொடரும்)




ARISTO PEST CONTROL
Set Your Mind At Rest, We Will Get Rid Of The Pest
24HRS / 7 DAYS EMERGENCY SERVICES & ANIMAL REMOVAL
• Cockroach • Bedbug • Animal Control • Mice
• Bird Control • WASPS • Hornets Removal • Rat



Same Day Service - Residential, Commercial, Industrial
We Also Provide No Obligation Inspection For Commercial & Residential Clients
Written Guarantee & Discounted Rates - Call Now 647.339.3926
Government Licensed Exterminator
(We Speak English, Gujarati & Hindi)
info@aristopestcontrol.ca / www.aristopestcontrol.ca

# எம்மை நாம் பாதுகாப்பது எப்படி?

## 'நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்'

# உணவே விஷமாகலாம்

வைத்திய கலாநிதி
**கே.ரி. கோபால்**
D.A.M.S R.A.M.P (Sri Lanka)
C.D.S - C.N.H.P (Canada)
*Tel.: 647.456.9796*



உணவுப் பொருட்களில் இயற்கையாக அமைந்துள்ள சத்துக்களின் காரணமாகவும், செயற்கையான வேறு காரணத்தினாலும் உணவுப்பொருட்கள் விஷத்தன்மை ஆக லாம். மிக அவதானம் வேண்டும். கேசரிப் பருப்பினால் (மைசூர்) ஏற்படும் வியாதிகள் மத்தியகிழக்கு நாடுகள், தென்கிழக்கு ஆசிய நாடுகள், பங்களாதேஷ் மற்றும் இந்தியா போன்ற இடங்களில் பரவலாகக் காணப்படு கின்றது. உரங்களையும், பூச்சிக் கொல்லி மருந்துகளையும் அளவுக்கு மீறி அதிக மாகப் பாவிப்பதினால் உணவுப் பொருட்கள் விஷத்தன்மையாகி விடுகின்றன. பொதுவாக சுகாதாரமான காற்று, வெளிச்சம் இன்மை காரணத்தினால் உணவுப்பொருட்கள் பக்றீரி யாவினால் பாதிக்கப்படுகின்றன. பருப்பு வகை சிலவற்றில் உள்ள புரோட்டீன் இரத் தத்தில் உள்ள செஞ்சீவ அணுக்கள் (R.B.C) ஒன்றோடு ஒன்றாக ஒட்டித் திரளச் செய்கின் றது என அறியமுடிகின்றது. இத்தன்மையி



னால் இரத்த சோகைக் குடல், இரப்பையில் இரத்தக் கசிவு ஏற்படலாம் எனவும் கூறப்படு கின்றது. மேலும் இந்தியாவில் பயன்படுத்தப் படும் பருப்பு வகையில் நஞ்சுத் தன்மை உண்டு என்பதை ஆய்வு மூலம் கண்டுபிடித் துள்ளனர். உழுந்து, சோயாபீன்ஸ் போன் றவை குடலில் காபன்ஒக்சைட்டை உற்பத்தி செய்து வயிற்றுப் பகுதியில் தாக்கத்தை ஏற்படுத்துகின்றது எனவும் அறியமுடிகின் றது. பருத்தி விதையில் 'காஸி போல்' (Gossypol) என்ற பொருள் வயிற் றோட்டம், இருதயத் துடிப்பில் சீரற்ற நிலை ஏற்படு வதாகவும் அறியமுடிகின்றது. மேலும் நச்சுப் பொருள் உள்ள விதைகள் மற்றும் உணவுத் தானியங்கள் என்பவற்றை கலப்பதால் உடல்நிலை பாதிப்பு அடைகின்றது.

காளான்களில் சில நச்சுத்தன்மை உண்டு எனவும் இதன் பொருட்டு வாந்தி, வயிற்றுக் கோளாறு போன்றவை ஏற்படலாம் எனவும் அறிய முடிகின்றது. மாமிச உணவுவகைகள், பால், பால் பொருடகள், இனிப்பு வகைகள் என்பன பக்றீரியாவினால் பாதிப்பு அடை கின்றது. இந்நிலை 48 மணித்தியாலத்திற் குள் தீங்கை ஏற்படுத்துவதாகவும் மூன்று நாட்களுக்கு நீடிக்கும் தன்மை உண்டு எனவும் அறிய முடிகின்றது. இதில் எமக்கு அவதானம் வேண்டும். அடுத்து எண்ணெய் வகைகளைப் பார்ப்போம். இவற்றில் நச்சுத் தன்மை இருப்பதினால் அவதானம் வேண் டும். இது இயற்கையான பொருட்கள் மூல மாகவும், எண்ணெய் தயாரிக்கும் தன்மை, முறையாலும் ஏற்படலாம். பெரும்பாலும் உரங்கள் அதிகம் பாவிப்பதினால் எண் ணெய் வித்துக்கள் நுண்ணுயிர் தாக்கத்தி னால் உருவாகின்றது. மற்றும் பூச்சிகள், காளான் வகைகள் மற்றும் அசைபோடும் உயிரினங்கள் நம் உணவில் இரசாயன நச்சுப்பொருள் ஒன்றுசேரக் காரணமாகின்றது. மேலும் இவற்றைத் தயாரிக்கும் தொழில் சாலைக் கழிவுகளின் வழியாகவும், உலோ கங்கள் மூலமும் உணவுப் பொருட்கள் நச்சுத்தன்மையை அடைகின்றன.

மேலும் உணவுப் பொருட்களை அறுவடை செய்வதற்கு முன்னர் அல்லது சேமித்து வைத்திருக்கும் போது பூச்சிவகைகள் தீங்கை விளைவிக்கும் தன்மை உண்டு. எனவே எதற்கும் நாம் அவதானமாக இருப்பது நன்மை பயக்கும்.

---

## காப்புறுதி...

12 ஆம் பக்கத்தொடர்ச்சி

சட்டரீதியாக வழங்கப்பட்டுள்ளது. அவர்களி டம் காப்புறுதி ஒப்பந்தம் இல்லையேல் நீதி மன்றத்தினூடாக அறவிட முயற்சிப்பார்கள்.

பரிசோதனைக்காக ஓட்டிப் பார்க்கும்போது மட்டுமல்லாது அவர்களிடம் வாகனத்தினை ஒப்படைத்து பின்பு, வாகனத்திற்கு ஏற்படும் சகல பாதிப்புகளுக்கும் அவர்களும் அவர்க ளுடைய காப்புறுதி கம்பனியுமே பொறுப் பாகும்.

இந்த நட்டஈடு கோரல் காரணமாக தங்க ளின் வாகன காப்புறுதியின் விலை என்பது எந்த சந்தர்ப்பத்திலும் பாதிக்காது. தங்கள் வாகனத்தினை கட்டி இழுத்து செல்லும் போது ஏதாவது பாதிப்புக்கள் வந்தாலுமே (Towing Time) இதே மாதிரியான ஒழுங்கு விதிகளே பின்பற்றப்படும்.

ஆனால் இங்கு ஒரு முக்கிய விடயம். தொழில் அனுமதிப்பத்திரம் பெற்று, காப்புறுதி என எவையுமில்லாமல் இயங்கும் மெக்கா னிக், வாகனம் திருத்தும் நிலையங் களோடு ஒருவர் வர்த்தக உறவுகளை மேற் கொள் ளும்போது இதே மாதிரியான பிரச்சினைகள் ஏற்பட்டால் இழப்புகளை அவர் ஏற்பதைவிட வேறு வழியில்லை. அத்தகைய நிலையில் இருப்போருக்கு எதிராக சட்ட நடவடிக்கை களை எடுக்கலாம், ஆனால் அவர்களும் வங்குரோத்து நிலையில் இருந்தால் ஒன்றுமே செய்ய முடியாது.

---

## இரத்தப்...

13 ஆம் பக்கத்தொடர்ச்சி

படும். இதில் முப்பரிமாண (3D Pictures) எடுக்க நேரிடும். அதேபோல Ultra sound மூலம் சிறுநீரகம், ஈரல், மண்ணீரல் என்பன வற்றில் புற்றுநோய் கலங்கள் உள்ளனவா என அறிய முடியும்.


ஒருவருக்கு இரத்தப் புற்றுநோய் வந்துவிட் டால் அதற்குரிய சிகிச்சைகளும் பலவாகும். முதலில் என்னவகையான Leukemia உள்ளதென அறிதல் அவசியம். நோயாளி யின் வயது, மரபியல் ஒழுங்கீனம் (Genetic Abnormalities) பொதுவான உடல் நிலை பற்றி அறியப்படும். இதற்குரிய சிகிச்சை முறைகளும் பலவாக அமையும். முக்கிய மாக மருந்து சிகிச்சை (Chemotherapy) செய்யப்படும். குருத்தணு (Stem cell) மாற்றம் செய்ய வேண்டிய நிலை இருக்கும். 55 வயதுக்கு கீழ் உள்ளவர்கள் மட்டுமே இச் சிகிச்சையினை மேற்கொள்ளலாம். கதிருட் டல் சிகிச்சை (Radiation Therapy) மூலம் புற்றுநோய் பரவாமல் பார்த்தல், இன்னும் தேவையான பல சிகிச்சை அளித்தல் வேண்டும்.

**இந்த மாதிரி புற்றுநோய் 4 வகைப்படும்.**

1. Acute lymphocytic leukemia (All)
2. Acute Myelogenous Leukemia (AML)
3. Chronic Lymphocytic leukemia (CLL)
4. Chronic Myelogenous Leukemia (CML)

இவை எல்லாம் தீவிரமானதான சில புற்று நோய்களும், நீண்டகால புற்று நோய்களு மாகும். சகல சிகிச்சைகளும் இப்பிரிவுக்குள் உள்ள மாதிரியாகவே இருக்கும். பொது வான சிகிச்சைகள் அனேகமாக ஒன்றாகவே இருக்கும்.

புற்று நோய் உள்ளோர்க்கு ஆதரவான, துணையான சில செயற்பாடுகள் அவசியம். உடல் பிரதிமையும் (self immage), சுயநம் பிக்கையும் வேண்டும். களைப்பு போக்கப்பட வேண்டும். தொற்று நோய் வராது பார்க்க வேண்டும். வயிற்றில் இரத்தப்போக்கு இல் லாமலும், மன எழுச்சி பற்றிய அவதானமும் தேவை.




பொதுவாக சுயகணிப்பும், உடல் பிரதிமை யும் இந்நோயாளிகளை வருத்தக் கூடும். புற்றுநோய் மருந்து சிகிச்சை இடம்பெறுவ- தால் தலை மயிர் கொட்டுதல், தோல் பிரச் சினை, உடற்பாரம் கூடுதல் என்பன கவனிக் கப்பட வேண்டும். களைப்பு ஏற்படும்போது உடல் மெலிவும் ஏற்படும். சிவப்பு கலங்கள் குறைவதால் எலும்பு மச்சையும் பாதிப்புறும். எனவே சத்துள்ள உணவு, இரும்புச்சத்து குளிசைகள், மனச்சோர்வு எதிர்வு மருந்து கள், நித்திரை கொள்வதற்குரிய மருந்துகள் தேவை.

பொதுவாக புற்றுநோயாளர்களுக்கு தொற்று நோய் ஏற்படலாம். இந்தவேளையில் நோய் எதிர்ப்பு மருந்துகள், வைரஸ், பங்கஸ் எதிர் ப்பு மருந்துகள் வழங்கப்படலாம். பொதுவாக புற்றுநோய் உள்ளவர்கள் பதற்றம், மன அழுத்தம் உள்ளவர்களாக இருப்பர். இவர் களது சாதகமான எண்ணம், பொருளாதாரம், வேலை, உறவுமுறைகள், பாதிப்புறலாம். சிலர் இப்புற்று நோய் திரும்பி வரலாமோ, குடும்பத்தில் வேறு யாருக்காவது வந்து விடுமோ, எனது சுயமதிப்பை இழந்து விடு வேனோ, தோற்றத்தில் மாறி விடுவேனோ, வாழ்க்கை மாறிவிடுமோ எனக் கவலைப் படுவார்கள்.

2017இல், 6200 கனேடியர்கள் Leukemia என்னும் இரத்தப் புற்றுநோயாளர்களாக உள்ளனர். இவர்களில் 2900 பேர் இறக்கக் கூடும் எனப்படுகிறது. 3600 ஆண்கள் மேற் படி நோயால் பீடிக்கப்பட்டுள்ளனர். இவர் களில் 1650 பேர் இறக்கக் கூடும். 2600 பெண்கள் மேற்படி நோயால் பீடிக்கப்பட்டுள் ளனர். இவர்களுள் பெண்கள் 1250 பேர் இறக்கக் கூடும். பொதுவாக 53 ஆண் கனேடியர்களில் ஒருவருக்கு இந்நோய் உள் ளது. இதேவேளையில் இதனோடு தொடர் புள்ள Leukemia, Lymphoma, Myeloma ஆகிய பிரதான புற்றுநோயாளர்கள் 11,000 பேர் உள்ளனர். இதில் Leukemia மட்டும் 34 வீதமாகும். ஒவ்வொரு 25 நிமிடமும் ஒருவர் கனடாவில் இரத்தப் புற்று நோயா ளராகக் கணிக்கப்படுகின்றார். ஒவ்வொரு 75 நிமிடத்திற்கு ஒரு தடவை ஒருவர் இதனால் இறக்கிறார் என அறியப்பட்டுள்ளது.

Leukemia என்ற புற்றுநோய் வகை பலவாக உள்ளதென்பதால் ஒவ்வொன்றுக்கும் ஒவ் வொருவகை சிகிச்சை தேவையாகும். அத் துடன் 0-14 வயதுக்கு உட்பட்ட சிறுவர்களு க்கு பெரியவர்களைவிட 12 மடங்கு கூடுத லாக இப்பாதிப்பு ஏற்பட்டுள்ளது. எனவே புற்றுநோய் வராது பாதுகாப்பதே முக்கிய மாகும். மீளமீள சிகரட் புகையில் வாழ்வது, Benzene என்னும் இரசாயனத்துடன் வாழ் வது, வேலைத்தளத்தில் ஏற்படும் மாசுக ளுடன் வாழ்வது தவிர்க்கப்படல் வேண்டும். சிலரது புற்றுநோய் அவர்களது மரபணுக் களுடன் தொடர்புடையதாகும்.



**சந்திரமௌலீஸ்வர சிவாலயம்**

தினமும் ஆறுகால பூஜைகள் நடைபெறும்
ஆலயம் திறந்திருக்கும் நேரம்

வெள்ளி, சனி, ஞாயிறு மற்றும் விசேட தினங்களில் காலை 7am - மாலை 9pm வரை
திங்கள் - வியாழன் - காலை 7am - 2pm மாலை 5pm - 9pm

விசேட தினங்களில் பூஜை நேரங்களில் மாற்றங்கள் ஏற்படலாம். ஆலயத்தை அழைத்து பூஜை நேரங்களை நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள்

**Tel: 416 . 754 . 7338 / 416 .724 .7480**

**3011 Markham Road , Unit 62 & 63 (North of McNicoll Ave.), Scarborough**

# Stayner West
## New Townhouse Development by
# Aspen Ridge Homes
## at Atkinson Street, Stayner










## Completion Fall 2019

- One time assignment
- 5 FREE appliances
- $3500 in upgrades
- $30,000 Total Deposit

- 1 Hour 15 Min from Brampton
- 15 Min from Wasaga Beach and Collingwood
- 30 Min from Barrie

## For More info. Call:

## 416.315.9397/ 416.321.6969

"கனவு உங்களுடையது பொறுப்பு எங்களுடையது"

HOMELIFE HIGHER STANDARDS

## HomeLife / GTA Realty Inc. *Brokerage

5215 Finch Ave. E., #203, Toronto ON.

*Independently Owned & Operated

AWARD WINNING BBQ and WING Tap & Grill.



For Sale $245,000

HORN DAWGS BBQ
TAP & GRILL



- Excellent opportunity, turnkey operation with trained staff.
- Average sales approx. $700,000/yr. Potential for sales increase with additional hours.
- Fully equipped with over $80,000 spent in improvements in last year.
- Licensed for 85 seats. Potential to add patio (drawings available).
- Located in busy Tim Hortons Plaza and across from Arena and Fairgrounds.
- 800 new homes being built in the immediate area.
- Excellent lease. MLS#E4043386.

Serious Inquiries ONLY

Contact: Peter Flanagan 905-435-7070. peterflanagan29@yahoo.com


# பசுமை நிறைந்த செஞ்சீனா

**- வே. விவேகானந்தன் -**

கடந்த இதழ் தொடர்ச்சி...

மறுநாள் காலை, முத்துக்களால் நகைகள் செய்யும் இடத்தைப் பார்க்கச் சென்றோம். கடல்நீர் முத்துக்கள், நன்னீர் முத்துக்கள் என இருவகை முத்துக்களில் நன்னீர் முத்துக்களே அங்கு பயன்படுத்தப்படுகின்றன. காட்சி அறையில் பல்வகை வர்ணங்களிலும், அளவுகளிலும், காதணிகள், கழுத்தணிகள், வளையல்கள் போன்றன ஏராளமாகக் காட்சிப்படுத்தப்பட்டிருந்தன. இங்கு முத்துக்கள் கலை, அழகியல் அம்சம் கொண்ட பொருட்களாக மட்டுமின்றி மருத்துவ தேவைகளுக்காகவும் பயன்படுத்தப்படுகின்றன. இவற்றைப் பார்வையிட்ட பின்னர் பலவகை தேநீர் சாடிகள் தயாரிக்கும் அருங்காட்சியாகத்துக்குச் (Teapot Museum) சென்றோம். சீனர்கள் கைவினைத் தொழில்களிலும் கைதேர்ந்தவர்கள் என்பதற்கு இந்த அருங்காட்சியகம் ஒரு சான்றாக விளங்கியது. இப்பகுதியில் காணப்படும் கற்துகள்கள் காணப்படும் களிமண் போன்ற ஒரு வகைமண், தேநீர் சாடிகள் செய்வதற்கு உகந்ததாகக் காணப்படுவதனால், இக்கைவினைத் தொழில் நன்கு வளர்ச்சியடைந்துள்ளது. பல்வகை நிறங்களிலும் பல்வேறுபட்ட அளவுகளிலும் தேநீர் சாடிகள் காட்சிக்கும் விற்பனைக்கும் வைக்கப்பட்டிருந்தன. இங்கு புகைப்படம் எடுப்பதற்கு அனுமதி அளிக்கப்படவில்லை.

இதனையடுத்து, சீனாவிலுள்ள ஐம்பெரும் வாவிகளுள் ஒன்றான தாய் வாவியின்



(Lake Tai) கரையோரமாகப் பயணித்து அதன் எழிலைக் கண்டு களித்தோம். இது மூன்றாவது பெரிய நன்னீர் வாவியாகும். போகும் வழியில் Lihu Park என்ற தாவர வியல் பூங்காவையும் பார்த்து ரசித்தோம். மதிய உணவின் பின்னர் ஏறக்குறைய மூன்று மணிநேரம் பயணம் செய்து Hang zhou என்ற இடத்தை மாலை 6:00 மணியளவில் சென்றடைந்தோம். இது சீனாவின் பழமை வாய்ந்த ஆறு தலை நகரங்களுள் ஒன்றாகும். அன்றைய தின களைப்புத் தீர சற்று முன்னதாகவே விடுதிக்குச் சென்று ஓய்வெடுத்தோம்.

மறுநாள், வெஸ்ட் லேக் (West Lake) என்ற மனிதனால் உருவாக்கப்பட்ட வாவியைப் பார்க்கச் சென்றோம். இதனைப் பார்த்த போது இலங்கையில் பராக்கிரமபாகு மன்னன் கட்டிய பராக்கிரம சமுத்திரத்தைப் பார்த்த ஞாபகம் வந்தது. இந்த வாவியில் இயந்திரப்படகு மூலம் பயணித்த போது நடுவே தீவு ஒன்று கண்ணில் தென்பட்டது. அந்தத் தீவு மனிதனால் உருவாக்கப்பட்ட தீவு என சீன வழிகாட்டி கூறினார். வருடந் தோறும் தூர்வாரப்பட்ட மண் படிவுகள் ஓரிடத்தில் குவிக்கப்பட்டு, தீவாக உருவாக்கப்பட்டதாக அவர் மேலும் கூறினார். இது சீன மக்களின் கடும் முயற்சிக்கு சிறந்த ஒரு எடுத்துக்காட்டாகும்.

வெஸ்ட் லேக் மலைப்பாங்கான பிரதேசமாகவும், மிதமான சீதோஷ்ண காலநிலையைக் கொண்ட பகுதியாகவும் காணப்படுவதனால் சீனாவின் பச்சைத் தேயிலை (green tea) உற்பத்தியின் மூலாதார இடமாக விளங்குகிறது. எனவே பச்சை தேயிலை உற்பத்தி செய்யும் இடத்தைப் பார்க்கச் சென்றோம். அங்குள்ள கேட்போர் கூடத்தில் பச்சை தேயிலை தொடர்பான பல தகவல்கள் பரி

(தொடர்ச்சி 25 ஆம் பக்கம்...)

# Legal Basement Consultant



✓ நீங்கள் புதிதாக Legal Basement செய்ய விரும்புகிறீர்களா?

✓ உங்களது வீட்டிலுள்ள பழைய Basement ஐ legalize செய்து சட்டரீதியாக அதிக வாடகைக்குவிட அல்லது உங்கள் வீட்டை அதிக விலைக்கு விற்க விரும்புகிறீர்களா?

✓ Municipal laws , bylaws மற்றும் Ontario fire code பற்றித் தெரிய வேண்டுமா?




உங்களுக்காகவே தமிழில் WORHSHOP நடைபெறவுள்ளது.

20 பேருக்கு மாத்திரம் அனுமதி வழங்கப்படும். உங்கள் பெயரை பதிவுசெய்து நடைபெறும் இடத்தையும் நேரத்தையும் அறிந்துகொள்ள அழையுங்கள்

**Tel: 416-553 8902**

email : legalbasement@gmail.com

✓ Want to build a Legal Basement

✓ Need to Legalize your existing basement!!

✓ Need an Advise to buy a Home with Legal basement!!!

✓ Call me in order to save $1000's of your Dollars!!!!


**We also Providing Interior Designs and Staging Ideas**


# இதயத்தின் குரல்

- ஞானா உருத்திரன் -

நாம் எப்பொழுதும் இதயத்தை அன்பின் அறிகுறியாக பயன்படுத்துகிறோம். அதே போல எமது முடிவெடுக்கும் அன்பின் வழி காட்டியாக சொல்லுகிறோம். அதற்கு என்ன காரணம். ஏன் இதயத்தை நாம் முக்கிய மாக அன்புக்கும், ஞானத்திற்கும் பங்கு வகிக்கும் ஒன்றாக கணிக்கிறோம். எமக் கெல்லாருக்கும் தெரியும் இதயம் எமது உடலின் நடுப்பகுதியில் இருக்கிறது. அது எமது இரத்த பாதைகளுக்கு இரத்தம் கொடுக்கும் ஓர் உறுப்பு ஆகும். இதயம் தான் உடலில் முதலில் உருவாகும் உறுப்பு. அது அதிக காந்த சக்தியை கொண்ட உறுப்பு. அது மாத்திரம் அல்ல இதயத்துக்கு பக்கத்தில் நெஞ்சின் நடுப் பகுதியில் இதய சக்கரம் இருக்கிறது. இந்த சக்கரங்கள் எமது சக்திகளை எடுக்கும் சில்லுகள். இந்த சக்கரங்கள் முப்பத்து மூன்று இதழ்களையும், பச்சை நிற ஒளி யையும் கொண்டது. எம்மை இந்த உலகத் திற்கும், மேலுலகத்திற்கும் இடையில் இணைக்கும் ஒரு பாலமாக எமது ஆத்மா இருக்கும் இடமாக இச்சக்கரம் கருதப் படுகிறது. அதனால் தான் நாம் ஞானத் தோடும் அன்போடும் தொடர்புபட்டதாக எமது இதயத்தை கணிப்பிடுகிறோம்.

பல ஆராய்ச்சிகளின் மூலம் இதயத்தில் மூளைக்கலங்கள் இருப்பதாகவும் அது மூளை இல்லாமல் தனியாக இயங்கக் கூடியதுஎன்றும், முதன் முதலில் உரு வாகும் போது உறுப்பாக இந்த மூளை கலங்கள் தான் இதயத்தின் இயக்கத்திற்கு உதவியாக இருக்கிறது என்றும், மூளை யில் இருந்து இதயத்திற்கு நரம்பு போவது போல இதயத்தில் இருந்து மூளைக்கு நரம்பு போவது அதாவது அந்த நரம்பு மூலம் தகவல்கள் போகின்றன என்பதை யும் கண்டு பிடித்துள்ளார்கள். அதனோடு மூளை கொடுக்கும் எல்லாக் கட்டளைக ளையும் இதயம் ஏற்றுக்கொள்ளவில்லை என்றும் இதயம் கொடுக்கும் எல்லாக் கட்டளைகளையும் மூளை ஏற்றுக்கொள் கிறது என்றும் கண்டுபிடித்துள்ளார்கள்.



பல ஆத்மீக மனிதர்கள் இந்த இதயத் தின் உண்மையான அமைப்பை அதனில் இருக்கும் சக்தி அளவில் உள்ள வழி பாதைகளையும் கண்டுள்ளார்கள். இதயச் சக்கரத்தின் அமைப்பையும் அதிலுள்ள கடவுளின் பகுதியையும் பார்க்கும் தன்மை பொதுவாக நெற்றிக்கண் திறந்த மனிதர் களால் முடியும். நாம் பலவகையில் சக்தியை உணரும் தன்மையை கொண்டு ள்ளோம். சில மனிதர்கள் மனக்கண்ணில் பார்க்காவிட்டாலும் இதயத்தில் தொடர்பு கொள்ளும்போது ஒரு கதிர் அலையை அல்லது வெப்பமான தன்மையை உணர லாம். இதயத்தோடு நீங்கள் தொடர்பு கொண்டு ஆத்மாவின் குரலை உங்கள் வழிகாட்டியாக எடுக்கும் போது அதனை இதயத்தின் குரல் என்கிறோம். எமக்குள் இரண்டு குரல்கள் இயங்குகின்றன. ஒன்று இதயத்தின் குரல். அடுத்தது மனக்குரல். மனக்குரல் எமது அனுபவங்களில் இருந்து வருவது. இந்தக் குரல் எமது அனுபவங் களில் இருந்து அல்லது மற்றவர்களின் அனுபவங்களில் வருவதால் இதனை நாம் குறுகிய வழிகாட்டியாக கொள்ளலாம். இது எமது உலக அறிவில் இருந்து வருகிறது. ஆனால் நீங்கள் இதயத்தின் குரலை கேட்க தொடங்குகிறீர்கள் என்றால் அது அன்பானதாக இந்த உலக அறிவிற்கு அப்பாற்பட்டதாக அமையும். அதனோடு அது எமக்கு என்றென்றும் நல்ல வழியைத் தான் காட்டும்.

பெரும்பாலான மனிதர் இந்த மனத்தின் குரலில் தான் வாழுகிறார்கள். அவர்களு க்கு இதயத்தின் குரல் இருப்பது தெரி யாது. எமக்கேற்படும் இக்கட்டான பிரச் சனைகளின் போது சிலநேரங்களில் உள் மன உணர்வாக அல்லது உள்மன தெரிதல் மூலம் முடிவுகள் எடுத்து இருப் போம். இதயத்தின் குரல் எப்பொழுதும் ஒருவகை அமைதியான அன்பான குரல். இதை எப்பொழுதும் நாம் கேட்கலாம். எமது மனத்தை ஒருநிலைப்படுத்தும் போது இந்த குரலை கேட்கும் சக்தியை பெறுகிறோம். இக்குரல் எமது உணர்வுகள், மனக்கண் தீர்வு என்ற பல முறைகளில் உங்களோடு தொடர்பு கொள்ளும். இது உண்மையான எல்லாம் தெரிந்த பகுதியில் இருந்து வருவதால் இது உண்மையான வழிகாட்டியாகும். இக்குரலை எப்படி வளர்ப்பது என்பது பற்றி மற்றைய கட்டு ரைகளில் காணலாம்.




# மேற்கத்தைய சினிமாவில் தெற்காசியர்



ஞா. ஆரணி

மேற்கத்தைய பொழுதுபோக்குத் துறையில் ஆசியர் 19ஆம் நூற்றாண்டிலிருந்து பங்கு பற்றிக் கொண்டு இருக்கின்றனர். உதாரண த்திற்கு ஜப்பான் நாட்டை சேர்ந்த Sessue Hayawaka ஜப்பானிய, அமெரிக்க, பிரெஞ்சு, ஜேர்மன் மற்றும் பிரித்தானியப் படங்களில் நடித்துள்ளார். சத்தமில்லாமல் படங்கள் வந்த காலமான 1910-1920களில் இவர் Holly wood இன் மிகப்பெரிய சினிமா நட்சத்திரங் களில் ஒருத்தர் ஆவார். இவர் அழகிற் காகவும் புகழ் பெற்றிருந்தார்.

அதேபோல் Anna May Wong என்ற பெண் தான் முதல் 'சீன-அமெரிக்க திரைப்பட நட்சத்திர நடிகையும், முதல் புகழ்பெற்ற ஆசிய அமெரிக்க நடிகையும் ஆவார். அவரது உடை, Styleஇற்கு 1920களில் புகழ் பெற்றார். ஆனால் ஆசியர்களுக்கு Holly-woodஇல் அளிக்கப்பட்ட கதா பாத்திரங்கள் மிக stereotypical ஆகவும், ஆசியர்களைக் கீழ்த்தரமாகவும் காட்டிய தால் அவர் சீனர்களை நன்றாகக் காட்டும் சிறிய படங்களில் நடித்தார்.



MERLE OBERON

தெற்காசியர் என்று குறிப்பாகப் பார்க் கையில் 1911 இந்தியாவில் மும்பாயில் பிறந்த Merie Oberon ஒரு புகழ்பெற்ற நடிகை ஆவர். Hollywood இல் இருக்கும் இனவெறிக்கு அஞ்சி தான் இறக்கும் வரை அவர் தனது இந்திய அடையாளத்தைக் காட்டவில்லை. 1930 களிலிருந்து 1973 வரை ஆங்கிலப் படத்தில் நடித்த இவரின் பாட்டி இலங்கையைச் சேர்ந்த ஆங்கிலக் கலப்பு இனத்தவராவர். 1930 - 1940களில் பிரித்தா னிய மற்றும் அமெரிக்கப் படங்களில் நடித் துப் பிரபலமானவர் தான் Sabu Dastagir. இந்தியாவில் மைசூரில் பிறந்த இவர் Rud-yard Kipling இன் புத்த கங்களை வைத்து எடுக்கப்பட்ட படங்களில் நடித்துள்ளார்.



1957இல் வெளியான Mother India ஒரு ஹிந்திப் படமாகும். முக்கிய தாய் கதாபாத் திரமுடைய இப்படம் 1958இல் Oscar விருத்திற்கு தெரிவு செய்யப்பட்டது.

1980களுக்கு பிற்பட்ட காலத்தில் புகழ் பெற்ற நடிகர் Ben Kingsley ஆவார். இவரது தந்தை இந்தியாவில் இருந்து குடி பெயர்ந்து கென்யாவில் வாழ்ந்த குஜராத்தி இனத்தவர். 2002இல் 'Sir' பட்டம் பெற்ற இவர், முக்கியமாக 1982இல் வெளியான Gandhi படத்தில் காந்தியாக நடித்தார். இவர் முக்கிய மேற்கத்தைய சினிமா விருது கள் நான்கையும் (Oscar, BAFTA, Golden Globes மற்றும் Screen Actors Guild) வென்றிருக்கிறார்.



MIRA NAIR

இதே காலத்தில் இந்திய அமெரிக்க இயக் குனரான Mira Nair பிரபலமானார். 1980 களில் வெளியான அவரது படங்கள் இந்தி யக் கலாசாரத்தைப் பற்றியும், தெற்கா சியர் சந்திக்கும் பிரச்சினைகளைப் பற்றியும் எடுக் கப்பட்டன. பல விருதுகளைப் பெற்ற இவரு க்கு பத்மபூஷன் விருதும் வழங்கப்பட்டது.

இவர்களுடன் Art Malik என்ற பாகிஸ்தா னில் பிறந்தவர் பிரிட்டிஷ் தொலைக்காட்சி மூலமாகவும் 1980களில் பிரபலமாகி, ஒருசில படங்களில் நடித்துள்ளார்.

இக்கட்டுரையில் 20ஆம் நூற்றாண்டின் தெற் காசிய நடிகர்களைப் பற்றிப் பார்த்தோம்.

**இளையோர் ஆக்கம்** இதில் 19 வயதும் அதற்கு உட்பட்டவர்களும் தமிழில் எழுதும் சொந்த ஆக்கங்கள் கதை, கட்டுரை, கவிதை எதுவாக இருந்தாலும் தரமானதாயின் பிரசுரிக்கப்படும்.


## தமிழ்ப்புதிர்

கீழ்வரும் ஆங்கிலச் சொற்களுக்கு அல்லது தொடர்களுக்கு நிகரான தமிழ்ச் சொற்களை அல்லது சொற்தொடர்களை இட்டு பின்வரும் வலையத்தை நிரப்பவும். உங்கள் விடையை இந்த மாதம் 25ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கத் தக்கதாக எமக்கு அனுப்பி வைக்கவும். உச்சப் புள்ளி பெற்றவராக எமது நடுவர்களால் தேர்ந்தெடுக்கப்படும் போட்டியாளருக்கு விளம்பரம் பத்திரிகை நிறுவனத்தினரால் உரிய பரிசு வழங்கப்படும்.

### போட்டியாளர்:

| |
|---|
| பெயர்: |
| முகவரி: |
| தொலைபேசி இல: |
| மின்னஞ்சல்: |

### தமிழ்ப்புதிர் – 05 வினா



| இடமிருந்து வலம் | மேலிருந்து கீழ் |
|---|---|
| 1 Mumble | 1 Full Moon |
| 5 Describe | 2 Crown |
| 7 Proceeds | 3 Earth |
| 9 Celebrate | 4 Documentary evidence |
| 11 Useless | 6 Snatch |
| 12 Our | 8 Malabar nut |
| 13 Achieve | 9 Condominium |
| 14 Sheep | 10 Horned Viper |
| 16 Head Tax | 14 Arrogance |
| 17 Hook | 15 Net |
| 19 Hole | 16 Bran |
| 20 Debt | 17 Rip |

### விடை அனுப்பும் விதம்

மின்மடல்: vlambaram@sympatico.ca / info@vlambaram.com
தொலை நகல்: 416-286-0334
முகவரி: Tamil Puzzle, Vlambaram,
5215 Finch Ave. E. #201,
Toronto, ON, M1S 0C2

### தமிழ்ப்புதிர் – 04 விடை

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 சா | 2 வா | ளை | | 3 ம | | 4 அ | ரி | ப் | 5 பு |
| 6 வி | ழை | | 7 அ | ரு | ந் | து | | | ள் |
| | | 8 அ | ர | ண் | | 9 ம | 10 தி | | ள |
| 11 நா | ம் | தி | ட் | ட | மி | ட் | ட | 12 ப | டி |
| | | 13 கா | டை | | | டு | | சு | |
| 14 எ | ல் | லை | | | 15 தா | ம | த | ம் | |
| மு | | | 16 பே | 17 தி | | ல் | | 18 பு | வி |
| ச் | | 19 அ | | யா | | ல | | ல் | |
| 20 சி | று | நீ | ர | க | ம் | | 21 ஏ | | 22 ம |
| | | தி | | ம் | | 23 சா | கு | ப | டி |


தமிழ்ப்புதிர் – 04 வெற்றியாளர்: யசோதை தயாபரன் – ஒட்டாவா

# பசுமை...

22 ஆம் பக்கத்தொடர்ச்சி

மாறப்பட்டன. இதில் A,C,D ஊட்டச் சத்துக்கள் இருப்பதாகவும், உடலிலுள்ள நச்சு வாயு, கொழுப்பு போன்ற கழிவுகளை அகற்றுவதாகவும், அதன்மூலம் இரத்தக் கொதிப்பு, மாரடைப்பு போன்ற நோய்களிலிருந்து பாதுகாத்துக்கொள்ள முடியும் எனவும் விளக்கப்பட்டது. உணவின் பின்னர் தேநீரைக் குடிப்பதே சிறந்தது. பச்சை தேயிலையை சுடு தண்ணீரில் போட்டு, வரும் ஆவியை கண்ணில் படவைப்பதன் மூலம் கண் நோய்களிலிருந்து பாதுகாக்க முடியும் என மேலும் விளக்கப்பட்டது. பல்வேறு அளவுகளிலும், தரங்களிலும் பச்சை தேயிலையைக் கொள்வனவு செய்யும் வசதியும் இருந்தது. தேயிலை உற்பத்தி நிலையத்துக்கு அருகிலேயே எமக்கான மதிய உணவும் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. மதிய உணவின் பின்னர் ஷாங்காய் நகரத்தை நோக்கித் திரும்பினோம். இது எமது சீனப் பயணத்தின் இறுதிக் கட்டத்தை நினைவுபடுத்தியது. சீனாவின் சனத்தொகை அதிகூடிய நகரம் ஷங்காய் ஆகும். மாலை 6.00 மணியளவில் ஷாங்காய் நகரை சென்றடைந்த நாம், நகருக்கருகாக ஓடும் Huangpu நதியில் உல்லாசப்பயணக் கப்பலில் பயணம் செய்து மின்னொளியில் எழில்மிகு ஷாங்காய் நகரின் தோற்றத்தைக் கண்டு களித்தோம்.

அமைந்த Maglev Train பயணம் எமக்கோர் புதிய அனுபவமாக இருந்தது.



மதிய உணவின் பின்னர் ஷாங்காய் அருங்காட்சிகத்தைப் (Shanghai Museum) பார்க்கச் சென்றோம். 1952ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட இந்த அருங்காட்சியகம் சீனாவின் பாரம்பரிய கலை, கலாச்சார, பண்பாட்டு அம்சங்கள் பொருந்திய 1,30,000க்கும் மேற்பட்ட சேர்க்கைகள் (Collection ) இருபத்தொரு பிரிவுகளாக வகுக்கப்பட்டு காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. 1996 ஆம் ஆண்டு அருங்காட்சியகம் நான்கு மாடிக் கட்டடமாக விஸ்தரிக்கப்பட்டு நவீனமயப் படுத்தப்பட்டதையடுத்து, பர்மாவிலிருந்து கொண்டுவரப்பட்ட ஜேட் புத்தர்சிலை, இந்தியாவிலிருந்து கொடுவரப்பட உறங்கும் புத்தர்சிலை, இலங்கையை ஆட்சி செய்த காசியப்பனின் உருவச்சிலை போன்ற பிற நாட்டு கலாச்சார வரலாற்றுச் சின்னங்களும் இங்கு இடம் பெற்றுள்ளன. தினமும் பெருந்தொகையானோர் இங்கு வருகை தருகின்றனர். இந்த அருங்காட்சியாகத்தைப் பார்வையிட்ட பின்னர், இறுதியாக சீனர்



சீனாவில் இறுதியாக, உலகிலேயே அதிவேகமாகப் பயணிக்கும் Maglev Train என்ற தொடர்வண்டியில் பயணிக்க ஆவலுடன் சென்றோம். இத்தொடர்வண்டி மணிக்கு 431 கிலோமீற்றர் வேகத்தில் Longyang Road Station என்ற நிலையத் திலிருந்து Pudong International Air Port வரை பயணிக்கிறது. உல்லாசப் பயணிகளுக்கு மட்டும் இச்சேவை மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. இதனை இரு ஜெர்மன் நிறுவங்கள் அறிமுகம் செய்தன. இச்சேவையைப் பரிபாலிப்பதும், பராமரிப்பதும் அவற்றின் பொறுப்பாகும். அதற்குரிய செலவை சீன அரசு பொறுப்பேற்றுள்ளது. எந்தவொரு புதிய தொழில்நுட்பத்தையும் பிரதி பண்ணுவதில் சீனர்களுக்கு நிகர் சீனரே. இதனை அவர்கள் பகிரங்கமாகவே கூறுகிறார்கள். Maglev Train தொடர்வண்டியின் தொழில்நுட்பத்தைப் பின்பற்றி, புல்லட் தொடர்வண்டிச் சேவை பெய்ஜிங்_சங்காய் நகரங்களுக்கிடையே நடைபெற்று வருகிறது. இத்தொடர்வண்டி சராசரி மணிக்கு 350கிலோமீற்றர் வேகத்தில் பயணித்து 1400 கிலோமீற்றர் தூரத்தை நான்கு மணி நேரத்தில் கடக்கிறது. இதுபோலவே ஏனைய நகரங்களுக்கிடையேயும் அதிவேக தொடர்வண்டிச் சேவை இடம்பெற்று வருகிறது. ஆட்டம், அசைவு, குலுக்கம் எதுவுமின்றி

களின் வீர, தீர விளையாட்டுகள், நடனங்கள் உள்ளடங்கிய 'அக்ரோபேடிக் ஷோ' என்ற கண்காட்சியைக் கண்டுகளித்தோம். வளையங்களுக் கூடாகப் பாய்தல், கயிற்றில் தொங்கியபடி நடனமாடுதல், பாரமான மண்சாடிகளை தலையில் வைத்து நகர்த்துதல் போன்ற சாகச விளையாட்டுக்கள் பல இடம் பெற்றன. ஓர் இரும்புக் கூண்டினுள் ஐந்து மோட்டார் சைக்கிள்கள் வேகமாகச் சுற்றிவந்தமை மயிர்க்கூச்செறியும் காட்சியாக இருந்தது.

சுற்றுலாப் பயணம் நிறைவடைந்ததும் கனடா நோக்கிப் புறப்பட்டோம். எமது சீன வழிகாட்டியான அந்தனி ஷங்காய் விமான நிலையம் வரை வந்து மகிழ்ச்சியுடன் வழியனுப்பி வைத்தார். ரொறன்ரோ பியர்சன் சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்தபோது, கனேடிய மண் வெண்கம்பளம் விரித்து எம்மை வரவேற்றது. காலநிலை அடிப்படையில் சீனா செல்வதற்கு ஏப்ரல், மே அல்லது செப்ரெம்பர், ஒக்ரோபர் மாதங்கள் சிறந்த காலமாகும்.

மார்க்கம் முதுதமிழர் மன்றம் ஏற்பாடு செய்த சீனச் சுற்றுலா, ஓர் உல்லாசப் பயணமாக, மட்டுமின்றி கல்விச் சுற்றுலாவாகவும் அமைந்தமை, அனைவருக்கும் மகிழ்ச்சியையும் மனத்திருப்தியையும் கொடுத்தது.

# கூடை நிறைய சுண்டல்

**படித்ததில் பிடித்தது**

நீங்கள் வாசித்து மகிழ்ந்ததை மற்றவர்களும் வாசிக்கட்டுமே.

அனுப்புங்கள் Vlambaram@sympatio.ca

யாம் பெற்ற இன்பம் மற்றவர்களும் பெறட்டுமே!

- அ. மு. நெருடா -

அம்மா! எங்க மா அந்த கூடைப் பை? நேரம் ஆச்சுமா! அப்பா வந்துடப் போறாங்க! அதுக்குள்ள போய்டணும். அப்பா வந்துட்டா விடமாட்டாங்க மா! ஏன் பறக்குற? அங்க தான் அடுப்படில இருந்துச்சு போய் பாரு. இந்த ராத்திரியில அவசியம் இப்படி போகணுமா? சொல்லிக் கொண்டே காய்களை நறுக்கிக் கொண்டிருந்தாள் அம்மா. நீ கேட்டனு தான் வெண்டைக்காய் சாம்பார், உருளை கிழங்கு வறுவல் செய்யப் போறேன். நீ இந்த சுண்டலுக்காக ஓடுற. சீக்கிரமா திரும்பி வந்துடனும். அப்பா வர்றதுக்குள்ள வந்துடு, அப்புறம் அடி வாங்கனும்.

அம்மா அப்படித்தான் அவனை விளையாட்டுக்கு மிரட்டுவாள். அடிவிழும் சமயம் எப்படியாவது வந்து விழுந்து தடுத்து விடுவாள். அது அருணுக்கும் தெரியும். இருந்தாலும் உள்ளூர ஒரு பயம் எப்போதும் இருக்கும்.

வெளியிலிருந்து கார்த்தி கத்திக் கொண்டே இருந்தான். “நேரம் ஆச்சுடா சீக்கிரம் வா. எல்லாரும் போகப் போறாங்க”. கார்த்தி மேல் வீட்டு பையன். இவனை விட வயதில் சிறியவன் தான். ஆனாலும் இவனை வாடா போடா தான். மூன்றாம் வகுப்பு படித்துக் கொண்டிருக்கிறான். காலையிலும் மாலையிலும் அவனது அப்பாதான் அவனை வண்டியில் கொண்டு போய் விடுவார். கார்த்தி அவன் அப்பாவோடு வண்டியின் முன் நின்றுகொண்டு ஏதோ அவனே வண்டியை ஓட்டுவது போல பாவனை செய்வான். எப்பொழுதும் தெத்துப்பல் தெரிய அழகாய் சிரிப்பான்.

இதோ இருக்கு மா! அடுப்படியில் அடுப்பின் மூலையில் ஆணியில் மாட்டியிருந்த கூடைப் பையை எடுக்க அடுப்படி மேல் ஏறி மேடை மேல் இருந்த புளித் தண்ணீரை கொட்டி விட்டான் அருண். பாத்திரம் விழுந்த சப்தம் கேட்டு அம்மா ஓடிவந்து அருணை தூக்கிக் கொண்டாள். விடு மா நேரம் ஆச்சு என்று துள்ளிக் குதித்து இன்னொரு பிளாஸ்டிக் பையை கூடைப் பையினுள் திணித்து, அடுப்பறை வழியாக பால்கனியில் ஏறிக் குதித்து கார்த்தியுடன் சேர்ந்து வேகமாக திடல் நோக்கி இருவருமாக ஓடினர்.

ஆண் பெண் பாலின பேதமின்றி சுமார் நாற்பது சிறுவர் சிறுமியர் அவரவர் வீட்டிலிருந்து ஆளுக்கு ஒரு பையைக் கொண்டு வந்திருந்தனர். அக்கூட்டத்தில் பத்தாம் வகுப்பு படிக்கும் சுந்தர் அண்ணாதான் மூத்தவர். அவர் அனைவரையும் அழைத்து இரண்டு இரண்டு பேராக அணி பிரித்துக் கொண்டிருந்தார். அருண்தன்னை யாருடன் சேர்த்து விடப் போகிறார் என்று நினைத்துக் கொண்டே நின்று கொண்டிருந்தான்.

சுந்தர் அண்ணா! அந்தக் குடியிருப்பில் பெரிய மாணவர்களில் அவர் தான் இவர்களுடன் விளையாட வருவார். மற்ற பெரிய அண்ணன்கள் விளையாட வர மாட்டார்கள். அவர்கள் தனியே 5,6 பேர் தனித் தனிக் குழுவாகப் பிரிந்து கூடிப் பேசுவர். எங்கள் குழுவில் சுந்தர் அண்ணா, சாம்பு, ரமேஷ் மூவர் மட்டும்தான் முழுக் கால்சட்டை அணிவர். சுந்தர் அண்ணா வீட்டில்தான் தொலைகாட்சிப் பெட்டி இருக்கும். அங்கு தான் சிறுவர்கள் குழுமி இருப்பர். சுந்தர் அண்ணாவின் அப்பா எதுவும் சொல்ல மாட்டார். நன்கு பழகக் கூடியவர்.



சிறுவர்கள் எப்பவும் ஒரே குழுவாகத்தான் விளையாடுவர். அனைவரும் ஒரே விளையாட்டுத்தான் விளையாடுவர். சனி, ஞாயிறு வந்தால் வெயில் முழுதும் இவர்களின் தலை மீதே விழும். காலை தொடங்கி இரவு இருட்டும்வரை அனைவரும் ஒன்றாக வெளியில் விளையாடுவர். வேளைக்கு தகுந்த விளையாட்டை விளையாடுவர். காலையில் பம்பரம், நாடு பிடித்தல், மதியம் சாப்பாடு முடிந்து 7 கல், மாலை கிரிக்கெட். இருட்டியதும் ஒளிஞ்சான் புடிச்சான். இது காலத்திற்கு தகுந்தாற்போல் மாறிக் கொண்டே இருக்கும்.

அருணுடன் சாந்தாராம் அணி சேர்த்து விடப்பட்டான். புரட்டாசி மாதம் வந்தாலே பெரும்பாலானோர் வீட்டில் கொலு வைத்து பஜனைகள் பாடி அல்லது கதைகளைக் கூறி வருபவர் அனைவருக்கும் ஒரு கை சுண்டல் கொடுத்து அனுப்பி வைப்பர். அப்படி வீடு வீடாகச் சென்று கூடைப் பையில் சுண்டல் சேகரித்து இரவு எட்டரை மணிக்குள் திரும்பவும் இதே இடத்தில் கூட வேண்டும்.

சாப்பாடு விசயத்தில் அருண் படு கெட்டி. எந்த வீட்டில் என்ன வகை சுண்டல் கிடைக்கும் என்று அவனாகவே அறிந்து வைத்திருந்தான். சுந்தர் அண்ணா சொன்னதும் விடு விடு வென்று சாந்தாவை அழைத்துக் கொண்டு குடியிருப்பின் கடைசி வரிசைக்கு சென்றான். டேய்! அருண் ஏன் டா இப்போ இவ்ளோ வேக வேகமா கடைசிக்கு வந்த? எல்லாரும் முன் வரிசையில தான் இருக்காங்க. ஒவ்வொரு வீடா போகலாம் தானே! என்றான் சாந்தா. அதற்கு அருண் ‘போகலாம் தான், அப்படிப் போனால் ஒரே சமயத்தில் நிறைய பேர் ஒரே வீட்டிற்கு போக வேண்டி வரும். சுண்டல் குறைவாகத் தான் கொடுப்பார்கள். இங்கு கடைசி வரிசைக்கு அவர்கள் வர இன்னும் நேரம் நிறையா இருக்கிறது. ஆகவே இங்கு இப்பொழுது நமக்கு நிறைய சுண்டல் கிடைக்கும் நம் வேலையும் சீக்கிரம் முடிந்து விடும்’ என்றான்.

சரி என்று சொல்லி இருவரும் ஒவ்வொரு வீடாகச் சென்று அமர்ந்து கதை கேட்டு, பாட்டு பாடி சுண்டல் சேகரித்துக் கொண்டிருந்தார்கள். ஒவ்வொரு வீட்டிலும் கொலு வேறு வேறு வடிவில் இருந்தது. அகிலா அக்கா வீட்டில் 11 படி வைத்து வரிசையாக பொம்மைகளை அழகாக அடுக்கி வைத்திருந்தது பார்க்க பிரமாண்டமாக இருந்தது சாந்தாவிற்கு. பக்கத்திலேயே பூங்காவைப் போல், விவசாய நிலம் போல், குட்டி குட்டியாக மாடு, ஆடு என நேர்த்தியாக வைக்கப்பட்டிருந்தது கண்டு அருணிடம் சாந்தா கூறினான். ஆனால் அருணுக்கு, 4 வகையில் சுண்டலும் நிறைய தேங்காய் சேர்த்து, இனிப்பு, காரம் என வகை வகையாக தயார்நிலையில் சுண்டல் இருப்பது மட்டும்தான் தெரிந்தது. கொலு பொம்மைகள் அருணை அவ்வளவாக ஈர்க்கவில்லை. சுண்டல் வாசனை மட்டுமே ஈர்த்தது. பொறுமையாக சுண்டலை பெற்றுக்கொண்டு அடுத்த வீட்டிற்கு இருவரும் சென்றனர்.

அடுத்து வித்யாவின் வீடு. வித்யா 3ஆம் வகுப்பு மாணவி. வித்யாவைக் காணும் போது எல்லாம் அவனுக்குள் இனம் புரியாத ஈர்ப்பு ஏற்படுவது என்ன என்று அறியும் வயது இல்லை. ஆனால் வித்யாவைக் காணும்போது எல்லாம் அவளது கவனத்தை ஈர்க்க ஏதாவது சேட்டைகள் செய்வது வித்யாவிற்கும் சிரிப்பை வரவழைக்கும். அருண் படிக்கும் அதே பள்ளி தான். அவள் அம்மா அப்பாவிற்கு அருணை நன்கு தெரியும். அருண், சாந்தா இருவரும் உள்ளே சென்றனர். வித்யாவின் அப்பா வாப்பா அருண், என்று வரவேற்று உள்ளே அழைத்து அமர வைத்தார். வித்யா அவரது அப்பாவின் அருகில் அமர்ந்திருந்தாள். இன்னும் சிலர் வந்ததும் அனைவரும் ஏதோ பாட்டு பாடிக் கொண்டிருந்தனர். அருண் மட்டும் சுண்டல் வாசம் வரும் வழியையே பார்த்துக்கொண்டு இருந்தான். சிறிது நேரத்தில் அம்மா வந்து சுண்டல் தந்து வழி அனுப்பி வைத்தாள். ஒரு வழியாக இருவரும் தங்கள் பைகளை வெகு சீக்கிரத்திலேயே நிரப்பி சுந்தர் அண்ணா சொன்ன இடத்திற்கு வந்து சேர்ந்தனர். மற்றவர்கள் வர இருவரும் காத்திருந்தனர். அப்பொழுது அருகில் குழுமியிருந்த அண்ணன்மார்களை பார்த்து, சுந்தர் அண்ணாவிடம், நாமும் இப்படித் தான் பெரியவர்களானதும் தனித்தனி குழுவாகப் பிரிய வேண்டுமா? இப்படியே ஒன்றாகவே இருக்கக் கூடாதா? அனைவரும் ஒன்றாக இருந்தால் நான்றகத் தானே இருக்கும் என்று கேட்டான். அதற்கு சுந்தர் அண்ணா சிரித்துக்கொண்டே தாராளமாக நாம் இப்படியே இருக்கலாம் என்று அருணை ஆசுவாசப்படுத்தினார். ஆனால் பெரியவர் ஆனதும் நாம் இப்பொழு இருப்பது போலவே இருக்க இந்த சமூகம் அனுமதிப்பது இல்லை என்றார். அது ஏதும் அவனுக்கு புரியவில்லை. அருணுக்கு எப்பொழுது அந்த சுண்டலை பகிர்ந்து



தருவார்கள் என்று மட்டும் தான் வருத்தம். அனைவரும் அவரவர் பங்களிப்பை அளித்து சுண்டலை சேகரித்தனர். ஒரு குழு சுண்டல் சேகரிப்பில் ஈடுபட்டது, மற்றொரு குழு அதனை வகை பிரித்து அதற்காக வைத்திருந்த பையில் கொண்டு சேர்த்தது. மற்றொரு குழு அரசமர இலைகளை சேகரித்து கொண்டு வந்தது. இன்னொரு குழு இலைகளை நார் கொண்டு பின்னி சாப்பிட ஏதுவாக தயார் செய்து கொடுத்தது. இன்னுமொரு குழு சேகரித்த சுண்டல்களை பாதுகாப்பதில் ஈடுபடுத்தப்பட்டது. குழு உறுப்பினர்கள் அனைவரும் ஒருவர் பின் ஒருவராக வந்து கொண்டிருந்தனர். அனைவர் சேகரித்த சுண்டல்களும் ஒரு பெரிய பையில் சேர்த்து கொட்டி வைக்கப்பட்டது. அனைத்துக் குழுக்களும் வந்து சேர்ந்த பின் அனைத்தும் அனைவருக்கும் பகுந்து அளிக்கப்பட்டது.

இங்கு தோற்பவரே வென்றவராவார்
தமிழ்மறை சொன்னமொழி
ஈடில்லா வாழ்வு பெற
இதனை இதயத்தில் நிறுத்த வேண்டும்
வாழ்வுக்கு அர்த்தம் வரும்
வாழ்வதனில் இனிமை வரும்
வாழ்வின் தர்மம் இது
ஆன்றோர்கள் சொன்ன மொழி.



நா.க. சிவராமலிங்கம்

# நமக்குள்ளே எமக்காகக் காத்திருப்பது என்ன?

## What Awaits Within

'இவ்வாழ்வில் நிறைவடைய வேண்டும் என்ற ஆவலினால் நாம் உண்மையான தாகத்தை இனங்கண்டுகொள்ளாமல் போய்விடக்கூடும்' என பிரேம் ராவத் கூறுகிறார். 'மக்கள் வழங்கும் தீர்ப்புகளை நாம் அடையாளம் கண்டு கொள்கிறோம். ஆனால் எமது தேவையை விளங்கிக் கொள்வதை புறக்கணித்து விடுகிறோம். உங்களுடைய உண்மையான பசி என்ன? உங்களை உண்மையாகவே ஆனந்தப்படுத்துவது என்ன?'

பல நாடுகளில் அமைதியின் தூதுவராக ஏற்றுக்கொள்ளப்பட்ட திரு. ராவத் அவர்கள், இந்தக் கேள்விகளுக்கு பதில் அளிக்கும் ஒரு செய்தியுடன் உலகைச் சுற்றித் தொடர்ந்து பிரயாணம் செய்து வருகிறார். உள்ளம் நிறைவாக இருக்கவேண்டும், அமைதியாக இருக்க வேண்டும், திருப்தியடைய வேண்டும் என கூறுகிறது. ஆனால் அந்தப் பசியையோ அல்லது அதன் நிறைவையோ வார்த்தைகளில் வடிக்க முடியாது என அவர் கூறுகிறார். அது அனுபவிக்கப்பட வேண்டியதொன்று.

'இது சொற்களைப் பற்றியதல்ல' என அவர் கூறுகிறார். எனது உணர்வை வெளிப்படுத்துவதற்கு நான் சொற்களைப் பாவிக்க வேண்டி இருந்தாலும், நான் கூற விரும்புவதை உண்மையாவே சொற்களால் வெளிப்படுத்த முடியாது. இது தத்துவத்தைப் பற்றியதோ, எண்ணக்கருத்துக்களைப் பற்றியதோ அல்லது தர்க்கத்தைப் பற்றியதோ அல்ல.

ஆனாலும் மக்கள் இவற்றில் தான் சிக்கிக் கொள்கிறார்கள். நான் கூறுவதற்கு சார்பாகவோ அல்லது எதிராகவோ விவாதிக்கலாம். நான் 'உங்களுக்கு அமைதி தேவை' யெனக் கூறினால் ஒருவர் அது உண்மையில்லையெனக் கூறலாம். மற்றுமொருவர் அது உண்மைதான் எனக் கூறலாம். இந்த விவாதம் தொடர்ந்து சென்றுகொண்டே இருக்கும்.

'தர்க்கங்கள் எங்களை எங்கும் எடுத்துச் செல்லப் போவதில்லை. எமக்கு எது தெரியுமோ அதுதான் முக்கியம். பாலை வனத்தில் நீங்கள் தாகமாக இருக்கும்போது தண்ணீரின் படம் உங்களுக்கு உதவப் போவதில்லை. ஒரு போத்தலில் உங்களிடம் இருக்கும் தண்ணீர்தான் உங்கள் தாகத்தைத் தீர்க்க உதவும்.'

திரு. ராவத் அவர்கள் தன்னைச் செவிசாய்க்க வருபவர்களுக்கு சில அடிப்படையான கேள்விகளைப் பற்றி, அதாவது உங்களைப் பற்றி நீங்கள் என்ன அறிந்திருக்கிறீர்கள்? நீங்கள் யார்? உயிருடன் இருப்பதென்பதன் அர்த்தம் என்ன? எனச் சிந்திக்கச் சொல்கிறார்.

நான் கேட்கும் கேள்விகள் மேலோட்டமானவையல்ல. நான் உங்களின் அடிப்படையைப் பற்றிதான், அது என்ன என்பது பற்றிக் கூறுகிறேன். நீங்கள் எல்லாவற்றையும் இழந்தாலும்கூட உங்களைச் சந்தோசமாக வைத்திருக்கக்கூடியது என்ன? இது மிகவும் சவால் நிறைந்ததொரு கேள்வியாகும். உண்மை உண்மையாகவே உங்களை ஆனந்தமாக்குவது என்ன? இது உங்களுள்ளே உள்ள ஒரு விடயத்திற்கான ஆவலா அல்லது வேறு ஒன்றிற்கான ஆழ்ந்த ஆவலா?

எம்மை ஆனந்தமாக்கும் என எண்ணும் விடயங்களை தேடி நாம் செல்வது மிகவும் விரக்தியளிக்கும் என திரு. ராவத் கூறுகிறார். ஏன் எனில் நாம் தேடும் அந்த ஆனந்தமானது ஒரு புதிய காரிலோ அல்லது நல்லதொரு தொழிலிலோ அல்லது வேறு ஒருவரிலோ இல்லை. இது எமக்குள்ளேயே நாம் உணரவேண்டியதொன்றாகும். அந்த உணர்வு எங்குள்ளதோ அவ்விடத்திலேயே அதைத் தேடுவதுதான் அர்த்தமுள்ளதாகும். 'இங்கே, எமக்குள்ளே தான் அந்தத் திருப்தியின் வசிப்பிடம் உள்ளது' என அவர் கூறுகிறார். 'அமைதியின் வசிப்பிடம் உங்கள் உள்ளேதான் உள்ளது. உண்மையான அன்பின் உறை விடமும், மகிழ்ச்சியின் உறைவிடமும் உங்கள் உள்ளேதான் உள்ளது. மெய் அறிவின் வதிவிடமும், பூரணத்துவத்தின் வதிவிடமும் இதுவே. இங்குதான் உண்மை நிலையும் வதிந்துள்ளது என அவர் கூறுகிறார்.

இவையெல்லாம் எமக்காக எமக்குள்ளே காத்திருக்குமாயின் எதற்காக மக்கள் சலிப்படைகிறார்கள் எனச் சிலர் கேட்கிறார்கள். பாலை வனத்தில் மலர்கள் மலர்வது தற்செயலாக நிகழாதது போல, நிறைவு என்பதும் தற்செயலான நடக்கும் ஒன்றல்ல. ஆனந்தமும் தற்செயலாக நடக்கும் ஒன்றல்ல. அமைதியும் தற்செயலாக நடக்கும் ஒன்றல்ல என திரு. ராவத் கூறுகிறார்.

பல நூற்றாண்டு காலமாக இந்த மலர்கள் உறைநிலையில் மழைக்காகக் காத்துக் கொண்டு இருக்கின்றன. மழை வரும் வரை அவை காத்துக்கொண்டே, காத்துக் கொண்டே இருக்கின்றன.

'நாம் விமான நிலையத்தில் விமானத்திற்காகக் காத்துக்கொண்டிருக்கும் போது விமானம் அரை மணித்தியாலம் தாமதித்தது வந்தால் நாம் விரக்தி அடைகிறோம். மக்கள் ஏற்கனவே பொறுமையை இழந்த நிலையில் உள்ளனர். எப்போது அது வரும், எதனால் அது தாமதமாகிறது? நாங்கள் திரைப்படம் பார்க்கச்சென்று படம் நேரத்திற்குத் தொடங்காவிட்டால் ஏன் தாமதம், என்ன நடந்தது எனக் கேட்போம்.

**Words of Peace**

பிறேம் ராவத் பற்றி மேலும் அறிந்து கொள்ள:
1.877.707 3221 Toll free
416 431 5000 தமிழ்
www.wopg.org www.tprf.org

பாலைவனத்தில் உள்ள அந்தச் சிறு விதைகளோ ஒரு வருடத்திற்குக் காத்திருக்கும். சில வேளைகளில் மழை வராவிட்டால் மேலும் ஒரு வருடத்திற்கு காத்திருக்கும். ஐந்து நிமிடங்கள் அல்ல ஒரு வருடத்திற்கு. அதன் பின் மழை பெய்யும் போது அவர்கள் அதற்கு ஆயத்தமாக இருக்கிறார்கள். கேள்வி என்னவெனில் நீங்கள் ஆயத்தமாக இருக்கிறீர்களா. ஏனெனில் மழை பெய்யப் போகிறது.

'எப்போது நாம் எம்மை அறிந்துகொள்ள ஆரம்பிக்கிறோமோ அப்போதுதான் வெளியுலகில் நாம் தேடும் பொக்கிசம் நமக்குள்ளேதான் உள்ளதென அறிவோம். பிறரிடம் இருந்து நாம் தேடும் இரக்கம் அது ஏற்கனவே எம்முள்ளேயே உள்ளது. நம் வாழ்வில் எமக்குத் தேவைப்படும் அந்த தாராள குணம் ஏற்கனவே எம்முள்ளேயே உள்ளது. எம்முள்ளே உள்ள அந்த இராட்சியத்தை அனுபவிப்பதற்காகத்தான் நாம் இங்குள்ளோம்.'

In how many ways



Math tutorial360

Answers to tutorial 359

1)Since dot product is not allowed to use

$\bar{a}$ and $\bar{b}$ form the sides of a parallelogram and since the vectors are equal the parallelogram will be a rhombus , and vectors a+b and a-b will be a diagonal and that is perpendicular in rhombus .

2)-4x+6y + 9 =0

Solve for y: y= $\frac{2}{3}$x -3/2 .Let x =3t ,y =2t -3/2. A vector equation is $\bar{r}$ =(0 ,-3/2) +t (3 ,2 )Parametric equations are x =3t ,y =2t -3/2 . A symmetric equation is x/3 = $\frac{y+3/2}{2}$

3)The plane contains the intersecting lines(x-2)/1=y/2 =(z+3)/3 and(x-2)/-3 =y/4 =(z+3)/2 ,the common point is A(2 ,0 ,-3) ,Two directions are $\bar{a} = (1,2.3)$ and $\bar{b}$ =(-3 ,4 ,2 ).A normal to the plane is $\bar{n}$ =axb =(-10 ,-11 ,-10 ).The scalar equation $\overline{AP}.\bar{n}$ =0

(x-2 ,y ,z+3 ).(10,11,-10 ) =10x +11y -10z -50 =0

4)y =3x$^2$-7x +5, dy/dx =6x -7 ,slope of x+5y -7 =0 is -1/5 ,since perpendicular 6x-7 =5 x=2 ,sub ineqn . y=3 Eqn of tangent at 2,3 is 5x-y-7 =0

Tutorial360 Questions

1)In how many ways can the letters of the word MINIMUM be arranged?

2)Subangan reaches into his gym bag for a pair of running shoes .If there are 7 different pairs of shoes loose in the bag .In how many ways can he pick two shoes that do not match?

3)The six members of the year book staff sit around the circular table in their office.How many different setting arrangements are there of this group of people?

4)How many different sums of money can be made from a $2 bill,a$5bill , and a $10 bill?

By MrS.F.Xavier(Teacher) tel 6473409490/4167322228

# பதின்பருவத் தற்கொலைகள் தடுக்க என்ன வழி?


**- ஜி. ராமானுஜம் -**
மனநலத் துறைப் பேராசிரியர்,
ramsych2@gmail.com

‘பள்ளி மாணவன் தற்கொலை’, ‘மாணவிகள் கூட்டாகத் தற்கொலை’ போன்ற செய்திகள் சமீபத்தில் பெரும் அதிர்வலைகளை எழுப்பியிருக்கின்றன. தற்கொலைகள் அதிகரிப்பதற்கு இதுதான் காரணம் என ஒரே ஒரு விஷயத்தை மட்டும் சுட்டிக்காட்ட முடியாது. எல்லா தற்கொலைகளும் ஒன்றுபோலவே நடைபெறுவதில்லை. மனிதர் ஒரு சமூக விலங்குகள். மனிதரின் அகமும் சமூகம் என்னும் புறமும் கொண்டுள்ள உறவுகளில் ஏற்படும் சிக்கல்கள் கைமீறும் நிலையில், மனது தற்கொலைக்கு முடிவெடுக்கிறது.

சில தற்கொலைகளில் அகக் காரணிகளின் பங்கு அதிகமாக இருக்கும். தீவிர மனநோய்கள், குறிப்பாக மூளையில் ஏற்படும் ரசாயனக் குறைபாடுகளால் வரும் மனநோய்களால் நிகழலாம். உதாரணமாக, மனச்சிதைவு நோயில் சிலருக்குக் காதினில் யாரோ இறந்துபோகக் கட்டளையிடுவது போல் தோன்றும். சில தற்கொலைகளில் புறக் காரணிகளின் பங்கு அதிகமாக இருக்கும். உதாரணமாக, விவசாயம் பொய்த்துப் போவதால் விவசாயிகள் தற்கொலை செய்துகொள்வது.

பதின்மவயதுப் பிரச்சினைகள்

சமீபகாலத்தில் அதிகரிக்கும் பதின்மவயது மாணவத் தற்கொலைகளில் அக மற்றும் புறக் காரணிகள் பின்னிப் பிணைந்திருப்பதை உணர முடிகிறது. மாணவர்களின் மனநிலையைத் தாண்டி, பெற்றோர், ஆசிரியர், சமூகம், கல்வி முறை, ஊடகங்கள் எனப் பல பரிமாணங்களும் கோணங்களும் உள்ள பிரச்சினை இது.




தற்போதைய இளம் தலைமுறையினரிடம் சில ஆளுமைக் கோளாறுகள் இருக்கவே செய்கின்றன. குறிப்பாக, ஈகோ எனப்படும் தன்னைப் பற்றிய முனைப்பு அதிகமாகவே காணப்படுகிறது என்பதைப் பதிவுசெய்ய வேண்டியிருக்கிறது. கூட்டுக் குடும்பங்களில் வேறு பல பிரச்சினைகள் இருந்தாலும் குழந்தைகளைப் பொறுத்தவரை பகிர்ந்து கொள்ளல் இருந்தது. பொருட்களை மட்டுமல்ல உணர்வுகளையும் பகிர்ந்துகொள்ள கூட்டுக் கும்பத்தில் வழியிருந்தது.

இப்போது பலரும் ஒரு குழந்தையுடன் நிறுத்திவிடுவதால் குழந்தைகளுக்குக் கிடைக்கும் கவனம் அதிகமாகி ஈகோ பெரிதாக வளர்கிறது. தன்னையும் தனது தேவைகளையும் பூர்த்திசெய்யவே எல்லோரும் உள்ளனர் என்ற குறுகிய பார்வை தோன்றுகிறது. அதனால், தன்னை யாரும் ஒன்றுமே சொல்லிவிடக் கூடாது என்ற எண்ணம் வளர்கிறது. முகம்திரிந்து நோக்கினால்கூட வாடிவிடும் அனிச்சமலர் போல் ஒரு சுடு சொல்கூட அவர்களை வாடச்செய்துவிடுகிறது.

மேலும், கல்வி முறையால் ஏற்பட்டிருக்கும் சுமையை இறக்குவதற்கும் இறுக்கத்தைக் குறைப்பதற்கும் எந்தவித ஆக்கபூர்வமான பொழுது போக்குகளும் குறைவு. மன அழுத்தத்தைக் குறைக்கும் உடற்பயிற்சி, விளையாட்டுகள் போன்றவை அறவே இல்லை என்றே சொல்லலாம். குறிப்பாக, பெண் குழந்தைகள் நிலைமை இன்னும் மோசம். வெளியே சென்று விளையாடுவதற்குப் பெற்றோர்கள் அனுமதிப்பது இல்லை என்பது மிக முக்கியமான பிரச்சினை. சமீபத்தில் மாணவியரே அதிகம் தற்கொலை செய்துகொண்டதை இதனுடன் தொடர்புபடுத்திப் பார்க்க வேண்டும். அவர்களைப் பொறுத்தவரை விளையாட்டு என்பது ‘ஆங்க்ரி பேர்ட்ஸ்’, ‘கேண்டி கிரஷ்’ போன்ற செல்பேசி விளையாட்டுகள்தான்.

பெற்றோரின் கடமை

தனியார்மயம், உலகமயமாக்கலால் போட்டிமயமான சூழலில் பெற்றோர்கள் மிகையான எதிர்பார்ப்புகளை வைத்துக்கொண்டு மன அழுத்தத்துக்கு ஆளாவதுடன், குழந்தைகளிடமும் அழுத்தத்தை உருவாக்கிவிடுகிறார்கள். பிற மாணவர்களுடன் ஒப்பிட்டு விமர்சிப்பதும் அதிகம் நடக்கிறது. குழந்தைகள் தனித்தன்மை கொண்ட ஆளுமைகள் என்று பார்ப்பதில்லை.

குழந்தைகளின் தனித்தன்மை மிளிரும் வகையில் நேர்மை, துணிச்சல், பொறுமை, பொறுப்புணர்வு, விடாமுயற்சி போன்ற ஆளுமைப் பண்புகளை வளர்ப்பதற்கு வழிகாட்டியாகவும் முன்மாதிரியாகவும் இருப்பது பெற்றோரின் கடமை. இந்தப் பண்புகள் குழந்தைகளின் எதிர்காலத்தைக் கட்டமைப்பதில் பெரிய அளவில் உதவும். உங்கள் குழந்தைகளுக்குச் சில விஷயங்களில் திறமை இருக்கலாம். ஆனால், ஆர்வம் இருக்க வேண்டும். ஆர்வமும் திறமையும் உழைப்பும் சேர்ந்தாலே முழுமையானதாக இருக்கும். உடற்பயிற்சி, விளையாட்டுக்களுக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். தேர்வுகள் நடக்கும்போது நாள் முழுவதும் படித்துக்கொண்டேயிருக்க வேண்டும் என்று அழுத்தம் கொடுக்கக் கூடாது.

முன்பெல்லாம் ‘கண்ணை மட்டும் விட்டு விட்டு எல்லா இடத்திலேயும் அடிங்க சார்!’ எனப் பெற்றோர் கள் ஆசிரியர்களிடம் கூறுவார்கள். அது போன்ற உடல்ரீதியான துன்புறுத்தலை அறிவுள்ள யாரும் ஆதரிக்க மாட்டார்கள். அதேசமயம், கொஞ்சம் கடுமையான சொற்களைக்கூடத் தாங்கிக் கொள்ளாமல் போகும் அளவுக்குக் குழந்தைகளை உருவாக்காதீர்கள்.

சுடுசொற்களை, ஏமாற்றத்தை, வலிகளைத் தாங்கிக்கொள்ள குழந்தைகளைத் தயார் செய்வது பெற்றோர்களின் கடமை. வெற்றி அடையக் கற்றுக் கொடுப்பது முக்கியம் தான் என்றாலும், தோல்விகளை எதிர்கொண்டு முன்னேறி வரவும் கற்றுத்தர வேண்டும். தவறுகளை யாரேனும் சுட்டிக்காட்டினால் உணர்ச்சிவசப்படாமல் ஒப்புக்கொள்ளக் குழந்தைகளுக்குக் கற்றுத் தர வேண்டும். யாரேனும் சீண்டினால் பயந்து போகாமல் போராடக் கற்றுக்கொடுக்க வேண்டும்.

ஆசிரியர்களின் பொறுப்பு

குழந்தைகளின் எதிர்காலத்தை நிர்ணயிக்கும் மிகப் பெரிய பொறுப்பு ஆசிரியர்களுக்கு உண்டு. பள்ளிக்கூடம் என்பது மதிப்பெண்கள் எடுக்கக்கூடியவர்களை உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகள் அல்ல. விளையாட்டுப் பாட வகுப்புகளில் பிற பாடங்களை நடத்துவது தவிர்க்கப்பட வேண்டும். ஒவ்வொரு குழந்தைக்கும் ஒவ்வொரு வகையான திறமையும் வேகமும் இருக்கும். ஒரே வயது என்ற ஒரே அடிப்படையில் வகுப்பில் இருக்கும் எல்லாக் குழந்தைகளும் ஒரே மாதிரி இருப்பார்கள் என்று கருதுவது தவறு.

மூளை வளர்ச்சிக் குறைபாடு, அதீத துறுதுறுப்பு (ஹைப்பர் ஆக்டிவிட்டி), கற்றல் குறைபாடு (டிஸ்லெக்சியா), ஆட்டிசம் என்று குழந்தைகளிடம் காணப்படும் பாதிப்புகளைப் பற்றி பெரும்பாலான ஆசிரியர்கள் அறிந்திருப்பதில்லை. இந்தக் குழந்தைகளையும் மற்ற குழந்தைகள்போல் மதிப்பெண் இயந்திரமாக மாற்ற நினைப்பது தவறு. மேலும், இக்காலப் பதின்மவயதினர் எளிதில் உணர்ச்சிவசப்படுபவர்களாக இருப்பதால், தவறுகளைச் சுட்டிக்காட்டும்போது மிகுந்த கவனம் தேவை. புண்படுத்தாத வார்த்தைகளைப் பயன்படுத்துவது, குழந்தைகளிடம் ஆக்கபூர்வமான மாற்றத்தை ஏற்படுத்தும். தவறான செயலை மட்டும் கண்டிக்க வேண்டும்.




தற்கொலைகள் தொடர்பான செய்திகளைக் கையாள்வதில் ஊடகங்களுக்குப் பெரிய பங்குள்ளது. ஒரு நிகழ்வின் பின்புலம், நிகழ்ந்ததாகச் சொல்லப்படும் குற்றங்களின் நம்பகத்தன்மை, நாம் கொடுக்கும் காட்சி, செய்திகளின் தாக்கங்கள் என்னவென்னவாக இருக்கும் என்றெல்லாம் பொறுப்புணர்வோடு ஊடகங்கள் இருக்க வேண்டும். இது போன்ற சம்பவங்கள் மீண்டும் நடக்காமல் இருக்க ஆக்கபூர்வமான வழிமுறைகளை ஆராய வேண்டும். பரபரப்புக்காக மிகைப்படுத்தப்படும் செய்திகள் சமூகத்தில் எதிர்மறையான விளைவுகளை ஏற்படுத்துவதைக் கணக்கில்கொள்ள வேண்டும். குழந்தைகள்தான் எதிர்காலத்தில் உலகின் போக்கைத் தீர்மானிப்பவர்கள் என்பதை அனைத்துத் தரப்பினரும் உணர்ந்துகொண்டால் இது போன்ற பிரச்சினைகளைப் பெருமளவில் குறைக்கலாம்.

**கொக்குவில் இந்துக்கல்லூரி பழைய மாணவர் சங்கம் - கனடா**

## வருடாந்த தமிழ்மொழிக் கல்விசார் போட்டிகள் - 2018

கொக்குவில் இந்துக் கல்லூரிப் பழைய மாணவர் சங்கம் - கனடா நடத்தும் வருடாந்தத் தமிழ்மொழிக் கல்விசார் போட்டிகள். இப்போட்டிகள் யாவும் கொக்குவில் இந்துக் கல்லூரிப் பழைய மாணவர்களின் வாரிசுகள் மட்டுமே பங்குபற்றும் வகையில் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளன.

இடம்: **SAI CENTRE, 5321 Finch Ave. East, Scarborough, ON, M1S 5W2**
தொலைபேசி இலக்கம்: **(416)335-7242**
காலம்: பங்குனி 24, 2018 - சனிக்கிழமை, காலை 9:00 மணி
(Saturday, March 24, 2018 – 9:00 a.m.)
தமிழ்ப் பாடப் போட்டிகளுக்கான வயதெல்லை 06, 09, 12, 15, 18 வயதுக்கு உட்பட்டோர் பிரிவுகளாகவும், கணிதபாடம் தரம் 03, 04, 05, 06, 07, 08வரை ஒழுங்கமைத்து நடத்தப்படும். போட்டியில் பங்குபற்றுபவர்கள் காலை 8:30 மணிக்கு முன்பாக கட்டணங்களைச் செலுத்தி தமது பெயர்களை பதிவுசெய்தல் வேண்டும்.

கட்டண விபரம்:
* குடும்ப அங்கத்துவப் பணம் $15.00
* தமிழ்ப் பாடத்திற்கான கட்டணமாக ஒவ்வொரு பாடத்திற்கும் தலா $5.00ம் ஆகக் கூடுதலாக 3 பாடங்களுக்கு மட்டுமே அறவிடப்படும்.
* கணித பாடத்திற்கான கட்டணம் $5.00 தனியாக செலுத்துதல் வேண்டும்.

விண்ணப்ப முடிவுத் திகதி பங்குனி 17, 2018 (Saturday. March 17, 2018)
சகல வயதுப் பிரிவினருக்குமான போட்டிகள் யாவும் காலை 9:00 மணிக்கு ஆரம்பமாகும்.
மேலதிக விபரங்களையும், விண்ணப்பப் படிவங்களையும் பெற்றுக்கொள்ள:-
**போட்டிக்குத்தேவையான அனைத்து விடயங்களையும் Onlineஇலும் மேற்கொள்ளலாம். www.khcosa.ca**
திரு. ந. மகேந்திரன் - (416)616-4386
திரு. ஏ. ஜெயராஜா - (416)301-17333
திரு. R. மகேந்திரன் - (905)294-9670 - மின்னஞ்சல்: sudar.mahendran@gmail.com
திருமதி சி. நாமகள்தேவி - (416)283-1439 - மின்னஞ்சல்: namagalx5@gmail.com
திரு. நா. பாலகுமார் - (416)321-5522 - மின்னஞ்சல்: balashanthini@hotmail.com

# திமிங்கிலங்கள்

உலகத்தில் வினோதங்கள் பல வகைகளில் நிகழ்ந்து கொண்டிருக்கிறது. அதில் உயிரில்லா வினோதங்கள் அல்லது உயிர் உள்ள வினோதங்கள் என இருவகை பெரும் பிரிவுகள் உண்டு. இன்று உயிர் உள்ள வினோதங்களில் ஒன்றான கடல் உயிரினங்களிலே மிகவும் வியப்பையும் அச்சத்தையும் ஏற்படுத்தக் கூடிய திமிங் கிலங்கள் பற்றி நாம் சில வினோத தகவல்களை தெரிந்துகொள்வோம்.


திமிங்கிலம் நீரில் வாழும் பாலூட்டி இனத்தைச் சேர்ந்த ஒரு விலங்கு ஆகும். இதன் ஒ வகையான நீலத்திமிங்கலமே உலகின் மிகப்பெரிய பாலூட்டி என்று கருதப்படுகிறது. திமிங்கிலங்கள் வெப்ப இரத்தப் பிராணிகளாகும். திமிங்கிலத்தில் 75-க்கும் மேற்பட்ட வகைகள் இருக்கின்றன. ஒவ்வொன்றும் தனித்தனி குணாதிசயங்களைப் பெற்று விளங்குகின்றன. கறுப்பு, வெள்ளை, நீலம் மற்றும் பல வண்ணங்களிலும் 24 மீற்றர் நீளம் முதல் 1.25 மீற்றருக்குக் குறைவான நீளம் வரையும் உப்புநீர் மற்றும் நன்னீரிலும் வாழக்கூடியதாகவும், உலகில் உள்ள எல்லா கடல்களிலும் மற்றும் சில வகைகள் அமேசன், சீனாவின் மிகப்பெரிய ஆறான யாங்சியிலும் மற்றும் இந்தியாவின் கங்கை ஆற்றிலும் வாழக்கூடியதாகவும் காணப்படுகின்றன.

10 முதல் 16 மாதகால அளவில் வித்தியாசமான கர்ப்ப காலங்களை உள்ளடக்கியதாகவும் விளங்குகின்றது. மனிதனின் மூளையைக் காட்டிலும் அளவில் நிறையில் பெரிய மூளையுடைய பாலூட்டிகள் இரண்டே இரண்டுதான். ஒன்று யானை மற்றையது திமிங்கிலத்தினுடைய மூளையாகும். உலகில் உள்ள பாலூட்டிகளில் (அல்லது உயிரினங்களில்) மிகப் பெரிய மூளையுடையது என்ற சிறப்பும் இதற்கு உண்டு. திமிங்கில வகைகளில் அதிக கர்ப்பக் காலமான 16 மாத கர்ப்ப காலம் இதனுடையதாகும். இவை 60 முதல் 70 வருடம் உயிர் வாழக்கூடியது.

திமிங்கிலம் என்று சொன்னவுடன் எல்லோரும் உணரக்கூடிய ஒன்று மிகப் பெரிய மீனாகத்தான் இருக்கும் என்பதாகும். இவை பல வகையிலும் மீன்களை ஒத்திருப்பினும் கூட இது மீன் இனத்தைச் சாராத பாலூட்டி ஆகும். பொதுவாகக் கடல் வாழ் உயிரினங்களின் ஆராய்ச்சியின் அடிப்படையில் இவ்வகை மீன்களை திமிங்கிலங்களை இரு பெரும் பிரிவுகளாகப் பிரிக்கின்றார்கள். ஒன்று பற்கள் உள்ளவை. வாயின் இரு புறங்களிலும் வலிமையான தாடைகளுடன் கூடிய பற்களுடையவை. மற்றையது பற்கள் அற்றவை அல்லது Baleen என்ற அமைப்பை பெற்ற Baleen திமிங்கிலங்கள். பற்கள் உள்ள வகைகளில் Sperm whale, Beaked, Narwhals, Beluga, Dolphin மற்றும் Porpoises போன்ற வகைகளும் பற்கள் அற்றவைகளில் Rorquals, Gray whales, Right whales என்ற மூன்று வகைகளும் இருக்கின்றன.

பொதுவாக எல்லா பாலூட்டிகளுக்கும் இருக்கக்கூடிய பித்தப்பை (gallbladder) மற்றும் குடல் வால்வு (appendix) போன்ற உள் உறுப்புக்கள் இல்லாத அமைப்புகள் விதிவிலக்கான அம்சமாகத் திகழ்கின்றது.

உலகில் வாழக்கூடிய உயிரினங்களில் மிகப் பெரியதும் இதுவரை கண்டெடுக்கப்பட்ட டைனோசர்களின் எலும்புக் கூடுகளில் மிகப் பெரிய அளவினை ஒத்த உடல் அளவையும் பெற்று பல சிறப்பு அம்சங்களுடன் இவ்வகை திமிங்கில மீன்கள் விளங்குகின்றன.




உலகிலேயே அதிக சத்தம் போடக்கூடிய உயிரினம் திமிங்கலம்தான். Blue Whale-களுக்கு உள்ள மற்றுமொரு தனிச்சிறப்பு என்னவென்றால் இவை தண்ணீருக்கு அடியில் எழுப்பும் 150-க்கும் மேலான டெசிபலைக் (decibel) கொண்ட (எந்த ஓர் உயிரினங்களையும் மிகைத்த) ஒலி ஒரு ஜெட் விமானம் கிளம்பும்போது ஏற்படுத்தும் சத்தத்தைக் காட்டிலும் கூடுதலாகும். இந்த ஒலி தண்ணீரின் அடியில் கடக்கும் தொலைவு 1000 கிலோ மீற்றருக்கும் மேலாகும். இவை அவ்வப்போது பாடவும் செய்கின்றன. கிட்டத் தட்ட அரை மணி நேரம் திமிங்கிலம் தொடர்ந்து பாடுவதை பதிவு செய்திருக்கிறார்கள். சில திமிங்கிலங்கள் தொடர்ந்து மணிக்கணக்கில் பாடும் என்கிறார்கள் ஆராய்ச்சியாளர்கள்.

இவை தங்கள் தலையின் மேற்பரப்பில் அமைந்த சுவாசக்குழாய் (Blow hole) மூலம் தண்ணீரை 9 மீற்றர் உயரம் வரை நீர் கம்பம் (Water Spout) போல பீய்ச்சி அடிக்கின்றன. இவ்வாறு மிகுந்த சத்தத்துடன் கூடிய இந்நிகழ்ச்சியும் திமிங்கிலங்கள் ஒன்றுடன் ஒன்று தொடர்புகொள்ளும் சாதனமாக பயன்படுத்துவதாக விஞ்ஞானிகளால் நம்பப்படுகின்றது. இவை சத்தம் எழுப்பும்போது அதற்குப் பதில் அளிக்கும் விதமாக தொலைதூரக் கூட்டத்தின் திமிங் கிலங்கள் சத்தம் இடுவதை விஞ்ஞானிகள் கண்டறிந்துள்ளார்கள்.

இதுநாள்வரை மீன்கள் என்றால் நீரில் மட்டும்தான் வாழும் என்று எமக்குத் தெரியும். அதிலும் இத்திமிங்கிலங்கள் போன்ற மிகப்பெரிய மீன்கள் என்றாலே கடலைத் தவிர வேறு எங்கும் வாழாது என்பது மட்டுமே நம் அனைவரின் ஒட்டுமொத்த கருத்தாகும். ஆனால் இம்மீன்கள் ஒரு காலத்தில் தரைகளிலும் வாழ்ந்திருக்கின்றன என்றால் நம்புவீர்களா?

உலகத்திலேயே எந்த ஒரு உயிருக்கும் இல்லாத வினோத சுவாச அமைப்பை கொண்டு இருக்கின்றன திமிங்கலங்கள். இவை தண்ணீருக்கடியில் தங்கள் செவுள்கள் (gill) மூலம் ஒக்ஸிஜனை கிரகிக்கும் அமைப்பைப் பெற்றுள்ளவை. ஆனால் திமிங்கிலங்கள் வெப்ப இரத்த பிராணி ஆகும். இவற்றின் உடல் வெப்ப நிலை மனிதனைப் போன்றே 37 டிகிரி செல்சியஸ் ஆகும். இவை மற்ற பாலூட்டிகளைப் போன்றே நுரையீரல் அமைப்பைப் பெற்று விளங்குவதால் தங்களுக்குத் தேவையான ஒக்ஸிஜனை தண்ணீரின் மேற்பரப்பில் வந்துதான் பெற்றுக்கொள்ள இயலும். திமிங்கிலம் மிக வித்தியாசமான சில தகவமைப்புகளைப் பெற்று விளங்குகின்றது. தன் வாழ்நாள் முழுதும் தண்ணீரிலேயே கழிக்கக் கூடிய ஒரே பாலூட்டி திமிங்கிலம் ஒன்றுதான். மேலும் நான்காயிரத்திற்கும் மேற்பட்ட பாலூட்டி இனங்களில் மீன்களை ஒத்த உடல் அமையப் பெற்று நடக்கக் கூடிய வகையில் கால்கள் அமைப்பைப் பெறாத ஒரே உயிரினமும் திமிங்கிலம் ஒன்றுதான். இதுவும் விதிவிலக்கான அம்சமாகும். மேலும் இவற்றின் தலையின் மேற்பரப்பில் அமைந்துள்ள Blow hole என்ற சுவாசக் குழாய் அமைப்பு நுரையீரலுடன் நேரடியாக இணைக்கப்பட்டுள்ளதாலும் மற்ற பாலூட்டிகளைப் போன்று தொண்டையின் மூலம் சுவாசம் செல்ல வேண்டிய அமைப்பு இல்லாததனா லும் ஒரே நேரத்தில் இவற்றினால் உண்ணவும் சுவாசிக்கவும் இயலுகின்றது.

இதுவரை நாம் அறிந்த உயிரினங்கள் எல்லாம் அதிகபட்சமாக ஒரு முறை சுவாசித்தால் பத்து நிமிடம் முதல் பதினைந்து நிமிடம் வரை சுவாசிக்காமல் இருக்க முடியும். அதிலும் மனிதர்களை சொல்லவே வேண்டாம். மிகவும் குறைவான சுவாசம் தாங்கும் திறமை உடையவர்கள். ஆனால் ஒரு முறை சுவாசித்து 80 நிமிடங்கள்வரை சுவாசிக்காமல் இருக்கும் ஒரு உயிரினத்தைப் பார்த்து இருக்கிறீர்களா? திமிங்கிலங்களின் அரிய திறமைகளில் அதுவும் ஒன்றாம்!.

இவற்றின் உடல் கடல் நீரின் அதிக அழுத்தத்தைத் தாங்கக்கூடிய வகையில் அமைந்துள்ளது. இவை தங்கள் இரையைத் தேடி கடலின் ஆழத்திற்குச் செல்லும் தூரம் எந்த பாலூட்டிகளாலும் அடைய முடியாத ஓர் இலக்காகும். 1000 மீற்றர் (1 கிலோ மீற்றர்) முதல் 2000 மீற்றர் (இரண்டு கிலோ மீற்றர்) ஆழம்வரை செல்லக்கூடிய ஆற்றல் பெற்றது. ஆழக்கடலின் வெளிச்சம் அறவே இல்லாத அடர்ந்த இருளில் இரையைப் பிடிக்க பயன்படுத்தும் உத்தி எதிரொலி (echo location) மூலம் இரையின் இருப்பிடத்தை துல்லியமாக அறிந்து கொள்ளும் முறையாகும்.

இவை சராசரியாக ஒரு நாளைக்கு 1500 கிலோவரை உணவை உட்கொள்ளுகின்றன. இதன் முக்கிய உணவான 10 மீற்றர் நீளமுள்ள Gaint squid பிடித்து உண்ணும் போது சில சமயம் இவற்றுக்கிடையே சண்டை ஏற்பட்டு Sperm Whale உடலில் மிக ஆழமான வெட்டுக் காயத்தை ஏற்படுத்தி விடுகின்றது. இருப்பினும் கூட முடிவில் அவற்றை உண்ண இவை தவறுவதில்லை. தங்களின் உணவைப் பிடித்து இவை உண்டதன் பின்னர் தண்ணீரின் மேற்பரப்பிற்கு வந்து 10 முதல் 15 நிமிடங்கள் வரை காற்றை நன்கு சுவாசித்து ஒக்ஸிஜனை சேமித்து மீண்டும் ஆழ் கடலை நோக்கி தங்கள் பயணத்தைத் தொடர்கின்றன.

பாலூட்டிகளின் சாம்ராஜ்ஜியத்தில் மிக மிக அதிக தூர பயணத்தை மேற்கொள்ளக் கூடிய உயிரினம் என்ற சிறப்பம்சமும் திமிங்கிலங்களுக்கு உண்டு. Killer Whale மணிக்கு 50 கிலோ மீற்றர் வேகம் வரைச் செல்லக் கூடிய ஆற்றல் பெற்றவை. திமிங் கிலங்கள் தங்கள் இனப்பெருக்கத்திற்காக குளிர்ப் பிரதேசங்களையும் குட்டிகளை ஈன்றெடுக்க வெப்ப பிரதேசங்களையும் தேர்ந்தெடுத்து மிக நீண்ட தூரப் பயணத்தை மேற்கொள்ளுகின்றன. Gray Whale என்ற திமிங்கில வகை தங்கள் குட்டிகளைப் பெற்றெடுக்க அலாஸ்காவிற்கு அப்பாலிருந்து மெக்ஸிகோ கடற்கரைப் பகுதிவரை கடந்து வரக் கூடிய தொலைவு 10,000 கிலோ மீற்றரை விட அதிகமாகும். இவற்றின் பயணம் சிறிய அல்லது பெரிய கூட்டமாகவோ மேற்கொள்ளுகின்றன.

மொத்தம் கடல்வாழ் உயிரினங்கள் பற்றிய ஆயிரத்திற்கும் அதிகமான இறுதி ஆய்வுகளின் முடிவில் சயன்ஸ் இதழுக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வுத்தாள் மிகத்தெளிவாக தனது முடிவினை கூறியது: மனிதர்களின் மூளையைக் காட்டிலும் பெரிய மூளை திமிங்கிலங்களுடையதாகும். மூளையின் அளவிற்கும் அறிவுத் திறனுக்கும் தொடர்பு இருப்பதாக விஞ்ஞானிகளினால் நம்பப்படுகின்றது.

1970 ஆண்டில்தான் திமிங்கிலங்களின் புத்திக் கூர்மையான செயல்பாடுகள் முதல் முதலாக அறியப்பட்டது. விஞ்ஞானிகள் திமிங்கிலங்களை புத்திசாலி உயிரினமாகவே கருதுகின்றார்கள். மூளையின் முன்புறமாக அமைந்த cerebral cortex என்ற அடுக்கு யானை, நாய் மற்றும் மனிதர்கள் போன்ற புத்திசாலி உயிரினங்களுக்கு இருப்பது போல ஏன் மனிதர்களுக்கு இருப்பதைவிட அதிகமாகவே இவற்றிற்கு இருக்கின்றது. ஆராய்ச்சியின் முடிவுகள்கூட இவற்றை நிரூபிக்கும் வண்ணமாகவே உள்ளன. சில வகை டொல்பின்கள் சுயமாக சிந்தித்து சாமர்த்தியமாக செயல்படுவதை ஆராய்ச்சியின் மூலம் கண்டறிந்துள்ளார்கள்.


உலகில் அழிந்து வரும் உயிரினங்களின் பட்டியலில் திமிங்கிலமும் ஒன்றாகும். இவற்றிலிருந்து கிடைக்கும் எண்ணெய் மற்றும் இறைச்சிக்காகவும் அவற்றின் பலீன் தகடுகளுக்காகவும் பெருமளவு வேட்டையாடப்படுகின்றது. இவற்றின் எலும்புகளிலிருந்து 1600க்கு மேற்பட்ட கைவினைப் பொருட்கள் தயாரிக்கப்படுகின்றன. 1849ஆம் ஆண்டு பெற்றோலியத்திலிருந்து கெரசின் என்ற மண்ணெண்ணெய் கண்டுப்பிடிப்பதற்கு முன்பு விளக்கெரிக்க பெருவாரியாக உலக மக்களால் திமிங்கில எண்ணெய் பயன்படுத்தப்பட்டு வந்தது. இதற்காகவே பெருமளவு சென்ற காலங்களில் வேட்டையாடப்பட்டும் வந்தது. தற்போது திமிங்கிலங்களை வேட்டையாடுவது சட்டப்படி குற்றமாகும்.

இந்த இனங்களை அழிவிலிருந்து காப்பாற்ற சர்வதேச அளவில் அமைக்கப்பட்ட IWC (INTERNATIONAL WHALING COMMISSION) என்ற அமைப்பு திமிங்கிலங்களைப் பிடிக்க பல நிபந்தனைகளை விதித்துள்ளது. சில மாதங்களுக்கு முன் பிரான்ஸிலும் இவ்வாறாக திமிங்கிலங்கள் கடல் கரையில் உள்ள சதுப்பு நிலங்களில் வந்து காணப்பட்டது. அவற்றில் பல இறந்தும் போய் விட்டது என்பது அனைவரும் அறிந்ததே. ஏன் இவ்வாறு திமிங்கிலங்கள் கரைக்கு வருகின்றது என்பதினை அறிய ஆராச்சிகளை செய்து வருகின்றார்கள் பிரான்ஸ் ஆராச்சியாளர்கள்.

# என்னைப்பற்றிய குறிப்புகள் எப்போதும் உண்மையானவை அல்ல

ஆளுமை வளர்ச்சிக்குப் பிரார்த்தனைகள் 246

மேலதிக தகவல்களுக்கு அழையுங்கள் 905-270-1214 416.907.6897



**லலிதா புரூடி**

உலகளாவிய ரீதியில் பெண்களைப்பற்றி முக்கியமாக தெற்காசிய சமுதாயம் கட்டுக்கோப்பு, பாகுபாடு, எதிர்பார்ப்பு என்பவற்றிற்கமைய கீழ்த்தரமான நிலைப்பாடுகளையே வளர்த்து வந்திருக்கின்றது எனக் கூறலாம். ஆற்றலுள்ள பெண்களில் பெண்மையின் மென்மை இல்லை என்றும், ஆதிக்கம் செலுத்தும் பெண்களை நம்பமுடியாது எனவும் பலர் இந்த நூற்றாண்டிலும் கருதுகிறார்கள். இதில் எனக்குப் பிடித்தது, தான் யார் தனக்கு என்ன வேண்டும் என்பதைப் பற்றிய தெளிவு உள்ள பெண்கள் மிகவும் ஆபத்தானவர்கள் என்பது தான்! கணவரை அதிகாரம் செய்யும் பெண், ஆணைப்போல் சாமர்த்தியமற்ற பெண், பணத்தை சரிவரக் கையாளத் தெரியாத பெண் என்று நெடிதாக நீளும் பட்டியல். இதில் வேடிக்கை என்ன வென்றால் இவற்றையெல்லாம் நம்புவர்களில் பலர் பெண்கள் என்பதுதான்.

சீட்டுக்குறிப்புகள் எனும் Labels ஒன்றைப்பற்றி வரையறுத்துத் தகவல் சொல்கின்றன. அநேகமாக எதிர்பார்ப்புகளை எடுத்துரைக்கின்றன. எவ்வளவு கூடிய, குறைந்த அளவு, நாளுக்கு எத்தனைமுறை, எவ்வளவு நாட்களுக்கு உபயோகிக்க வேண்டும் என்பதையும் இவை சுட்டிக் காட்டும். இக்குறிப்புகள் ஒன்றை வர்ணிக்கும், பாதுகாக்கும், ஏமாற்றும். குறிப்புச் சீட்டுகளைக் கழற்றி வீசி எறிந்தும் விடலாம். ஆமாம்! பெண்களைப்பற்றி எழுதி ஒட்டப்பட்டிருக்கும் சீட்டுக்களைக் கழற்றி வீசிவிடும் நேரம் இப்போ வந்து விட்டது.



சரியாகச் சொன்னால் தங்களைப் பற்றி எழுதி ஒட்டியிருக்கும் குறிப்புச் சீட்டுகளை பெண்களே கழற்றி வீசி விட இப்போ நேரம் வந்திருக்கின்றது. தான் ஒரு தாயாக, தாரமாக, உழைப்பாளியாக இருப்பதைவிட தான் உழைப்பதற்கு என்ன செய்கிறேன் என்பதை விட தனது தகுதியை ஒரு பெண் உணர்ந்திருக்க வேண்டும். இப்படியென்றால் தன்னையும் தனது எல்லைகளையும் அவள் பரிசீலித்துப் பார்க்க வேண்டும். தான் தன்னிடம் எதை எதிர்பார்க்கிறாளோ அதை நிறைவேற்றவும், தன்னை வர்ணிக்கவும் ஒரு பெண் கற்றுக்கொள்ள வேண்டும். அவள் தன்னைத்தானே ஊக்குவிக்க வேண்டும். தன்னை ஆதரித்துப் போஷித்துக் கொள்ள வேண்டும். சிலருக்குத் தன்னை பிடிக்காமல் போவதையும் அங்கீகரிக்க உடன்படவேண்டும். தனக்கு மேல் திணிக்கப்பட்டுள்ள தடைகளையும், வர்ணனைகளையும் தகர்த்தெறிந்து வெளிவர விரும்ப வேண்டும்.

தகுதியின்மை என மட்டுப்படுத்தி வரையறுத்துக் கட்டுப்படுத்தும் இக்குறிப்புச் சீட்டுகளை இன்றுவரை பெண்கள் மேல் யாவரும் சுமத்தியிருக்கலாம். பெண்களும் மானிடர் தான் என்பதை விழிப்புணர்வுடன் இன்று புரிந்து கொள். இறைவனின் தெய்வீக சக்தி பெண். இந்த மனநிலை, சிந்தனையுடன் பெண்களைப்பற்றிய உனது ஒவ்வொரு எண்ணத்தையும் இன்று பரிசீலித்துப் பார்.

**பெண்களைப் பற்றிய எனது பார்வையை ஆழமாக அகட்டி நீட்டி விரிவாக்குவதில் இன்று எனது நேரத்தைச் செலவழிக்கப்போகிறேன்.**

## உலகின் பெரிய "எயார் லாட்லர்" விமானத்தின் ஓட்டம் வெற்றி!


- வீரகேசரி மூர்த்தி -

உலகின் மிகப்பெரியபயணிகளின் விமானமாக உருவாக்கப்பட்டுள்ள இங்கிலாந்தின் "எயார் லான்டர்" விமானத்தின் வெள் ஓட்டம் வெற்றிகரமாக முடிவடைந்துள்ளது. இங்கிலாந்தின் கார்டிங்டன் விமானப்படை தளத்தில் இருந்து பறக்க விடப்பட்ட இந்த விமானம் 6100 மீட்டர் அதாவது 20 ஆயிரம் அடி உயரத்தில் 5 நாட்கள் தொடர்ந்து பறந்து சாதனை படைத்துள்ளது.

இதனையடுத்து இந்த விமானத்தை பயணிகள் பயன்பாட்டுக்கு கொண்டு வருவது குறித்து ஆலோசிக்கப்பட்டு வருகிறது. இது ஏயர் லான்டரின் மூன்றாவது விமானம் ஆகும். 2012ஆம் ஆண்டில் முதன் முதலில் தயாரிக்கப்பட்ட "எயார் லான்டர்" விமானம் அமெரிக்க இராணுவத்தின் உளவுத்துறை வாகன திட்டத்தின் ஒரு பகுதியாக வெற்றிகரமாக பறந்தது குறிப்பிடத்தக்கது.




"எயார் லான்டர் 10" என்ற விமானம் - விமானம், ஹெலிகாப்டர் மற்றும் விண்கலம் ஆகியற்றின் தொழில் நுட்பங்கள் கலந்து தயாரிக்கப்பட்டது. இதற்கு ஹீலியம் எரிபொருளாகப் பயன்படுத்தப்பட்டது.



# குறுந்தகவலை அனுப்பும் போது ஏற்படுகின்ற கழுத்துப் பிடிப்பைத் தடுத்தல்

## Preventing Text Neck

கடந்த வருடம் கனேடியர்கள் 110 பில்லியன் அலைபேசி குறுந்தகவலை (text message) அனுப்பியுள்ளார்கள். தொழில்நுட்பம் முன் னேற்றம் அடையும் போது, சிறிய சாதனம் மீது அதிகளவு செயல்களைச் செய்வதற்கு அது எம்மை அனுமதிப்பதனால். அனேகமாக எமது உடல்கள் அதற்கான விலையைச் செலுத்த வேண்டியுள்ளது. நாம் நம்பியுள்ள தொழில்நுட்பங்களிலிருந்து நோ அதிகரிக்கின்ற நிலையொன்று இருப்பதனால் இந்த அபாயத்தைக் குறைப்பது முக்கியமானதாகும். 'நடமாடும் கருவியை அதிகளவு பயன்படுத்துவதனால் அல்லது குறுந்தகவலை அனுப்பும் செயலின் மித மிஞ்சிய உபயோகத்தினால் கழுத்துப்பிடிப்பு அதிகளவு வியாபிக்கின்றமை ஒரு பிரச்சனையாகும்' என டாக்டர் ஜோர்ஜ் ட்ரெயிட்செஸ் கூறுகிறார்.

குறுந்தகவலை அனுப்பும்போது ஏற்படுகின்ற கழுத்துப்பிடிப்பை எது விளைவிக்கின்றது?

நடமாடும் கருவியொன்றைப் பயன்படுத்தும் போது மோசமான அமர்ந்திருக்கும் தோரணையே கழுத்துப்பிடிப்பை ஏற்படுத்துகிறது. நீங்கள் குறுந்தகவலை நீண்ட நேரம் அனுப்பும் போது அல்லது விளையாட்டுக்களில் ஈடுபட்டிருக்கும் போது உங்கள் முதுகு கூனுகின்றது. உங்கள் தலை முன் பக்கமாக வளைகின்றது. உங்கள் தோள்கள் உட்குழிகின்ற சந்தர்ப்பங்களும் ஏற்படுகின்றன.

இவ்வகையான கழுத்துப்பிடிப்பை எவ்வாறு தவிர்த்துக்கொள்ளுதல்?

• உங்கள் நெஞ்சு நிமிர்ந்த நிலையிலும், உங்கள் தோள்கள் பின்புறமாக நேரான நிலையிலும் அமர்ந்திருங்கள்.
• உங்களின் கண்களின் முன்புறத்தில் உங்கள் கரங்களைக் கொண்டு வாருங்கள். இதனால் திரையைப் பார்ப்பதற்கு நீங்கள் கீழே பார்க்க வேண்டிய அவசியமில்லை.
• உங்கள் தலையைக் கீழே நோக்கிச் சரிப்பதை விட, கீழே பார்ப்பதற்கு உங்கள் நெஞ்சுக்குள் உங்கள் நாடியைச் செருகுங்கள்.
• நீண்ட நேரம் தட்டச்சு செய்வதற்காக உங்கள் நடமாடும் கருவியை நீங்கள் பயன்படுத்த வேண்டுமானால், வெளியிலான சாவிப்பலகையொன்றைக் கொள்வனவு செய்யுங்கள்.

• கழுத்து கெடுபிடிநிலையைக் குறைந்த பட்சமாக்குவதற்கு உதவுவதற்காக தட்டச்சு செய்யும் போது தலையணை ஒன்றின் மீது உங்கள் முழங்கைகளை வையுங்கள்
• பிரகாசமான சூரிய ஒளியில் நடமாடும் கருவியைப் பயன்படுத்துவதைத் தவிர்த்துக் கொள்ளுங்கள். உங்கள் நடமாடும் கருவி யின் பயன்பாட்டினை மட்டுப்படுத்துவதே கழுத்துப்பிடிப்பினைத் தவிர்ப்பதற்கான சிறந்த வழியாகும். ஒரு நீண்ட ஈமெயிலை அனுப்புவது உங்களுக்கு அவசியமென்றால், கணிணியொன்றுக்கான அடைதலைக் கொண்டிருக்கும் வரை காத்திருங்கள் அல்லது குறுந்தகவலை அனுப்புவதை விட குறிப்பிட்ட நபரை அழைப்பதையிட்டு கரிசனைக்கெடுங்கள்.



அடிக்கடி குறுந்தகவல் அனுப்புபவர்கள் அவயவங்களை நீட்டுதல்
• கையை நீட்டுங்கள். கைமுட்டியொன்றில் உங்கள் கைகளுடன் ஆரம்பிப்பதுடன், உங்கள் கைகள் செல்லும் பரந்தளவுக்கு உங்கள் விரல்களை நீட்டுங்கள். பின் முதலில் இருந்த நிலைக்கு கொண்டு வாருங்கள். ஒவ்வொரு கைக்கும் சுமார் 10 நீட்டல்களைச் செய்யுங்கள். மேலும், தாக்குப்பிடித்தலுக்கு உங்கள் கைவிரல்களைச் சுற்றி இறப்பர் வார் ஒன்றை உங்களால் நீட்ட முடியும்.

• நெகிழ்வுத்தன்மையிலான் பந்தொன்றை அழுத்துங்கள். இதை ஒவ்வொரு கைக்கும் அண்ணளவாக 30 வினாடிகளுக்குச் செய்யுங்கள்.
• நெஞ்சை நீட்டுதல். குறுந்தகவலை அனுப்பும் போது உடலின் கூனல் தோற்றத்திற்கு எதிராகச் செயற்படுவதற்காக, உங்கள் பக்கங்களில் உங்கள் கைகளை வைத்தபடி நேராக நில்லுங்கள். உங்களுக் குப் பின்புறமாகவுள்ள சுவரை உங்கள் பெருவிரல்கள் சுட்டிக்காட்டும் விதம் வரை உங்கள் முன்னங்கைகளைத் திருப்புங்கள்.




நகைச்சுவைத் தொடர் 370

# ராசம்மா ராச்சியம்

கலகலப்பு நீசன்



சினிமா நடிகர் (பாஸ் என்கிற பாஸ்கரன்) ஆரியாவின் எங்க வீட்டு மாப்பிள்ளை நிகழ்ச்சி கண்டி சிங்கள முஸ்லிம் கலவரத்தை விட சூடு பிடித்துக் கொண்டிருக்கிறது.



மார்ச் பிறேக் செக்கண்ட்புளோர் செல்லம்மா தங்கியிருக்கும் தம்பியாரின் வீட்டில் மார்ச் பிறேக் அமளிதுமளிதான். அனிருத்தின் குத்துப்பாடலுக்குத்தான் முதலிடம்.




உலகர் வீட்டில் ரூபியுடன் சேர்ந்து திரும்பத்திரும்ப எங்கவீட்டு மாப்பிளை பார்க்கலாம். உலகர் வீடு அமளி துமளிப் பட்டது முதிய வர்கள் பலர் கதைப்பதற்கே ஆக்களில்லாமல் மன அழுத்தம், ஞாபகமறதி, அந்த இந்த வருத்தமென செய்வதறியாது பலர் தவிக்கின்றனர். ஆனால் உலகர் குழாம் கவலைகளை மறந்து கலகலப்பாக இருப்பது ஒரு வகையில் சந்தோசம்தான்.




அந்தக் கேரளா கேள் கட்டினசாறி எப்பிடி?....
எனத்தொடக்கினா ஐபொட் அகிலாண்டேஸ்வரி.



என்னை பொம்பிளை பாக்க வரேக்குள்ளை பெண் சரியான மெல்லிசு. கமலகாசன் மாதிரி. பொன் என்றால் பொன்னம்பலம்



கோவில் திருவிழாவிலை தீவட்டி வெளிச்சத்திலை சாதுவா பார்த்தனான். அவர் என்னை மேடைக்கு கிட்ட ரியூப்லைற் வெளிச்சத்திலை..பாத்திட்டு என்னை சரோசா தேவி மாதிரி எண்டு என்ரை சின்னம்மாவிட்டை சொல்லியிருக்கிறார்.



என்ரை சின்னம்மா தியாகராஜபாகவதரின்ரை படங்கள் வராம விட்டபிறகு படம் பாக்கிறேல்லை என்று சொல்லி சிரிச்சா அவவுக்கு சரோஜா தேவியை தெரியாது. செக்கண்ட் புளோர் செல்லம்மாவிற்கும் ஆட்டிடலிறி அன்னம்மாவிற்கும் ஆத்திரம் அடக்க முடியவில்லை. இந்த நிகழ்ச்சியை உலகரும் இடைக்கிடை பார்த்திருக்கிறார்.




ஆரியாவை திருமணம் செய்வதானால் நான் சமயம் மாறத் தயார் என ஒரு சிலரும்...எந்தச்சந்தர்ப்பத்திலும் மதம் மாறமாட்டோம் எனச்சிலரும் கூறியது உலகருக்கு சிரிப்பையும் கவலையையும் தந்தது.

தாயில்லாமல் நானில்லை என்பது போல
சாட்டில்லாமல் சாவில்லை என்பார்கள்.
காரணம் காரியம்.




எதற்கும் ஓர் ஆரம்பம் - முடிவு.....இருக்கும். ஆனால் இலங்கையைப் பொறுத்தமட்டில் ஒரு கலவரம் ஆரம்பித்து....முடியப்போகும் நிலையில்தான் தெரியும் இனக்கலவரமா மதக்கலவரமா? என்று.



கடைகளும் வீடுகளும் பொலிஸ் பாதுகாப்புடன் எரித்தபின் எரித்து முடித்தபின் பொலிசார் காவல் காக்கின்றனர்.
(1933இல் கட்டப்பட்டு 1983இல் 97,000 நூல்களைக் கொண்ட யாழ். பொது நூலகம் எரித்தது போல) சாதுக்களும் இதற்கு சாதகமாக இருந்துள்ளனர். (சாது - புத்தபிக்குகள்) சாது மிரண்டால்?

ஞாபகம் இருக்கிறதா? மார்ச் 15..31...

19. பங்குனித்திங்கள்.




20. வசந்தகாலம் ஆரம்பம்.



21. உலக கவிதை நாள்.



22. காதல் மன்னன் ஜெமினி கணேசன் நினைவு நாள் (1920..2005)




22. உலக நீர் நாள்.




23. 1752இல் கனடாவின் முதலாவது பத்திரிகை கலிபாக்ஸ் கசெட் பத்திரிகை வெளியிடப்பட்டது.



23. யாழ். சித்தர் யோகசுவாமிகள் நினைவு தினம் (1872-1964)
"எப்பவோ முடிந்த காரியம். நாம் அறியோம். ஒரு பொல்லாப்பும் இல்லை. முழுதும் உண்மை."
(என்னை யெனக்கறிவித்தான் எங்கள் குருநாதன்)



24. டாக்டர் சீர்காழி கோவிந்தராஜன் நினைவு தினம்.
(ஆடி அடங்கும் வாழ்க்கையடா..)



24. பிரபல பின்னணி பாடகர் ரி.எம். சௌந்தரராஜன் பிறந்த தினம். (1923-2013) (என்னைப் பாட வைத்தவன் ஒருவன். என் பாட்டுக்கு அவன்தான் தலைவன்)





30. பெரிய வெள்ளி



30. வில்லிசைக் கலாஞான யோதி வில்லிசை மாமணி யாழ். பருத்தித்துறை சின்னமணி அவர்கள் பிறந்ததினம். (1936-2015)


30. பங்குனி உத்தரம்.



31. தந்தை செல்வா பிறந்த தினம். 1898



31. சேர். ஐசாக் நியூட்டன் நினைவுதினம்.
(வீழ்ந்த அப்பிளில் விடாமுயற்சி, ஆராய்ச்சி)








TUTORING

By Qualified & Experienced Tutors

- CHEMISTRY, PHYSICS, BIOLOGY
- FUNCTIONS, ADV. FUNCTIONS
- CALCULUS & VECTORS, DATA MGT
- SCIENCE, MATH, ENGLISH

GR 9-12, UNIV. 1st & 2nd Yr; "Affordable Fees"

Call: 647 341 3975 / 647 869 3974 / 416 335 5956
www.keentutoringcentre.com

[illegible]

- High School ACADEMIC/UNIVERSITY
- IB &AP PROGRAMME
- MCAT Classes
- EQAO GR 3 & 6

# உறவுகள் மேம்பட

## படித்ததில் பிடித்தது

நீங்கள் வாசித்து மகிழ்ந்ததை மற்றவர்களும் வாசிக்கட்டுமே.

அனுப்புங்கள் Vlambaram@sympatio.ca

யாம் பெற்ற இன்பம் மற்றவர்களும் பெறட்டுமே!

**- வே. செல்வநாயகம் -**

* குடும்பத்திலும் சரி அலுவலகத்திலும் சரி மனித உறவுகளின் விரிசல்கள் ஏற்படாமல் இருக்கவும், ஏற்பட்ட விரிசல்கள் மேலும் பெரிதாகமல் இருக்க நானே பெரியவன், நானே சிறந்தவன் என்ற அகந்தையை விடுங்கள்.

* அர்த்தம் இல்லாமலும், பின்விளைவு அறியாமலும் பேசிக் கொண்டிருப்பதை விட்டுவிடுங்கள்.

* எந்த விஷயத்தையும் பிரச்சனையையும் நாசுக்காக கையாளுங்கள், விட்டுக் கொடுங்கள்.

* சில நேரங்களில் சில சங்கடங்களை தவிர்த்துதான் ஆக வேண்டும் என்று உணருங்கள்.

* நீங்கள் சொன்னதே சரி, செய்ததே சரி என்று வாதாடாதீர்கள், குறுகிய மனப் பான்மையை விட்டொழியுங்கள்.

* உண்மை எது, பொய் எது என்று விசாரிக்காமல் இங்கே கேட்டதை அங்கே சொல்வதையும், அங்கே கேட்டதை இங்கே சொல்வதையும் விடுங்கள்.

* மற்றவர்களைவிட உங்களையே எப் போதும் உயர்த்தி நினைத்து கர்வப்படா தீர்கள்.

* அளவுக்கு அதிகமாய், தேவைக்கு அதிகமாய் ஆசைப்படாதீர்கள்.

* எல்லோரிடத்திலும் எல்லா விஷயங்களை யும், அவர்களுக்கு சம்பந்தம் உண்டோ, இல்லையோ சொல்லிக்கொண்டிருக்காதீர்கள்.

* கேள்விப்படுகிற எல்லா விஷயங்களையும் நம்பி விடாதீர்கள்.

* அற்ப விஷயங்களைப் பெரிது படுத்தாதீர்கள்.

* உங்கள் கருத்துக்களில் உடும்புப் பிடியாய் இல்லாமல் கொஞ்சம் தளர்த்திக் கொள்ளுங்கள்.

* மற்றவர் கருத்துக்களை, செயல்களை, நடக்கின்ற நிகழ்சிகளைத் தவறாக புரிந்து கொள்ளாதீர்கள்.

* மற்றவர்களுக்குரிய மரியாதை காட்டவும், இனிய இதமான சொற்களைப் பயன்படுத் தவும் தவறாதீர்கள்.

* புன்முறுவல் காட்டவும், சிற்சில அன்புச் சொற்களை சொல்லவும் கூட நேரமில்லாதது போல் நடந்து கொள்ளாதீர்கள்.

* பேச்சிலும் நடத்தையிலும் பண்பில்லாத வார்த்தைகளையும் தேவையில்லாத மிடுக் கையும் காட்டுவதைத் தவிர்த்து அடக்கத் தையும் பண்பையும் காட்டுங்கள்.

* அவ்வப்போது நேரில் சந்தித்து மனம் திறந்து பேசுங்கள்.




* பிரச்சனைகள் ஏற்படும்போது அடுத்தவர் முதலில் இறங்கி வர வேண்டும் என்று காத்திருக்காமல் நீங்களே பேச்சைத்துவக்க முன் வாருங்கள்.

- தத்துவஞானி வேதாத்திரி மகரிஷி-




## விடிவிளக்காய் இருக்குதன்றோ!




கண்ணபிரான் யேசுபிரான்
கஷ்டமதில் அவதரித்தார்
எண்ணரிய சிந்தனைகள்
எமக்களித்து நின்றார்கள்
மண்ணுலகில் உள்ளவர்கள்
மனந்திருந்த வேண்டுமென்று
உண்மைநிறை சேதிகளை
உவந்தளிந்து நின்றாரே!

ஆடுமாடு கொட்டிலவர்
அண்டிநின்ற இடமாகும்
அன்னையது நிழலிருந்து
அனைத்துமவர் ஆற்றினரே
அன்புநிறை உள்ளமொடு
அவர்தொண்டு அமைந்ததுவே
அண்டிவந்தோர் அனைவருக்கும்
அடைக்கலமும் ஆகினரே!

உலகுய்ய வந்தஅந்த
உத்தமரை மனங்கொண்டு
உலகத்தார் உன்மத்தம்
உடைந்துவிடல் வேண்டாமோ
மலம்நிறைய மனங்களிலே
வைத்திருக்கும் மாந்தரெலாம்
புலன்சிறந்து விளங்குதற்குப்
புனிதரெமக் குதவிடுவார்!


நாத்திகம் பேசிநின்ற
நம்கவிஞர் கண்ணதாசன்
ஆத்திக வழிசெல்ல
அவர்துணையாய் அமைந்தாரே
கீதைக்கு உரைசெய்த
கீர்த்தியுடை கண்ணதாசன்
யேசுபிரான் காவியத்தை
நேயமுடன் அளித்துநின்றார்

மதமென்னும் வெறிவந்தால்
மனமெல்லாம் மாசாகும்
விதம்விதமாய் கற்பனைகள்
விளைத்துவிடும் விவரீதம்
வதம்செய்யும் அரக்ககுணம்
மனதைவிட்டு மறைந்துவிட
வையமதில் உதித்தவரே
மாண்புநிறை மாபுருஷர்!

மதவெறியை ஊட்டுவதை
வையகத்தில் ஒழித்திடுவோம்
விதம்விதமாய் நற்பணிகள்
விரும்பிநின்று செய்துதிடுவோம்
உளம்முழுக்க சமதர்மம்
ஓங்கிவிடச் செய்துநிற்போம்
ஒற்றுமையே உயர்வுதரும்
எனவுரத்துச் சொல்லிடுவோம்!

கீதைபைபிள் இரண்டிலுமே
நல்பாதைபற்றி அறிந்திடலாம்
போதைகொண்டு பார்ப்பதைநாம்
புறந்தள்ளி விட்டிடலாம்
சோதனைகள் விளைவாக
வந்தஇந்த கீதைபைபிள்
வேதனைகள் போவதற்கு
விடிவிளக்காய் இருக்குதன்றோ!

மதநூல்கள் என்றுநாம்
மறுபெயரை வைக்காமல்
வாழ்வுக்கு உகந்ததென
மனங்களிலே வைத்திடுவோம்
உதவாத குணத்தையெலாம்
உடைத்தெறிய வந்ததனால்
உயர்நிலையில் நிற்கின்றார்
எனவுணர்ந்து போற்றிடுவோம்!



எம். ஜெயராமசர்மா
மெல்பேண் அவுஸ்திரேலியா

## தமிழன் வழிகாட்டி - 2018



2018ஆம் ஆண்டு தமிழன் வழிகாட்டியினை நீதிபதி திருமதி. தெய்வா மோகன் அவர்கள் வெளியிட்டு வைத்தார். கனடிய வர்த்தகர்களின் அகராதியாகவும், கனடிய தமிழர்களின் ஆவணப்பதிவாகவும் புலம்பெயர்ந்த மண்ணில் தமிழர்களின் இல்லங்களில் என்றும் தனக்கென தனியிடம் வகிக்கும் செந்தியின் தமிழன் வழிகாட்டியின் 2018ஆம் ஆண்டின் முதல் பிரதியை கனடாவின் மூத்த சட்டத்தரணியும், முதல் ஈழத் தமிழ் பெண் சட்டத்தரணியுமான, ஒன்ராரியோ மாநிலத்தின் நீதிபதிகளில் ஒருவருமான திருமதி தெய்வா மோகன் அவர்கள் தமிழன் வழிகாட்டியின் அதிபர் திரு. செந்தி செல்லையா அவர்களிடம் பெற்றுக்கொண்டார்.

தமிழன் வழிகாட்டி அதிபர் திரு. செந்தி செல்லையா அவர்கள் வர்த்தக நெஞ்சங்கள், ஊடக நண்பர்கள், பொதுமக்கள் மற்றும் நண்பர்கள் அனைவருக்கும் நன்றியை தெரிவித்தார்.


விசேட சலுகை விலையில்
UNLIMITED
INTERNET
TV - HOME PHONE
SAVE UP TO $1350
SMART
HOME
MONITORING
தமிழில் உரையாட அழையுங்கள்
சுந்தர் சின்னத்தம்பி
Rogers Local Area Advisor
416.908.6845
puvanendran.sinnatha@rci.rogers.com
ROGERS™


கொக்குவில் இந்துக்கல்லூரி பழைய மாணவர் சங்கம் - கனடா
KOKUVIL HINDU COLLEGE OLD STUDENTS' ASSOCIATION - CANADA
பெருமையுடன் வழங்கும் 24ஆவது வருடாந்த கலை நிகழ்ச்சி
ESTD 1994
MARCH 31st
2018 - 5:00 PM
சனிக்கிழமை - SATURDAY
Winston Churchill Collegiate
2239 Lawrence Ave E,
Scarborough, ON M1P 2P7
(Kennedy & Lawrence)
மகுடம் 2018
Mahudam
எமது கலைஞர்கள் வழங்கும்
நாட்டிய நிகழ்ச்சிகள்
ரொறன்ரோ கலாபவன அதிபர்
ஸ்ரீமதி. குமுதினி சிறீகாந்தனின் மாணவிகள்
சிறீ அபிராமி நாட்டியாலய அதிபர்
ஸ்ரீமதி. செந்தில்செல்வி சுரேஸ்வரனின் மாணவிகள்
அபிநயாலய நாட்டியாலய அதிபர்
ஸ்ரீமதி. ரஜனி சக்திரூபனின் மாணவிகள்
சதங்கை நர்த்தனாலய & தெய்வி சாயி
நடனாலய மாணவிகள்
நமது கலைஞர்கள் பங்குகொள்ளும்
agni வழங்கும்
இன்னிசை நிகழ்ச்சி
"வாத்திய விருந்து"
பிருந்தா கானாலயா இசைக்கல்லூரி அதிபர்
ஸ்ரீமதி. ஹம்சத்வனி சிங்கராஜாவின் மாணவர்கள்
எம் கலைஞர்களை நாமே நட்சத்திரங்களாக்குவோம்!
REGULAR $15
KIDS $10
தொடர்புகளுக்கு: 416-616-4386 / 416-301-1733 / 416-318-6195
www.khcosa.ca

# FOR ALL YOUR MORTGAGE NEEDS

Access over 30 lenders with one application

**Refinance** **Purchase** **Renewal**

*Dedicated and knowledgable team...*
*Provide you with the best solutions for*
*1st and 2nd Mortgage...*
*Our commitment to you is to provide with the very best...*

1st Mortgage starting 6.50%* for Private
2nd Mortgage starting 9.99%* for Private
Approval funded within 48 hours*








**Pradeepraj Mani**
Mortgage Agent
LIC# M14001956
**416.997.3862**
np_57@hotmail.com

*Some conditions apply

MORTGAGE ALLIANCE

**Gaya Kathir**
Mortgage Agent
LIC# M13001852 FSCO #10530
**416.806.2274**
gayamortgage@hotmail.com
www.mortgageagencytoronto.ca

